வளர் தமிழ்



தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

வளர் தமிழ்

12

புலம்பெயர் தமிழ் மாணவர் கற்கை நூல்

நூலாக்கம் : புலவர், முனைவர். நா.சி.கமலநாதன்
மல்லிசுவரி ஆதவன் (BA)

நூல் வடிவமைப்பு : கௌரிசங்கர்

செய்திட்ட நிறைவேற்றுநர் : நகுலேசுவரி அரியரத்தினம்

பதிப்புரிமை : தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

published by
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
1st Published 2013

Printed in France

முன்னுரை

புலம் பெயர்ந்து வாழும் எம் தமிழ்ப் பெருங்குடியின் நிகரிலா அன்புச் செல்வங்களே!

நீங்கள் மாணவராய், பெற்றோராய், ஆசிரியர்களாய் இன்னும் பல்வேறு வழிகளிலே தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினுடன் தொடர்பு உடையவர்களாக உள்ளீர்கள்.

உங்களுடன் தாய்மொழிக் கல்வித் தொடர்பில் பேசுவதில் தமிழர் கல்விமேம்பாட்டுப் பேரவை பெருமை கொள்கிறது. புலம்பெயர்ந்து வாழும் நீங்கள் கடல் கடந்தாலும் உங்களது பண்பாட்டுக் கோலங்களையும் இனப்பற்றையும் மொழிப்பற்றையும் கடந்து விடாது போற்றுகின்ற உங்களது பற்றைக்கண்டு, உங்களது இனமொழி நாட்டங்களைச் செழுமையுறச் செய்வதற்காக எம்மால் முடிந்தவரை உருவாக்கப்பட்டதே இந்நூற்றொடராகும்.

இந்நூல்களிலே எமது எதிர்கால ஆக்கர்களாகிய இளஞ்சிறார்கள் எத்தகைய அறிவைத் தமது மொழிக்கற்கையூடாகப் பெறவேண்டும், எவ்வாறு அவர்களை நற்றமிழர்களாக இனவெல்லைக்குள் கொண்டு வரக்கூடிய அறிவைப் பெருக்க வேண்டும் என்று எண்ணித் துணிந்த பாடங்களையே அலகுகளாகக் கொண்டு **வளர் தமிழ் 12** வெளிவருகிறது.

ஒருவர் தனது தாய்மொழியை அதற்குரிய விழுமியங்களூடாகவே கற்க வேண்டும், அப்போதுதான் கற்பவரின் மனதில் தாய்மொழி உணர்வு வலுப்பெறும். தன்மொழியில் விரவியுள்ள பிறமொழிச் சொற்களுடன் கற்பது, தாய்மொழி வழங்கும் இறைமையுணர்வு அகத்தைச் சென்றடையாது தடுக்கும் தீங்கை விளைக்கும்.

எனவே நாம் அறிந்தவரையிலும், அறிஞர்களின் மதியுரைகளூடாக எம்மால் இயன்றவரை இனிய செந்தமிழில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது என்றே நம்புகின்றோம். தமிழ்ச் செல்வங்கள் இந்நூலைக் கருத்தூன்றிக் கற்றுத் தேறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நகுலேசுவரி அரியரத்தினம்

மேலாளர்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

உள்நிரல்

தமிழர் வீரம்

தமிழர் மானத்தையே தம் உயிரினும் மேலாகப் போற்றினர். அதனால், அம்மானத்தைக் காக்க வீரத்தைத் தம் வாழ்க்கையாகக் கொண்டனர். வீரமே வாழ்வு எனப் போற்றித் தம் உயிரை வீரத்திற்காகக் கொடுக்கப் பின்நின்றிலர். அப்பெரு வீரம் கரணியமாக, அன்று குமரிக்கண்டத்திற்கும் வெளியே சின்னாசியா வரை அவரது ஆட்சி பரந்திருந்தது. **'வன்சொல் யவனர் வளநாடு ஆண்ட'** என்ற சிலப்பதிகாரக் கூற்றினால் இதை அறியமுடிகிறது. அதே சிலம்பு **'பதிஎழு அறியாப் பழங்குடி'** (புலம்பெயராத) என்று தமிழ்க்குடியைப் போற்றுவதால், யாராலும் வெற்றிகொள்ள முடியாத நாடாகத் தி.மு களில் தமிழகம் இருந்தது என்பதும் தெரிகிறது. கடைக்கழகக் காலத்திலிருந்து சிறிதுசிறிதாக ஆரியம் தமிழரிடையே ஊடுருவி சூழ்ச்சிகளால் உறவின் முறையரான மூவேந்தரது ஒற்றுமையைச் சிதைத்தது. அதன் பின்னரே தமிழினம் வீழத்தொடங்கியது. எனினும், இன்றுவரையும் இவ்வினத்தினுடைய வீரப்பண்பு தாழ்ந்துவிடாமல் உயிரோட்டமாய் உள்ளது.

புறநானூறு என்னும் கடைக்கழக இலக்கியம் பற்றி நீங்கள் அனைவரும் அறிந்திருக்கின்றீர்கள். கழகக்காலத் தமிழர் தங்கள் இலக்கியங்களை அகம் புறம் என்று இருவகைப்படுத்தினர். புறத்துறையிலே வீரத்திற்கு என்று தனி இலக்கியங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக **'கலிங்கத்துப்பரணி'** என்ற இலக்கியத்தை எடுத்துக்கொண்டால், அது சோழமன்னன் ஒருவன் கலிங்கநாட்டை வெற்றி கொண்ட போரைப் பற்றிக் கூறுவது. ஆனால், புறநானூறு பொதுவாகத் தமிழரது வீரத்தைக் கூறுவது. புறநானூற்றுப் பாடல்கள் மூவேந்தரை மட்டுமன்றி வேறு குறுநில மன்னரது வீரத்தையும் பாடுகிறது. எனவே, புறநானூறு வேறுபல புறத்துறைகள் பற்றிக் கூறினாலும் பழந்தமிழர் வீரம் பற்றி முழுமையாகக் கூறும் நூல் என்று கொள்ளலாம்.

சான்றாண்மை வீரம்

பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

என்று வள்ளுவர் வகுத்த வீர இலக்கணத்திற்கு அமையவே தமிழர் வீரம் திகழ்ந்ததை நாம் புறநானூற்றில் காணலாம். போரிடும்போது பகைவனை வென்றாக வேண்டும். அதற்காக அவனைப் போரில் கொல்லலாம். ஆனால், போரிடும்போது பகைவனுக்கு ஒரு திடுநேர்கை ஏற்பட்டு அவன் போரிடும் ஆற்றலை இழப்பின், தமிழர் அவனைப் பகைவன்தானே என்று வெட்டிக் கொல்லமாட்டார்கள். மாறாக, உடனே விரைந்து அத்திடுநேர்கையிலிருந்து அவனைக் காப்பாற்றுவர். பேரறம் கொண்ட போரறம் இது. இது தமிழினத்திற்கே சொந்தமான சான்றாண்மை கொண்ட பேராண்மை.

அண்மையிற் கூட வன்னி மண்ணிலே போரின் கடைசி நாட்களில் போராளிகள் இனித் தமக்கு வீரச்சாவு தான் என்ற நிலையிலும் தாம் சிறைப்பிடித்து வைத்திருந்த எதிரிப் படைவீரரை விடுவித்து அவர்களை வாழவைத்தனர். ஆனால், அச்செயல் முடிந்த மறுநாளே தீதறியா வன்னி மக்கள் பல்லாயிரவரை எதிரிகள் கொன்று குவித்தனர். இது நாங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிந்த செய்தி. இதிலிருந்து பழந்தமிழரிடம் மட்டுமல்ல இந்நாளிலும் தமிழரது வீரம் சான்றாண்மை - மாந்தநேயம் கொண்டதாய் அமைந்திருப்பதை நாம் காண்கிறோம்.

அவ்வகையில், ஒரு புறநானூற்றுப் பாடலைக் காண்போம்.

பாடியவர் - புலவர் நெட்டிமையார்.

பாடப்பட்டோன் - முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன்.

புறம் 9

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் ஆண்மகர் பெறாஅதீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின் என

அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்
கொல்களிற்று மீமிசை கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி! தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈந்து
முந்நீர் விழவின் நெடியோன்
நன்ர்ரப் பஃறுளி மணலிலும் பலவே

பாடற் சொற்பொருள்

ஆனியல் - ஆவினது தன்மை. பார்ப்பன மாக்கள் - அந்தணர். தென்புலம் வாழ்நர் - இறந்தோர். கடி - கடுமை. அறத்தாறு - அறவழி. நுவலும் - சொல்லும். பூட்கை - கொள்கை. களிறு - ஆண்யானை. மீமிசை - மேலே உயரத்தில். விசும்பு - வானம். நிழற்றும் - நிழலாடும். கோ - மன்னன். செந்நீர் - சிறந்த தன்மையுள்ள. வயிரியர் - கூத்தர். முந்நீர்விழவு - கடலாடுவிழா.

பொருள்

ஆவினத்தையும் ஆவினம் போன்ற நல்லியல்புடைய பார்ப்பனராகிய அந்தணர்களையும் பெண்டிரையும் நோயாளர்களையும் காத்துக்கொண்டு, தென்புலத்தாருக்கு உரிய கடமைகளைச் செய்வதற்கு ஆண்மகவை இன்னும் பெறாத இணையர்களும் அரணான இடத்திற்குச் சென்று சேர்க. நாங்கள் கடுமையாக அம்பு எய்வோம் என்று அறந்தவறாது அறிவிக்கிற கொள்கை வீரம். உன்னுடைய கொல்லும் களிற்றின் மீது தாங்கி வருகிற கொடி உயர்ந்து வானிலே நிழலாடும். மன்னவா குடுமி நீ வாழ்க! சிறந்த பசும்பொன்னைக் கூத்தருக்கு வழங்கிக் கடலாடுவிழா எடுத்த உனது முன்னோனான நெடியோனது நன்ர்ர் பஃறுளி ஆற்று மணலிலும் அதிக ஆண்டுகள் வாழ்க.

தனக்கு நிகரான ஆற்றலுடையோரை எதிர்த்துப் போரிடுவதே வீரமும் நல்லியல்புமாகும். எனவே, போரிடும் ஆற்றலற்றோர், போரின்போது துன்புறக்கூடாது. முதுகுடுமிப் பெருவழுதி என்ற மன்னன், தான் போரிடப் போகும் நகரின்கண் உள்ள நல்லோரையும் வன்மையற்றோரையும் போரோடு தொடர்பில்லாத தீதறியா மக்களையும் அரணான இடங்களுக்குச் சென்று சேருங்கள் என்று எச்சரிக்கிறான்.

இவ்வாறாகப் பகை நாட்டவராயினும் நாட்டின் பொதுமக்களைக் காக்கும் அறந்தவறாத பெருவீரம் தமிழருடையது.

மானவீரம்

வீரத்தின் உயிர்நிலை மானமாகும். எனவே வீரம் விளைவதே மானத்தினால் தான். அத்தகைய மான வீரத்திற்கு இலக்கணம் கூறப்புகுந்த வள்ளுவர்,

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். - என்றார்.

இந்த இலக்கணத்திற்கு அமையவே வீரம் விளைத்தனர் தமிழர்: போரில் புறப்புண் பட்டால் அதையொரு மானக்கேடாக எண்ணுவர்: அதைத் துடைக்கத் தமது உயிரையே விடுவர். அப்படிப் புறப்புண்பட்ட ஒருவன் தன்னுயிரைப் போக்கியபோது, அவனது நாட்டு மக்களது நிலையையும் அவனது வீரத்தையும் புறநானூறு சொல்லும் ஒரு பாடல்.

பாடியவர் - கழாஅத் தலையார்.
பாடப்பட்டோன் - சேரமான் பெருஞ்சேரலாதன்.

புறம் 65

மண் முழா மறப்ப பண் யாழ் மறப்ப
இருங் கண் குழிசி கவிழ்ந்து இழுது மறப்ப
சுரும்பு ஆர் தேறல் சுற்றம் மறப்ப
உழவர் ஓதை மறப்ப விழவும்
அகலுள் ஆங்கண் சீறூர் மறப்ப

உவவுத் தலைவந்த பெருநாள் அமையத்து
இருசுடர் தம்முள் நோக்கி ஒருசுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்குத்
தன்போல் வேந்தன் முன்புகுறித்து எறிந்த
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்

வாள் வடக்கு இருந்தனன் ஈங்கு
நாள்போற் கழிய ஞாயிற்றுப் பகலே

பாடற் சொற்பொருள்

மண் - முழவின் கண். இரும் - பெரிய. குழிசி - பானை. இழுது - நெய். சுரும்பு - வண்டு. தேறல் - மது, கள். ஓதை - ஆரவாரம். அகலுள் - அகன்றதெருக்கள். உவவு - நிறைமதி. அமையம் - பொழுது. புன்கண் - துன்பம். மறத்தகை - வீரத்தகைமையுடைய.

பொருள்

முழவுக்கண் முழங்க மறந்தது: இசையை யாழ் மறந்தது: பெரிய இடமுடைய பானை கவிழ்ந்து நெய்யை மறந்து கிடந்தது: வண்டுகள் மொய்க்கின்ற மதுவைச் சுற்றத்தார் மறந்தனர்: உழவருடைய ஆரவாரமும் அடங்கிக் கிடந்தது: விழாக்களை அகன்றமைந்த தெருக்களை உடைய அந்தச் சிறந்த ஊர் மறந்தது.

நிறைமதி வந்த ஒளி பெருகிய நாளின் அமையத்திலே, கதிரவனும் திங்களும் ஆகிய இருசுடர்களும் ஒன்றையொன்று எதிர்த்துத் தோன்றின. கதிரவன் எனும் சுடர் மாலைப்பொழுதிலே மலையில் மறைந்தது போல், தன்னையொத்த ஒரு வேந்தன் முன்பு நோக்கி எறிந்த ஆயுதத்தால் ஏற்பட்ட புறப்புண்ணுக்கு நாணமுற்று வீரம்பொருந்திய மன்னன் வாளுடன் வடக்கிருந்தனன். இங்கே கதிரவன் மறைந்ததுபோல் நீ மறைந்தால் பகற்பொழுது கழிய வந்த இரவு போலாகி விடுமே!

உவவுத் தலைவந்த பெருநாள் அமையத்து
இரு சுடர்: தம்முள் நோக்கி ஒருசுடர்
------------------------------------ மறைந்தாங்கு

முழுமதி நாளில் அன்று கிழக்கிலே காலிக்கும் மதியும் மேற்கிலே சாயும் கதிரவனும் ஒன்றையொன்று எதிரெதிர் கண்டன. ஒருசுடராகிய கதிரவன் தோற்றான் போல் மலையுள் மறைந்தான். அதுபோல் சோழனிடம் சேரன் தோற்றான். இருவரும் ஒருவருக்கொருவர் குறைந்தவர் அல்லர் என்று மதியையும் கதிரவனையும் ஒப்பிட்ட புலவரின் இனிய கற்பனை வியக்கத் தக்கது.

வெண்ணிப்பறந்தலை என்னும் இடத்தில் கரிகாற்பெருவளத்தான் என்னும் சோழ மன்னனுக்கும் பெருஞ்சேரலாதன் என்னும் சேரமன்னனுக்கும் போர் நிகழ்ந்தது. இருவரும் பேரரசர்கள் பெரும் வீரர்கள். சன்றாண்மை நிறைந்த போரறம் காக்கும் மன்னர்கள். புறமுதுகு காட்டினால் தாக்கமாட்டார்கள். போரின்போது சோழன் முன்புறம் எய்த அம்பு தவறுதலாகச் சேரனது முதுகுப் புறத்திலே தைத்தது. முதுகிலே புண்பட்டது தனக்கு மானக்கேடு என நாணமுற்ற சேரலாதன் வாளுடன் வடக்கிருந்து உயிர்நீத்தான். இவனது வடக்கிருத்தல் கேட்டு மக்கள் கையறு நிலையுற்றதால் நாட்டில் எதுவுமே நடைபெறவில்லை.

இளமைவீரம்

அஞ்சாமையும் மதிநுட்பமும் இணைந்து தமிழர் வீரம் வளர்ந்ததால், இளமையிலும் அச்சம் என்பதே அறியாது ஒருபெரும் போரை வெற்றிகொண்டான் ஓரிளம் மன்னன். அத்தகைய ஒருவனைப்பற்றி ஒரு புறநானூற்றுப் பாடல் கூறுவதைப் பார்ப்போம்.

பாடியவர் - இடைக்குன்றூர் கிழார்.
பாடப்பட்டோன் - தலையலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

புறம் 77

கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞை மலரொடு மிலைந்து
குறுந்தொடி களைந்தகை சரபம் ஏந்தி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்

யார்கொல்? வாழ்க அவன் கண்ணி! தார்பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே பால்விட்டு
அயினியும் இன்று அயின்றனனே வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மன்னரை

வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே அவரை
அழுங்கப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழக்
கவிழ்ந்து நிலம்சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் இகழ்ந்தன்றும் அதனிலும் இலனே

பாடற் சொற்பொருள்

கிண்கிணி - காற்சலங்கை. ஒண்கழல் - ஒளிரும்கழல். கழல் - ஆண்களின் காற்சிலம்பு. குடுமி - மயிர். நுதல் - நெற்றி. உழிஞை - ஒருவகை மலர். மிலைந்து - கலந்து. குறுந்தொடி - சிறுவளையல். சரபம்(வட) - வில். கொடிஞ்சி - முகைப்பு, தேர்த்தட்டு. கண்ணி - தலைமாலை. தார் - மாலை. தாலி - ஐம்படைத்தாலி. அயினி - உணவு. அயின்றனன் - உண்டனன். வயின் - மேலும். உடன்று - வெகுண்டு. வம்பமன்னர் - தீயமன்னர். அகல்விசும்பு - அகன்ற வானம். அட்டதை - கொன்றதை.

பொருள்

காற்சலங்கை கழற்றிய கால்: அதில் வீரக்கழல் அணிந்து, தலைமுடியை நீக்கிய நெற்றி. அதில் வேம்பின் தளிரை நெடுங்கொடி உழிஞையின் மலரொடு கலந்து கட்டிய கண்ணி: சிறு வளையல்களைக் கழற்றி வில் ஏந்திய கை: பெரிய தேரின் இருக்கை அழகுற நின்றான்: யாரோ இவன்? யாராயினும் வாழ்க அவனது தலைமாலை.

மாலை அணிந்தும் ஐம்படைத்தாலியும் கழற்றாமல் இருக்கிறான்: தாய்ப்பால் குடிப்பதை விட்டு இன்றுதான் உணவு உண்டனன் போலும் சிறுவனாய் இருக்கிறான்: மேலும்மேலும் வெகுண்டு போரிட்டுத் தன்மேல் எதிர்த்து வந்த தீயநோக்குடைய மன்னரைக் கண்டு வியப்படையவும் இல்லை: இகழவும் இல்லை. அவர்களை இறுகப் பற்றிப் பிடித்து, அகன்ற வான்வெளி எங்கும் பேராரவாரம் எழ, தலைகுப்புறக் கவிழ்ந்து நிலத்தில் விழக் கொன்றதை, பெருவெற்றி என்று மகிழவும் இல்லை. அதனையும் விட அவர்களை அவன் இகழவுமில்லை.

வெற்றிபெற்ற நெடுஞ்செழியன் தேர்த்தட்டில் நிற்கிறான். புலவர் அவனது தோற்றத்தை வியப்போடு பார்க்கிறார். கிண்கிணியைக் கழற்றிப்போட்டு கழல் அணிந்திருக்கிறான். நெற்றியில் புரண்ட மயிரை வெட்டிப்போட்டு உழிஞைப் பூக்கலந்த வேப்பமாலை சூடியிருக்கிறான். கையில் கிடந்த காப்பைக் கழற்றிவிட்டு வில் ஏந்தியுள்ளான். பால்மணம் மாறாத பாலன் போன்று இருக்கிறான். இன்றுதான் முதன்முதல் பால் குடிப்பதை விட்டு உணவு உண்டிருப்பானோ? கழுத்திலே மாலையொடு ஐம்படைத்தாலியும் இருக்கிறது. இந்தப் பொல்லாத மன்னரையெல்லாம் வென்று நிலத்தில் வீழ்த்திவிட்டு மகிழ்ச்சியோ இகழ்ச்சியோ எதுவுமின்றி தேர்த்தட்டு அழகுபெற நிற்கிறானே இவன் யாரோ?

தமிழகத்தை கடைக்கழக காலத்தில் மூவேந்தரும் ஐந்து வேளிர் குலக் குறுநில மன்னர்களும் ஆண்டு வந்தனர். பாண்டிய மன்னன் தன் மகன் உரிய பருவமடைய முன்னரே இறந்துபட்டான். தந்தை இறந்ததால், பால்குடி மாறாச் சிறுவன் போன்ற இளைஞன் நெடுஞ்செழியன் மன்னனாக முடிசூட்டினான். உரிய அகவை வருமுன்னரே முடிசூடி அரசனானான். பாண்டிய அரசைக் கைப்பற்ற விரும்பிய சோழரும் சேரரும் ஐந்து வேளிர்களுமாக ஒன்றுசேர்ந்து, ஏழு மன்னர்கள் இதுதான் அமையம் எனக்கருதி, சிறுவன் நெடுஞ்செழியனை எளிதில் வெல்லலாம் என்ற துணிச்சலில் படையெடுத்தனர். இதைச் செவியுற்ற நெடுஞ்செழியன் படைகொண்டு எதிர்சென்று தலையலங்கானல் என்ற இடத்திலே வழிமறித்துப் போரிட்டான். போரில் ஏழு மன்னரையும் அவர்களது படைகளையும் கொன்றழித்தான். அகவை முதிராத இளமையில் அவன் காட்டிய இந்தப் பெருவீரம் கரணியமாக 'தலையலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்' என வரலாற்றில் புகழ் பெற்றான்.

குறிப்பு

பார்ப்பார் :- இன்று இச்சொல் தமிழெதிரிகளான வடமொழிப் பிராமணரைச் சுட்டினும் முன்னாளில் தமிழ் அந்தணரையே குறித்தது.

முந்நீர் :- கடல், ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என மூவகை நீரைப் பெறுவதால் முந்நீர் எனப்பட்டது.

கடலாடுவிழா :- தி.மு எண்ணாயிரங்களில் வாழ்ந்ததாகக் கருதப்படும் நெடியோன் என்னும் பாண்டியன் கடலாடு விழாவை - இளவேனில் விழாவை இந்திரவிழாவாக மதிக்காக எடுத்தான். பின்னாளில் அது மாற்றப்பட்டு ஆரியப் புனைகதையின்படி இந்திரன் விழாவாகி இன்று முற்றிலும் நின்று போயிற்று.

வடக்கிருத்தல் :- மானத்தைக் காப்பதற்காக உயிரை விடும்பொருட்டு வடக்கு நோக்கி உண்ணாநோன்பிருந்து இறத்தல்.

ஐம்படைத்தாலி:- முன்னாளில் ஆண்குழந்தைகளுக்கு தாலி அணிவித்தனர். அதில் ஐந்து படைக்கருவிகளின் மாதிரிகள் கோக்கப்பட்டு இருக்கும். அவை தண்டு, வில், வாள், சங்கு, கடகம்.

வினாக்கள்

1. 'வன்சொல் யவனர் வளநாடு ஆண்ட' என்ற சிலப்பதிகார அடியால் நீர் விளங்கிக் கொள்வது.
2. எக்காலப் பகுதியிலிருந்து ஆரிய ஊடுருவல் தொடங்கியது?
3. தமிழும் தமிழினமும் தாழ்ந்து நிலைகுலைந்த நிலையிலும் தாழாது நின்ற தமிழர் பண்பு எது?
4. புறநானூறு தமிழினத்தின் பொதுவீரம் பற்றிக் கூறுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு.
5. தமிழினத்தின் சான்றாண்மை கொண்ட போர்முறைக்குச் சான்றாக அண்மைக்கால நிகழ்வு ஒன்று தருக.
6. கடலாடுவிழாவாக இளவேனில் விழாவை நெடியோன் யாருக்காகத் தொடங்கினான்?
7. வடக்கிருத்தல் என்றால் என்ன?
8. பெருஞ்சேரலாதன் வடக்கிருந்த போது நாட்டில் நிகழ்ந்தது என்ன?
9. மானவீரத்தில் சோழனுக்கும் சேரனுக்கும் ஏற்றத்தாழ்வின்மையைக் காட்ட புலவர் கையாண்ட உவமையைக் கூறுக.
10. எழுவரை வென்ற இளவலின் பெயரென்ன?
11. எழுவரை வென்றோன் சிறுவன்தான் என்பதற்கு எடுத்துக்காட்டுத் தருக.
12. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

    தென்புலம் வாழ்நர், வயிரியர், பூட்கை, குழிசி, நுதல்.

மொழிவளம் - புதுக்கவிதை எழுதுதல்

மாணவர்களே! நீங்கள் இதுவரை ஆண்டு 11 வரை எழுத்துகள் தொடங்கி ஒரு சில அணிகள் வரையில் கற்றீர்கள். இதுவரை நீங்கள் கற்ற இலக்கண அறிவு. நீங்கள் உங்களது தாய்மொழியான தமிழைப் பிழையற அழகுற எழுதவும், பேசவும், பனுவல்களை வாசித்துப் பொருளுணரவும் போதியதாகும். எனினும், இந்த அளவிற்கு மேலே தமிழை அழகுபட எழுதுவதற்கு ஒரு வழியுண்டு. அதுவே பா (கவிதை) எனப்படும். பாவானது மரபுப்பா புதுப்பா என்று இரு வகையது. இந்நாளில் மரபுப்பா எழுதுவோர் தொகை குறைந்து கொண்டு வருகிறது. கரணியம், எதுகை, மோனை, சீர், தளை, அடி, தொடை என மிகவிரிந்த அளவில் யாப்பிலக்கணம் கற்க வேண்டும். யாப்பு இலக்கணம் என்பது பாக்கள் எழுதுவதற்கான இலக்கணமாகும். பெரும்பரப்புடைய யாப்பிலக்கணத்தைக் கற்பது கடினமென அஞ்சிய பலரும் அதைக்கற்றுணர்ந்து மரபுப்பாக்களை எழுதுவதை விட்டு, இலகு தமிழில் புதுப்பாக்களை எழுதுகின்றனர்.

எனின் புதுப்பாக்களும் ஓரளவிற்குப் பாவிலக்கண அடிப்படையில் எழுதின் பயன் பெரிதாம். அவ்வடிப்படையில் சொல்லழகும் பொருளழகும் ஓசைநயமும் இணைவதால், படிப்போர்க்குச் சுவைப்பையும் மனதில் படிவையும் எளிதாகக் கொடுக்கும்.

அணிகளை இலக்கணம் என்பர் சிலர். மொழியியல் என்பர் சிலர். எழுத்துச் சொல் பொருள் யாப்பு அணி என்றிவை ஐந்தும் தொல்காப்பியம் கூறும் ஐம்பாலிலக்கணம். ஆயினும் ஓரோவிடத்து சில அணிகள் மொழிக்கு அழகு சேர்ப்பதால் மொழிவளம் போன்றும் தோன்றுகிறது. எனவேதான், மொழிவளம் எனும் இப்பகுதியில் சொல்லணி விளக்கப்படுகிறது.

எனவே, யாப்பிலக்கணத்தில் மோனை எதுகை என்றிரு எளிதான இலக்கணத்தைக் கற்று, பாவலர்களாக வளர்வோம்.

நாம் பாட எடுத்துக் கொண்ட பொருளைப்பற்றிச் சுவைபடக் கூறுவதற்கென ஒரு உத்தி கையாளப்படும். அது அணி எனப்படும். அணி என்றால் அழகு என்பது பொருள். அணிகளைப் பயன்படுத்திப் பா எழுதின் அது மொழியழகையும் பொருளழகையும் தரும்.

சொல்லழகைத் தருவது - சொல்லணி
பொருளழகைத் தருவது - பொருளணி

சொல்லணி

எழுத்தும் சொல்லும் பற்றியது சொல்லணி. அது மோனை, எதுகை என்றிருவகை.

மோனை:- (பாக்களில்) பாடல்களில் ஒவ்வொரு வரியையும் அடி என்பர். இவ்வடிகளில் அமையும் சொற்களின் முதலெழுத்துகள் ஓசையால் ஒன்றிவர அல்லது இனவெழுத்துகள் இடம்பெற்று வர எழுதுவது மோனை எனப்படும்.

எ - கா:
காலையில் கதிரவன் காலிக்கும். கீழ்வானில்
கமலமலர் கண்மலர்ந்து களிப்புடனே காணுமதை.

இவ்விரு வரிப் பாவில் ஒவ்வொரு சொற்களினதும் முதலில் ககரம் இடம்பெற்றுள்ளது. முதலெழுத்துகள் ஒன்றி வருவது மோனை.

எ - கா:
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு.

இது அடியின் முதலெழுத்து ஒன்றி வருவது.

எதுகை:- எதுகை எனப்படுவது, பாடலின் ஒவ்வொரு வரியிலுமுள்ள சொற்களின் இரண்டாம் எழுத்து அல்லது ஒவ்வொரு வரியினதும் முதற்சொல்லின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

எ - கா: ஆலும் வேலும் பல்லுக்குறுதி.

காலையும் மாலையும் நாடோறும் - முப்
பாலையும் நூலையும் நன்குகுடி.

இவ்வடிகளில் சொற்களின் இரண்டாம் எழுத்து ஒன்றாயிருப்பதை நோக்குக.

வந்தாய் என்துயர் கேட்டே - இறைவா
தந்தாய் இன்னருள் தானே.

இவ்வடிகளில் முதற்சொற்களின் இரண்டாம் எழுத்து ஒன்றாயிருப்பதை நோக்குக.

இவ்வாறாக அடி எனப்படும் வரிகளுக்கிடையிலும், சொற்களுக்கிடையேயும் ஓரொலி அல்லது ஒத்தவொலியுள்ள சொற்களை அடுக்கி எழுதுவதால் கவிதை எளிதில் மனதிற் படிவது மட்டுமல்லாமல் உள்ளத்தை ஈர்க்கும் படியாகவும் அமையும்.

இலக்கணம் - எழுத்துகள்

மாணவர்களே! ஆண்டு பதினொன்று வரை நீங்கள் கற்ற இலக்கணத்தை பன்னிரண்டாம் ஆண்டில் மீளக் கற்பதற்கு ஏற்றபடி, இந்நூலில் இலக்கணப் பகுதி அமைக்கப்பட்டிருக்கிறது. உங்களது இலக்கண அறிவை மீட்டு மனத்திருத்திக் கொள்ளுங்கள்.

எழுத்துகள்

எழுத்தெனப் படுப அகர முதல னகர இறுவாய் முப்பது என்ப. (தொல்)

எழுத்துகளாவன, அ வில் தொடங்கி ன் இல் முடியும் முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும். அவை உயிரெழுத்து மெய்யெழுத்து என்றிருவகை.

உயிரெழுத்துகள் அ முதல் ஔ வரை பன்னிரண்டு.
அவை - அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ.

உயிரெழுத்துகளை குறில் நெடில் என இருவகைப்படுத்துவர். குறுகிய ஓசையுடையவை குறில் அல்லது குற்றெழுத்து. நீண்ட ஓசையுடையவை நெடில் அல்லது நெட்டெழுத்து.

குறில் எழுத்துகள் - அ இ உ எ ஒ என ஐந்து.
நெடில் எழுத்துகள் - ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என ஏழு.

மெய்யெழுத்துகள் க் முதல் ன் வரை பதினெட்டு. இவை தலைமேல் குற்றுப் பெற்றவை.

அவை - க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என்பனவாகும்.

இவற்றின் ஒலியைக் கொண்டு, வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படுத்துவர்.

வல்லினம் - க் ச் ட் த் ப் ற் என ஆறு.
மெல்லினம் - ங் ஞ் ண் ந் ம் ன் என ஆறு.
இடையினம் - ய் ர் ல் வ் ழ் ள் என ஆறு.

உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும் தம்முள் ஒன்றோடொன்று மாறிமாறிப் புணர்ந்து, உயிர்மெய்யெழுத்துகள் தோன்றுகின்றன. உயிர்மெய்யெழுத்துகளை சார்பெழுத்துகள் என்பர். சார்பெழுத்துகள் 216. ஆய்த எழுத்துடன் 217 ஆகும். இவற்றுடன் முதலெழுத்துகள் 30 ம் சேர்ந்து 247 எழுத்துகள் தமிழ் நெடுங்கணக்கு எனப்படும்.

எழுத்துகள் சேர்ந்து சொல்லில் வரும்போது சொல்லில் முதல் நிற்கும் எழுத்து மொழிமுதலெழுத்து எனப்படும். மொழிமுதல் எழுத்தாக வரக்கூடிய சொற்களாவன இவையிவை என வரையிட்டுள்ளனர்.

வல்லினத்தில் க் ச் த் ப் ஆகிய நான்கு மெய்களும் பன்னிரண்டு உயிரோடும் கூடி மொழிமுதலாகின்றன.

மெல்லினத்தில் ந் ம் ஆகிய இரண்டு மெய்களும் பன்னிரண்டு மெய்யோடும் கூடி மொழிமுதலாகின்றன. ஞ் எனும் எழுத்து அ ஆ இ எ ஒ ஆகிய ஐந்து மெய்யோடும் கூடி மொழிமுதலாகின்றன. எனினும், ஆ எனும் எழுத்துடன் புணரும் ஞ் மட்டுமே இன்று நடைமுறையில் உள்ளது.

இடையினத்தில் ய் எனும் எழுத்து அ ஆ எனும் இரண்டு உயிர்களுடன் சேர்ந்து மொழிமுதலாய் வரும்.

வ் எனும் எழுத்து அ ஆ இ ஈ எ ஏ ஐ ஔ ஆகிய எட்டு உயிரோடும் கூடி மொழிமுதலாய் வரும். இதன்படி, உயிர், உயிர்மொய் எழுத்துகளாக மொத்தம் நூறு எழுத்துகள் மொழிமுதல் எழுத்துகளாய் வரும்.

மொழியிறுதி எழுத்துகள்

சொல்லின் கடைசியில் வரும் எழுத்துகள் மொழி இறுதி எழுத்துகள் எனப்படும். உயிரெழுத்துகள் பன்னிரண்டும் தனித்தும் மெய்யொடு புணர்ந்தும் மொழி இறுதியில் வரும். மெல்லினத்தில் ண் ன் ம் ஆகிய எழுத்துகளும் இடையினத்தில் ய் ர் ல் ழ் ள் ஆகிய எழுத்துகளும் சொல்லிறுதியில் வரும். இதன்படி சொல்லின் இறுதியில் இருபது எழுத்துகளே வருகின்றன. வல்லின எழுத்துகள் ஆறும் சொல்லின் இறுதியில் வரா.

சுட்டெழுத்துகள்

சுட்டெழுத்துகள் அ இ உ என மூன்றாகும். இம்மூன்று எழுத்துகளும் சுட்டுப்பொருளை உணர்த்துகின்றன.

வினாவெழுத்துகள்

வினாப்பொருளை உணர்த்தும் எழுத்துகள் வினாவெழுத்துகள் எனப்படும். அவை ஆ எ ஏ ஓ யா ஆகிய ஐந்தெழுத்தும் வினாவெழுத்துகள் ஆகும்.

தமிழர் வாழ்வியலில் ஆரியம் ஊடுருவல்

தமிழரது தாயகம் கடல் கொண்ட தமிழகம் ஆகிய குமரிக்கண்டம் அல்லது இலெமூரியா என்பதை முன்னைய வகுப்புகளில் கண்டோம். புடவியின் (புவி) தென்திசையில் இருந்த குமரிக்கண்டம் கடலில் மூழ்கிப்போக வடக்கு நோக்கி நகர்ந்த தமிழர், சிந்துவெளிப் பரப்பில் கட்டிடக்கலை நுணுக்கங்களோடு கூடிய திட்டமிடப்பட்ட நகர்களை அமைத்து நாகரிகத்தின் மேம்பட்ட நிலையில் செழுமையான வாழ்க்கையை வாழ்ந்திருக்கின்றனர். இதை சிந்துநதிப் பள்ளத்தாக்கில் காணப்படும் புதைவுகளிலிருந்து அறியமுடிகிறது.

'பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு தென்திசை ஆண்ட தென்னவன் வாழி' என்னும் சிலப்பதிகாரக் கூற்றினாலும் இதை நாமறியலாம். இவ்வாறு தமிழர் வடதிசை நோக்கி நகர்ந்தபின் குமரிமுனை தொடக்கம் இமயம் வரையுமுள்ள பகுதி முழுவதும் நாவலந்தீவு என அழைக்கப்பட்டது. இந்த நாவலந்தீவு முழுவதும் தமிழ் நாடாகவே இருந்தது. இந்த நிலையில், அந்நாளில் மெசப்பத்தேமியா என்று அழைக்கப்பெற்ற இன்றைய ஈரான், ஈராக், ஆப்கானித்தான் முதலிய பகுதிகளில் நாடோடியராக - மந்தை மேய்ப்பவராக வாழ்ந்து வந்த மக்கள் கூட்டம், தமது கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்களைத் தேடிக் கிழக்கு நோக்கி நகர்ந்து, ஆப்கானிய கைபர் கணவாயூடாக இமயத்தைக் கடந்து, ஏறத்தாழ கி.மு ஆயிரத்தைந்நூறுகளில் சிந்துவெளியை அடைந்தனர். (இந்தக் காலக்கணக்குகளில் பெரிதும் மாறுபாடு காணப்படுகிறது. பல ஆய்வாளர்களும் பக்கம் சார்ந்து ஆய்வதாலேயே இந்நிலை காணப்படுகிறது) அந்நாளில் மிலேச்சர் என அழைக்கப்பட்ட இவர்களை பிற்கால வரலாற்று ஆசிரியர் ஆரியர் என்று அழைப்பர். இவ்வாறு நாடோடியராக வந்த ஆரியர் சிந்துவெளியில் மொகஞ்சதாரோ, அரப்பா பகுதிகளில் அமைதியான வாழ்க்கை நடத்திய மக்களை அடிப்படுத்தி அந்நகரங்களைக் கைப்பற்றினர். ஆய்வாளர்கள் அந்த மக்களை திராவிடர் என்று கூறுகின்றனர்.

ஆரியரது மேலாண்மையின் கீழ் வாழவிரும்பாத அந்த மக்கள் தமது வாழ்புலத்தைச் சுருக்கிக் கொண்டு தெற்கே நகர்ந்தனர். அவ்வாறு நகர்ந்து வேங்கடமலையில் குடிகொண்டனர். வேங்கடமலையிலிருந்து குமரிவரை பரந்திருந்த தமிழகத்தின் மாவேந்தர்களின் ஆதரவுடன் வாழ்ந்தனர். அந்நாளில் இலங்கையில் இருந்து தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் வேங்கடமலையையும் தமது ஆட்சிப் பரப்புக்குள் கொண்டு வந்து, ஆளுமை இலகு நோக்கி சேரசோழபாண்டிய அரசுகளை உருவாக்கி தமிழகத்தை சிறப்புடன் ஆண்டனர். இதையே 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்று கூறும் தொல்காப்பிய நூற்பாவினாலும் நாம் அறிந்து கொள்ளலாம். இந்தக் குறுகிய எல்லைக்குள் தமிழையும் தமிழகத்தையும் மிகச்

சிறப்புறக் காத்து நின்றனர் மூவேந்தர்கள். ஆட்சிமுறை, வாழ்க்கைமுறை, மொழி, இலக்கியம், வணிகம் முதலியவற்றில் கி.மு. ஆயிரங்களுக்கு முன்னரே தமிழர் மிகவுயர்ந்து விளங்கியமைக்கு கழகநூல்கள் சான்று பகர்கின்றன. அச்சான்றுகளை இக்கால அகழ்வாராய்ச்சிகள் உறுதி செய்கின்றன. இவ்வாறு செவ்விய வாழ்க்கை வாழ்ந்த தமிழ் மக்களது வாழ்வியல் கூறுகளான அரசியல், சமயம், மொழி, இலக்கியம், வழக்காறு முதலியவற்றில் ஆரியம் எவ்வாறு ஊடுருவிற்று என்பதைப் பார்ப்பதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

அரசியல்

சிந்துவெளியை ஆரியம் வன்கவர்வு செய்ததன் பின் வேங்கடம் தொட்டு தென்குமரி வரையுள்ள தென்னிந்தியப் பெருநிலப்பரப்பில், சேரசோழபாண்டியர் எனப்பட்ட மூவேந்தர் அசையாத அதிகாரத்தோடு ஆட்சிசெய்தனர். இக்காலம், தமிழர் அரசாட்சியின் இரண்டாவது எழுச்சி ஊழி எனப்படுகிறது. இவ்வூழியின் கடைக்கழகக் காலத்தில் ஆரியச் செல்வாக்கு அரசமட்டத்தில் நுழைந்துள்ளமையை கடைக்கழக இலக்கியங்களில் பரக்கக் காணலாம். தமிழைக் கற்றறிந்த ஆரியர் கழகத்தில் மட்டுமல்லாமல் அரசவைகளிலும் இடம் பிடித்தனர். இவர்களது சூழ்ச்சியும் நிலையாமைக் கருத்தும், மூவேந்தரை தமக்குள் ஐயுறவு கொள்ளச் செய்து ஒருவரோடொருவர் மோதச் செய்தன. இவ்வேந்தரது போரின் வெற்றிதோல்விகளை உயர்த்தியும் தாழ்த்தியும் ஆரியர் பாடினர் அல்லது பாடவைத்தனர். இதனால், மூவேந்தரது ஒற்றுமை தகர்ந்து தமிழகம் வலுவிழந்தது. கழகக்காலத் தமிழ்மன்னர் பொதுமக்களோடு மிகநெருக்கமாக நடந்து நல்லாட்சி செலுத்தினர். இத்தகைய நல்லாட்சியில் ஆரியம் புகுந்து, மன்னனை மக்கள் நெருங்காதவாறு தடுத்தது. மன்னன் வேறு மக்கள் வேறு ஆனபின், மக்களிடையே நால்வருணப் பாகுபாட்டை ஏற்படுத்தி, தமிழரிடையே தொழில் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு உடைய குழூக அடுக்குகளை வகுத்தது. இதன்மூலம் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற நிலை உருவாயிற்று.

நால்வருணத்துள் உயர்ந்தோர் பிராமணர் என்றாயிற்று. எனவே, உயர்ந்தோரே இடம்பெறும் ஆட்சிமன்றிலுள்ள ஐம்பெரும் குழுவிலும் எண்பேராயத்திலும் ஆரியர் அமர்ந்துகொண்டனர். தமிழரைச் சூத்திரர் என ஒதுக்கி வைத்தனர். இவ்வாறு இடம்பிடித்து மன்னன் மக்களை நெருங்கமுடியாமல் மன்னருக்கும் மக்களுக்குமிடையே நின்றுகொண்டனர். சேரத் தமிழ் அரசுக்குள் புகுந்த ஆரியம், மொழியையும் மாற்றி அதை கேரளம் என்றொரு பிறமொழி மாநிலமாகவே மாற்றிவிட்டது. கி.பி.10ஆம் நூற்றாண்டுகளில் சோழப் பேரரசிலும் ஆரியர் நன்றாக இடம்பிடித்துக் கொண்டனர். அருண்மொழித்தேவன் என்ற சோழமன்னன் தன் தூயதமிழ்ப் பெயரை இராசராசசோழன் என்று மாற்றிக் கொண்டமை அரசமட்டத்தில் ஆரியம் விரவியதற்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும்.

இலங்கை அரச வரலாற்றில், யாழ்க் குடாநாட்டிலுள்ள கதிரமலையைத் (கந்தரோடை)தலைநகராகக் கொண்டு கி.மு. 300 களில் தமிழ் மன்னர் ஆட்சி செய்துள்ளனர்.

ஆனால், கி.பி நூற்றாண்டுகளில் வடஈழத்தில் அரசற்ற ஒரு வெற்றிடம் ஏற்பட்டது. பின்னர் அரசுரிமையுள்ள எவரும் ஈழத்தில் இல்லாதபடியால் 13 ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆரியத்துள் வீழ்ந்து கிடந்த தமிழகத்திலிருந்து ஒரு சோழ இளவரசன் அழைத்து வரப்பட்டு யாழ்ப்பாண அரசு அமைக்கப்பட்டது. இதன்மூலம் ஆரியச் செல்வாக்கு ஈழத்திலும் புகுந்து கொண்டது. யாழ்ப்பாண அரசு ஆரியவிரவலுக்கு உட்பட்டமைக்கு அங்கு இன்றும் இறுக்கமாகவுள்ள சாதி அடக்குமுறையும் யாழ்ப்பாண அரசர் தம்மை ஆரியச் சக்கரவர்த்தியர் என அழைத்துக் கொண்டமையும் தகுந்த எடுத்துக்காட்டுகளாகும்.

இறைநெறி

தமிழரது சைவசமயம் உண்மையில் பொருள் முதற்கோள் என்னும் மெய்யியலைத் தளமாகக் கொண்டது. இயற்கை வழிபாட்டிலிருந்து தொடங்கியது. சிந்துவெளியில் மரம், ஆ முதலிய வாழ்க்கைக்கு வளத்தைக் கொடுப்பனவற்றையே மக்கள் வணங்கியுள்ளனர்.

பின்னர், அறிவுத் தெளிவுபெற்று அன்புநிலையே உயர்ந்தது எனக்கண்டு இலைபோன்ற வடிவுடைய அடிப்பாகத்தில், முக்கோணக் கல்லை நிறுத்தி (சிவலிங்கம்) வணங்கியுள்ளனர். இதுபற்றிச் சேர் யோன் மார்சல் தமது அகழ்வாராய்ச்சியில் தெரிவித்துள்ளார். இந்திய துணைக்கண்டத்துள் நுழைந்த ஆரியர் தீ வளர்த்து, அதிலே விலங்கு, நெய், கூலவகைகள் போன்றவற்றைப் போட்டு வேள்விசெய்து, இந்திரன், வருணன், சோமன் முதலிய தம் கடவுளரை வழிபடும் வழக்கமுடையவராக இருந்தனர். இவர்களது இவ்வழிபாட்டுப் பாடல்களே நான்கு வேதங்களாகும். ஆரியர் இந்தியத் துணைக் கண்டத்தினுள் நுழைந்தபொழுது அங்கே சிவவழிபாடு இயற்றும் பழந்தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தனர். வந்து குடியேறிய ஆரியர் தம்மிலும் வேறுபட்ட சிவவழிபாடு புரியும் பழந்தமிழ் மக்களை தாசர்கள் என்றும் தசுயுக்கள் என்றும் அதாவது அடிமையர், கீழ்மக்கள் என்றும் இகழ்ந்தனர். அத்தோடு மட்டுமன்றித் தமிழர் வணங்கிய சிவனையும் கீழ்நிலையில் வைத்துப் பேசினர். ஆரியரது நூலான இருக்கு வேதத்திலே சிவனைக் கொள்ளையன், ஏமாற்றுப் பேர்வழி, திருடர் தலைவன் என்றும், நிலத்திலே விழுந்த உணவை (அவியை) உண்பவன் என்றும் இழித்துரைக்கப்பட்டுள்ளதாம். இவ்வாறு பழித்துரை செய்தது மட்டுமன்றித் திராவிடரையும் அவரது கடவுளையும் அழிக்குமாறு தமது கடவுளான இந்திரனை வேள்வி மூலம் வேண்டுகின்றனர். இவ்வாறு முயன்றும் பழந்தமிழரையும் அவரது கடவுளையும் அவர்தம் வழிபாட்டு முறையான சிவவழிபாட்டையும் அழிக்கமுடியாமற் போயிற்று. இந்நிலையில் ஆரியர் தமது புயற்கடவுளான உருத்திரனுக்கும் சிவனுக்கும் முடிச்சுப் போட்டு இருவரையும் ஒருவரென்று கூறிச் சிவவழிபாட்டையும் தமிழரது பூக்கொண்டு செய்யும் வழிபாட்டு முறையையும் ஏற்றுக் கொண்டதோடு, தமது மொழியான சமற்கிருதமே தேவரது மொழி என்றும் அம்மொழியாலேயே இறைவனை வழிபட வேண்டும் என்ற கருத்தையும் நிலைநிறுத்தினர். அத்துடன், நெருப்பு வளர்த்து வழிபடும் முறையை ஓமம் வளர்த்தல் என்ற வடிவிலும் சிவவழிபாட்டில் மெல்லமெல்ல, ஆனால் உறுதியாக நுழைத்து விட்டனர்.

வரலாற்று அடிப்படையில் சிவன், கொற்றவை, முருகன் ஆகிய மூவருமே தமிழர் வழிபடும் தெய்வங்களாக இருந்துள்ளனர். இவற்றோடு எண்ணற்ற நாட்டார் தெய்வங்களும் உள. இவை இன்றுங்கூட வழிபடப்படுகின்றன. இந்திய மக்களில் எண்பது விழுக்காட்டினர் இன்றும் நாட்டார் தெய்வங்களைத்தான் வணங்குகின்றனர். தமிழரது வழிபாட்டு முறையில் அந்தந்த ஊரில், அந்தந்தக் குமூகத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மக்களே தமது குலதெய்வங்களுக்கு பூசை செய்தனர். பிராமணர் மட்டுமே வழிபாடு செய்யவேண்டுமென்ற நிலை இருக்கவில்லை.

தமிழரது சைவ வழிபாட்டில் வேள்வி செய்யும் முறையைப் புகுத்திய ஆரியர், தெய்வத்துக்கு வேள்வி செய்தால் வெற்றியும் செல்வமும் எளிதிற் பெறலாம் என்று தமிழ் மன்னருக்கு நசையூட்டி அவர் எண்ணத்தை மழுங்கடித்தனர். கடைக்கழகக் காலத்திலேயே மிகப்பெரும் பொருட்செலவில் வேள்விகள் செய்வித்தனர். மன்னர் தேடிய செல்வமெல்லாம் சமய நடவடிக்கையில் அழிவுற்றது. நாட்டின் வளர்ச்சிப் பணிகள் முடங்கின. இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பதே ஒரு சோழமன்னனின் பெயர். இவ்வாறு தன் இயற்பெயருக்கு முன்னே ஆரியவேள்வி செய்த செயலை தன் பட்டமாக ஒரு சோழமன்னன் கொண்டிருந்தான் என்பது ஆரிய ஊடுருவலின் ஆற்றலை தெட்டத்தெளிவாகக் காட்டுகிறது. இதுபோன்று சோழபாண்டிய மன்னர்கள் பலர் பட்டப்பெயர்களைக் கொண்டிருந்தனர். இராசசூய வேள்வி என்பது இன்றைய பணப்பெறுமதியில் பலகோடி பணச்செலவில் செய்யப்படுவது. இதன் மறைமுக நடவடிக்கையாக தமிழ்மன்னரது செல்வங்களை ஆரியர் கொள்ளையிட்டனர். இத்தகைய சமயநடைமுறைகள் கி.பி 2ஆம் நூற்றாண்டில் களப்பிரர் எனும் வடபுலத்தார் தமிழ்நாட்டினுள் நுழைவதற்கு வழிகோலியதெனலாம்.

கி.பி. 6-9 நூற்றாண்டுவரை தமிழகத்தைக் கைப்பற்றி ஆண்ட பல்லவர் தமிழ் அந்தணரை ஒதுக்கிவிட்டு, வட இந்தியாவிலிருந்து பெருமளவு வைதிகப் பிராமணரைக் கொண்டுவந்து குடியேற்றி இறையிலி நிலங்களும் பிறவளங்களும் வழங்கினர். இவ்வைதிகப் பிராமணர் தமிழரிடையே நிலவிவந்த தமிழ்மொழியில் வழிபடுதல், மக்கள் இறைவனை நீராட்டுதல் (அபிடேகம் செய்தல்), போற்றி (அர்ச்சனை) செய்தல் போன்றவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. பல்லவர் ஆதரவோடு ஆரியப்பிராமணர் வழிபாட்டில் சமற்கிருதமொழியைப் புகுத்தினர். தாம் மட்டுமே கருவறைக்குள் செல்லலாம் என விதித்தனர். இறைவனின் பெயர்களையும் கோவிற் பெயர்களையும் மாற்றினர். எடுத்துக்காட்டாக, மதுரையிலுள்ள அழகர் சுந்தரேசுவரர் ஆனார், அங்கயற்கண்ணி, மீனாட்சி ஆக்கப்பட்டாள். தீயாடும் கூத்தன், அக்கினிஈசுவரன் ஆனார். சிவன் பரமேசுவரன் ஆனார். உமையாள் பார்வதி ஆக்கப்பட்டாள். முருகன் சுப்பிரமணியர் ஆக்கப்பட்டார். திருமால் விட்டுணு ஆக்கப்பட்டார். கோவில்கள் ஈச்சுரங்களாயின. செந்தமிழர் தெய்வமறை நாவலர் செழுங்கலை தெரிந்தவரோடு அந்தமில் குணத்தவர்க்கு படையல்கள் செய்கின்ற நிலைமாறி ஆரியரின் வழித்தோன்றலர் மட்டுமே வழிபாடியற்றலாம் என்ற நிலை ஏற்பட்டது. மரங்களின் கீழும்

சிறு மன்றுகளிலும் அமைந்திருந்த வழிபாட்டிடங்களும் தெய்வங்களும் பல்லவர், சோழர்காலப் பிராமணச் செல்வாக்கினால் கோபுரங்களும் சுற்றுமதில்களும் கொண்ட பெருங் கற்றளிக் கோவில்களாக மாற்றமடைந்தன. கழகக்காலத்தில் காணப்பட்ட அரண்மனைச் செல்வாக்கைக் கோவில்கள் கைப்பற்றிக்கொண்டன. ஆரியப் பிராமணரது செல்வாக்கு மன்னரது முடியில் ஏறிக்கொண்டது.

தேவார காலத்தில் தமிழுக்காகக் கடும் பரப்புரை செய்த சம்பந்தரையும் மாணிக்கவாசகரையும் அழித்தொழித்த ஆரியம், அவர்கள் இறைவனின் திகழொளியில் (சோதியில்) கலந்துவிட்டதாக நம்பவைத்துத் தமது ஆரிய வைதிகக் கொள்கையை மக்களிடம் நிலைக்கச் செய்தது. இயேசு பிறப்பதற்கு முன்பின்னாகவே சமண, பௌத்த சமயங்களது செயற்பாட்டினால் கி.பி 427ல் பீகாரில் உள்ள பாட்னாவில் நாலந்தா பல்கலைக்கழகம் அமைந்துவிட்டது. ஆனால், ஆயிரம் ஆண்டு கடந்தும் தமிழரைக் கல்விபற்றிச் சிந்திக்க ஆரியம் விடவில்லை. கி.பி.10ஆம் நூற்றாண்டிலே தஞ்சைப் பெரிய கோவிலைப் பிராமணரது முன்னெடுப்பினால் இராசராச சோழன் கட்டுவித்தான். தஞ்சைக் கோவில் பிராமணரது நிதி நிறுவனமாக மாற்றம் பெற்றது. அரசரிடமிருந்து இறைக்கொடையாக ஊர்களைப் பெற்றனர். ஊர்களோடு சேர்த்து ‘குடி நீங்காத தேவதானம்’ என்னும் வழக்கப்படி குடிமக்களையும் அடிமையினராகப் பெற்றனர். அடிமையினருக்குச் சூலக்குறியிட்டனர். கோவிலுக்கு 609 பணியாளரை வைத்திருந்தனர். இராசராசனது அக்கை குந்தவை 41,500 பொன்கழஞ்சுகள் கோவிலுக்குக் கொடுத்தாள். ஆண்டுதோறும் 116,000 கலம் நெல் கோவிலுக்கு வந்து சேர்ந்தது. இறைவரிகூடக் கோவிலால் அறவிடப்பட்டது. கோவில் தானே நிலக்கிழாராகவும் முதலாளியாகவும் இருந்து வேலை வாய்ப்பு, கடன் உதவிகளை வழங்கியது. தனிப்பட்ட நிறுவனங்கள், ஊராட்சி மன்றங்கள், மணக்கொடை முதலிய தேவைகளுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்தது. மொத்தத்தில் அரசியல், குமுக, பொருண்மியத் தளமாகக் கோவில் மாறியது. சோழர் காலத்திலும் ஆரியத்தின் அதிகாரம் கோவில்களினூடாக உயர்நிலையிலேயே இருந்துள்ளமை தெரிகிறது. இத்தன்மைகளை இன்று கனடாவிலும் ஐரோப்பாவிலும் காணக்கூடியதாக உள்ளது. கனடாவில் கோவில்கள் விரைவாகக் கட்டப்படுகின்றன. ஆனால், அந்த விரைவு கல்வி நிறுவனங்களைக் கட்டுவதில் காணப்படாமை தமிழரைத் துன்பமான எதிர்காலத்தில் புகுத்திவிடலாம்.

மொழி

உலகில் சீனம், சித்தியம், சுமேரியம், திராவிடம், இந்தோ-ஆரியம் என ஐந்து மொழிக் குடும்பங்கள் உள்ளன. எல்லாவற்றிலுமாக ஏறத்தாழ ஏழாயிரம் மொழிகள் கிளைவிட்டுள்ளன. இத்தகைய ஆதிமொழிக் குடும்பங்களில் ஒன்றான திராவிடத்தில் தமிழ் தொன்மையானது என்பதை ஈராசு பாதிரியார் முதல் அறிஞர் கால்டுவெல் வரை நிறுவியுள்ளனர். இறுதியாக மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் தோன்றி 20ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் உலகின் முதன்மொழியே தமிழ் என்று நிறுவினார்.

கி.பி.1842 இல் மொழி ஆய்வு செய்த இசுடீவன்சன் (stevensen) கி.பி.1851இல் கூயி மொழி பற்றிக் கூறிய ஜோன் பேர்சிவல், பிரய், கி.பி.1856இல் மொழி ஆய்வுநூல் வெளியிட்ட கால்டுவெல் முதலியோர் கூயி, குரூக், மால்தோ, பிராகூய் போன்ற வட இந்திய மொழிகளில் திராவிட மொழிப்பண்பு காணப்படுவதாக நிறுவியுள்ளனர். இவை அரப்பா மொகஞ்சதாரோ முதலிய வட இந்தியப் பகுதிகளிலிருந்து பழந்தமிழர் தெற்கே துரத்தப்பட்ட பின்பு, அங்கு எஞ்சியிருந்த பழந்தமிழர் வடவரோடு கலந்து ஆரியத்துள் மூழ்கினர் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இலங்கையில் 1956 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனப்பூசலின் பின் தெற்கே வாழ்ந்த தமிழர் வடக்குக்கிழக்கில் ஒதுங்கினர். நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் போன்ற பகுதிகளில் வாழ்ந்த தமிழர் அங்கேயே தங்கிவிட்டதனால் இன்று அவர்கள் சிங்களவராக மாறிவிட்டனர். இன்றும் ஒருசில தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் அவர்களிடம் காணப்படுகின்றன.

அறநெறிக் காலத்தில் தமிழ்நாட்டில் சமணமும் பௌத்தமும் வேரூன்றியிருந்தன. இவற்றின் வளர்ச்சி, இறைநெறிக் காலமாகிய பல்லவர் ஆட்சிக்காலத்தில் தடுத்து நிறுத்தப்படுகிறது. இம்முயற்சியில் சைவர், வைணவர், இதற்கென இமயமலைச்சாரல் முதலிய வட இந்தியப பகுதிகளிலிருந்து வந்த காளமுகர், பாசுபதர் முதலிய வைதீகமதப் பிரிவினரும் ஒன்று திரண்டனர். தமிழ் நாட்டில் ஆட்சியாளரான பல்லவர் வடமொழியைப் பெரிதும் போற்றினர். இச்சூழலில் வடமொழியானது தமிழோடு அளவின்றிக் கலந்தது. வடமொழியும் சைவத்தமிழும், கொண்டும் கொடுத்தும் பாசுரங்களிலும் தேவாரங்களிலும் கலந்து மணிப்பவளம் (மணிப்பிரவாளம்) எனும் தமிழ்நடையை உருவாக்கின. தமிழ்ப் பெயர்கள் ஆரியமாக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக தமிழ் மக்களிடையே நிலவிவந்த மலர், மகிழ்ச்சி, தொடர்பு, திருமணம், திருமால், முருகன், திருமகள், கலைமகள், மலைமகள் முதலிய சொற்கள் முறையே புட்பம், சந்தோசம், சம்பந்தம், கல்யாணம், கிருட்டினன், சுப்பிரமணியன், இலட்சுமி, சரசுவதி, துர்க்கை என மாற்றம் பெற்றன. இவ்வாறு எண்ணிறந்த தமிழ்ப் பெயர்கள் வடமொழியாகின. 13 ஆம் நூற்றாண்டில் பவணந்தி என்பார் நன்னூலை எழுதினார். அதன் சொல்லதிகாரத்தில், 'பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானும் ஈரெழுத்தானுமியைவன வடசொல்' என நூற்பா 274 இல் கூறியுள்ளார். அமலம், கமலம், மேரு, காரணம், காரியம், சுகி, போகி, அரன், அரி போல் பெருமளவு வடசொற்கள் தமிழில் கலந்துவிட்டமையை அவரே நிறுவியுள்ளார். கடந்த நூற்றாண்டில் மொழித்தூய்மை செய்வதற்கு மறைமலையடிகள் உள்ளிட்ட தமிழ்ச் சான்றோர் கடும் முயற்சிகள் எடுத்தனர். தொடக்கத்தில் அது கடினமாய் இருந்தபோதிலும் அவர் தொடக்கி வைத்த மொழிப்போர் தேவநேயமாக ஒளிபரப்பி இன்று நிறைதமிழ் - தனித்தமிழ் முயல்வு வீறுநடை போடுகிறது.

இலக்கியம்

கடைக்கழகக் காலத்திலேயே தமிழ் இலக்கியத்தினுள்ளும் தமிழ்க் கல்வியுள்ளும் ஆரியச் செல்வாக்கு தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும், பிற்காலச்சோழர் காலமாகிய 9ம் நூற்றாண்டில் இருந்தே கற்றலும் கற்பித்தலும் முற்றுமுழுதாகப் பிராமணர் வயமாயிற்று. அதுவும் வடமொழி வழியான வேதமந்திரக் கல்வியே கற்கப்பட்டது.

சூத்திரராகிய தமிழர் கல்வி கற்றல் கடவுட்குற்றம் எனத் தடுக்கப்பட்டது. சூத்திரன் வேதம் கற்றால் அவனது நாக்கை வெட்டு, கல்வியைக் கேட்டால் காதில் ஈயத்தை உருக்கி ஊற்று, அவன் சிலவேளை யாரிடமாவது கற்றுவிட்டாலோ அவனது நெஞ்சைப்பிள என்பது ஆரியரின் மனுநூற் கூற்றாகும்.

இவ்வாறு தமிழரது கல்வியை ஒடுக்கியபின், தெய்வத்தையும் அரசனையும் தமது வளவாழ்கைக்குரிய தன்னலத்தோடு பாடினர். தமக்கு வாய்ப்பான ஏமாற்றுக் கதைக்கூறுகளை ஒன்றிணைத்து, தொன்மங்களைப் பழங்கால வரலாறாக்கி அவற்றை இராமாயணம், பாரதம், திருவிளையாடற்புராணம் போன்ற காப்பியங்களாக எழுதிவைத்தனர். மாந்தநேய குமுகப் புரட்சியாளர் தோன்றும் வரை பல்லாயிரமாண்டுத் தமிழரது குமுகாய வரலாற்றை, ஆரியர் மண்ணுக்குள் புதைத்துவிட்டனர். ஓர் இலக்கியத்தின் மூலம் இராமன் என்னும் கதை வடிவத்தைக் கடவுளாக்கி தமிழரை வணங்க வைத்து ஆரியமயக்கத்தில் ஆழ்த்தி, அவர்களை எல்லா வழிகளாலும் சுரண்டிக் கொண்டிருக்கின்ற ஆரியர், இற்றைவரை இச்செயலில் திறமை மிக்கோராகவே காணப்படுகின்றனர்.

இறையன்பு நிறைந்திருந்த இலக்கியக் காலத்தில் ஆரியக் கடவுளாகிய விட்டுணுவைப் பாடுபொருளாக வைத்து ஆழ்வார் வடமொழி கலந்த தமிழில் பிரபந்தங்கள் பாடினர். இராமாயணம், மகாபாரதம் முதலிய இழிந்த ஆரியக் கதைகளை தமிழ்மக்கள் படிக்குமாறு செய்தனர். இன்றும் அந்நிலையே காணப்படுகிறது. ஆனால், தமிழரது வரலாறு பற்றிய சிந்தனையைத் தூண்டக்கூடிய சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் முதலிய தமிழர் நூல்களை மறைத்து வைத்தனர். அவற்றை இன்றும் உயர்கல்வி மட்டத்திலுள்ள ஒரு சிறு விழுக்காட்டினர் மட்டும் நுகர்வதைக் காணலாம். தமிழ் இலக்கியங்கள் மறைக்கப்பட்டு ஆரிய இலக்கியங்கள் மேலோங்கியமைக்கு இவைகள் ஒருசில எடுத்துக் காட்டுகளாகும்.

இலக்கிய ஆக்கம் என்பது படைப்பாளர், பதிப்பாளர், வாசகர், வணிகர் எனும் ஒரு சுற்றுவட்டத்தோடு தொடர்புடையது. வணிகம் பெருகினால் ஆக்கம் பெருகும். ஆக்கம் பெருகவேண்டுமாயின் நுகர்வோர் (வாசகர்) தொகை அதிகரிக்க வேண்டும். வாசிப்போர் பெருகுவதற்குத் தமிழ் வளரவேண்டும். தமிழ் வளர்வதற்கு அம்மொழிக்கு அரச ஆதரவு இருக்கவேண்டும். கழகக் காலங்களில், உறுதியான அரசுகள் இயங்கியதால் தமிழுக்குப் புரவலர் இருந்தனர். ஆதலால், தமிழ் இலக்கியங்களும் வளர்ந்து பெருகின. பிற்காலங்களில் ஆட்சியாளர் அயலவராக இருந்தமையால் தமிழ், தமிழர் பற்றிய இலக்கியங்கள் எழவில்லை.

வழக்காறுகள்

தமிழரது பண்பாடு, கலை, பழக்கவழக்கங்களிலும் ஆரியம் பெருமளவு விரவியுள்ளதையும் இன்றும்கூட விரவிவருவதையும் காணக்கூடியதாக உள்ளது. தமிழர்

பண்பாட்டில் குழந்தைத் திருமணவழக்கம் இருந்ததில்லை. இத்தகைய சிறந்த பண்பாட்டில், ஆரியர் குழந்தைத் திருமணத்தைப் புகுத்தினர். இதனால், கி.பி.19 ஆம் நூற்றாண்டில் கூட இலக்கக்கணக்கான இளம் கைம்பெண்கள் தமிழ்நாட்டில் இருந்துள்ளனர். இத்தகைய கைம்பெண்கள் உடன்கட்டை ஏறும் கொடுமையையும் ஆரியர் புகுத்திவிட்டனர். இவ்வழக்கத்தால் அகவை முதிர்ந்து இறக்கும் கணவனோடு இளம் கைம்பெண்ணையும் ஒன்றாகச் சேர்த்து எரித்தனர். ஆரியரால் நடைமுறைக்கு வந்து பலகாலம் நீடித்த இந்த வழக்கத்தை ஆங்கில ஆட்சிக்காலத்தில், இராசாராம் மோகன்ராய் 1846 ஆம் ஆண்டில் நீக்கி வைத்தார். இதன் எழுச்சியாக 1866 இல் சென்னையில் முதன்முதல் பெண்கள் பாடசாலைகள் திறக்கப்பட்டன. இதன்பின் 1892 ஆம் ஆண்டில் குழந்தைமணத் தடைச்சட்டம் நிறைவேறியது. 1928 ஆம் ஆண்டில், சாரதாச்சட்டம் பிராமணரின் பெரும் எதிர்ப்புக்கு இடையிலும் நிறைவேறியது. இதில் ஆணுக்குப் பதினெட்டும் பெண்ணுக்குப் பதினான்கும் திருமண அகவையாகி ஆரியச் செல்வாக்கைத் தகர்த்தது. தமிழ்மரபில் நீராட்டி மணப்பெண்ணின் கையில் அறுகம்புல்லும் வள்ளிக்கிழங்கும் கட்டி, பெரியோர் முன்னிலையில் மாலை மாற்றல், உணவூட்டல், மலர்தூவல், வாழ்த்துதல் முதலிய நிகழ்வுகளோடு திருமணச்சடங்கு நடைபெற்று வந்துள்ளது. இதில் ஆரியம் நுழைந்து தாலி, தீவலம், குங்குமம், கன்னிகாதானம், சமற்கிருத மந்திரங்கள் என்பவற்றையும் திருமணம் என்ற அழகிய தமிழ்ச் சொல்லுக்கு மாற்றாக விவாகம், கல்யாணம், பாணிக்கிரகணம் முதலிய சொற்களையும் புகுத்திவிட்டனர். இந்த ஆரியத் திருமணமுறை சிலப்பதிகார காலத்திலேயே தொடங்கிவிட்டதை 'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் செய்வது' என்று சிலப்பதிகாரத்திலேயே முதன்முதல் கூறப்படுகிறது. இச்சடங்கு இன்று நிலைத்துவிட்டது. இத்தகைய செய்தியை சிலப்பதிகாரத்துக்கு முந்திய கழக நூல்களில் காணவில்லை.

இந்தியாவின் எண்பது விழுக்காடு சிற்றூர் ஆகும். வயல் நிலம் எவரது உடைமையோ அவரே அதிகாரம் பெறுவர். இது பல்லவர் காலத்தில் தொடக்கி, சோழர் காலத்தில் விரிவாக்கி, ஆங்கிலேயர் காலத்தில் பாளையக்காரராகி, இந்தியா ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றபொழுது, தமிழ்நாட்டு பயிர்ச்செய்கை நிலத்தின் பெரும்பாகம் பிராமணரிடம் சேர்ந்தது. நிலத்தால் பணம் பெருக்கிய பிராமணர், ஊடகங்களான நாளிதழ், வானொலி, திரைப்படம் என்பவற்றைத் தமதாக்கினர். இவற்றின் மூலம் தமக்கு வாய்ப்பான வழிகளில் மக்களை தம்வயப்படுத்தினர். அவரை மாற்றுச்சிந்தனை அற்றவராக்கிவிட்டனர். அவ்வப்பொழுது எழுச்சிபெற்ற நீதிக்கட்சியையும் சீர்குலைத்தனர். ஈவேரா, மறைமலையடிகள், அண்ணாத்துரை, போன்ற பகுத்தறிவாளரையும் ஆரியம் சூழ்ச்சிகளால் அடக்கமுயன்றது. ஆனால், அவர்கள் இந்த ஆரியத்தின் செயல்களை எதிர்த்துத் தகர்த்தனர். எனினும், ஆரியம் தனக்கேயுரிய சூழ்ச்சி மூளையால் ஊடுருவலைத் தொடர்கிறது.

இலங்கையில், சாதி, சமயம், பண்பாடு, பழக்கவழக்கம் என்பவற்றில் மட்டும் ஆரியம் கலந்தது. அரசு, ஊடகம் போன்ற மேனிலையில் ஆரியம் புகமுடியவில்லை.

அங்கு கோவில்களின் கட்டுப்பாடு உயர் அடுக்கிலுள்ளோரிடம் இருந்தது. பிராமணர் ஊதியத்துக்குப் பூசைசெய்யும் கோவில் பூசகராகச் செயற்பட்டனர். புலம்பெயர் நாடுகளில் இத்தன்மையில் மாற்றம் காணப்படுகிறது. பிராமணர் சொந்தமாகக் கோவில் தொடங்கி, பணப்பெருக்கத்தில் முன்னிலைப்படுவதாக ஊடகங்கள் பேசுகின்றன. தமிழ்நாட்டின் நிலவுடைமை இங்கு கோவில் உடைமையாக மாற்றம் பெற்றுள்ளமை தெரியவருகிறது. இத்தகைய பல்துறை ஆரிய விரவலால், தமிழர் அடையாளத்தையும் தேசியத்தையும் ஒரே நேரத்தில் இழந்து கொண்டிருக்கின்றனர். எனவே, தமிழ் மக்கள்மீது திணிக்கப்பட்டுள்ள ஆரியப்பண்பாட்டுக் கூறுகளை அடையாளங்கண்டு, படிப்படியாக அவற்றை அகற்றாவிடில் தமிழ் அடையாளமும் தமிழ்த் தேசியமும் எதிர்காலத்தில் வேரறுந்து விடக்கூடிய பேரிடர், தொலைநோக்கில் தெரிவதாக அறிஞர் பேசிக்கொள்வது எமக்கும் கேட்கிறது.

ஆரியர் என்றால் யார்?

இச்சொல் வடவிந்தியரைக் குறிக்கிறது. ஆர் + இயர். ஆர் என்றால் நிறைந்த, இயர் என்றால் இயல்புடையவர் எனவரும். அதாவது, எல்லாச் சிறப்பியல்புகளும் நிறைந்தவர். இந்த வடவர், சட்டர்சியின் 'வால்காவிலிருந்து கங்கைவரை' என்ற நூலின்படி, இரசியாவின் வடபகுதியிலிருந்து கி.மு மூவாயிரங்களில் புறப்பட்டு கி.மு ஆயிரத்தைந்நூறுகளில் ஆபுகானித்தானின் கைபர் கணவாய் ஊடாக இந்தியாவினுள் நுழைந்தவர்கள். கி.மு மூவாயிரங்களில் இருந்து, மந்தைகளை மேய்ப்பதற்கான மேய்ச்சல் நிலங்கள் தேடி நாடோடிக் கொண்டிருந்தனர். இவ்வழியில் இவர்கள் நகர்கின்றபோது, கிரேக்கம், பாரசீகம், ஈரான் போன்ற தமிழ் வணிகர் கடலோடிய நாடுகளில் இவர்களது நாடோடலைக் கவனித்த தமிழர், இவர்கள் நிலையாகத் தங்காது வழிநடையே வாழ்வாகக் கொண்டவர்கள் என்பதைக் குறித்து ஆறியர் என்றிருக்கலாம். ஆறு என்றால் வழி, இயர் என்றால் இயல்புடையர். ஆறியர் இந்தியாவினுள் நுழையும்போது எழுத்துமொழி அற்றவர்களாக, மந்தை மேய்க்கும் மிலேச்சராக இருந்தனர். வடக்கே வழங்கிய தமிழில் திரிந்ததும் வாழ்நிலைக்கேற்ப அமைந்திருந்ததுமான வடதிராவிட மொழியுடன் தமது பேச்சுவழக்கையும் கலந்து பிராகிருதத்தை உருவாக்கினர். கி.பி ஆண்டுகளின் தொடக்கத்தில் தமிழகத்தினுள் நுழைந்து, தமிழ்வழி மொழியறிவையும் இலக்கண அறிவையும் பெற்றுத் திருந்திய மொழியை ஆக்கிக் கொண்டனர். இவ்வாறு அறிவைப் பெருக்கிக் கொண்ட ஆறியர், தமிழில் உள்ள ஆரியர் என்ற உயர்ந்தோரைக் குறிக்கும் சொல்லைக் கண்டுணர்ந்து, ஆறியர் என்பதற்குப் பகரமாக ஆரியராக மாற்றியிருப்பர். காலஞ்செல்ல சமற்கிருதத்தை உருவாக்கி அதைத் தேவமொழி என்றும் நம்ப வைத்தனர். இந்நாளில் இவர்கள் மேலே காட்டியுள்ள கருத்தின்படி தம்மினம் ஆரியம், நாங்கள் உயர்ந்தவர்கள் என்றும் நிறுவினர். பின்னாளில் கி.பி 15 ம் நூற்றாண்டுகளில் இந்தியா வந்த ஐரோப்பியரும் அவர்களை ஆரியர் என்று அழைத்தனர்.

அருங்குறிப்பு

நால்வருணம்	:-	பிராமணர், அரசர், வணிகர், சூத்திரர்
சூத்திரர்	:-	அடிமைத் தொழிலாளர், தீண்டத்தகாதவர்கள் (தமிழர்)
குடி நீங்காத தேவதானம்	:-	நிலத்தைக் கோவிலுக்கு வழங்கும்போது, அந்நிலத்தில் வாழும் மக்களையும் சேர்த்து வழங்கும் கொடைமரபு.
நான்குவேதம்	:-	இருக்கு, யசுர், சாமம், அதர்வம்.
பொருள்முதற்கோள்	:-	உலகப்பொருள் எல்லாம் மெய்யானவை என்னும் கொள்கை. நிலையாமை என்கிற ஆரியக் கருத்திற்கு எதிரான கொள்கை.
ஐம்பெருங்குழு	:-	அந்தணர், அமைச்சர், படைத்தலைவர், தூதுவர், ஒற்றர். அரசவையில் உயரதிகாரம் பெற்றோர்.
எண்பேராயம்	:-	கரணத்தியலவர், கருமகாரர், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், இவுளிமறவர். அரசாட்சியில் முதன்மை பெற்ற எட்டு அதிகாரிகள்.
நிறைதமிழ்	:-	அனைத்து இலக்கியங்களிலும் பயின்றுவரும் பழந்தமிழ்ச் சொற்கள்.
தனித்தமிழ்	:-	தமிழ்மொழி மரபின்படி உருவாக்கப்படும் புதிய சொற்களும் அடங்கும் சொற்கள்.

வினாக்கள்

1. சிலப்பதிகாரம் கூறும் கடற்கோள் செய்தி என்ன?
2. ஆரியர் எனப்படுவோர் யார்?
3. ஆரியர் வரவால் தமிழர் என்ன செய்ய நேரிட்டது?
4. கழகக்காலத்தில் அரசமட்டத்தில் ஆரியம் நுழைந்ததை எதன் வாயிலாக அறிய முடிகிறது?
5. யாழ்ப்பாண அரசில் ஆரியம் விரவியமைக்குச் சான்றாக விளங்குவன யாவை?
6. ஆரியர் மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாகச் சிவவழிபாட்டில் நுழைத்து விட்டவை யாவை?
7. பல்லவர் துணையோடு ஆரியர் தமிழகத்தில் என்ன செய்தனர்?
8. பல்லவர் ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழியுள் ஆரியமொழி கலந்ததால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
9. கல்வி பற்றி மனுநூல் கூறுவது யாது?
10. தமிழிலக்கியங்கள் மறைக்கப்பட்டு ஆரிய இலக்கியங்கள் மேலோங்கியமைக்குச் சில எடுத்துக்காட்டுகள் கூறுக.
11. சிலப்பதிகாரத்துக்குப் பின் ஆரியர் தமிழரிடையே புகுத்திய திருமண வழக்காறுகள் எவை?
12. இப்பாடத்தில் நீர் பெற்றுக்கொண்ட தகவலிலிருந்து தமிழைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்ன எனக் கருதுகிறீர்?

மொழிவளம் - கவிதை எழுதுதல்

சொல்லணி பொருளணி இரண்டில் சொல்லணி பற்றி முதற்பாடத்தில் கற்றீர்கள். இப்பாடத்தில் பொருளணி பற்றிக் கற்போம்.

பொருளணி :- பொருளணி பலவகைப்படும். அவற்றுள் நான்கு அணிகளைப் பற்றிக் கற்றால் போதும். பா எழுதலாம்.

அவை :-

1. உவமையணி
2. உருவகவணி
3. உயர்வு நவிற்சியணி
4. தற்குறிப்பேற்றவணி என்பனவாகும்.

உவமையணி:- இவ்வணி இதைப்போன்றது அது என்று ஒப்புவமை காட்டி எழுதப்படுவதாகும்.

எ - கா:- செந்தமிழ்த் தேன்மொழியாள்.

தேன் போன்று இனிமையாகப் பேசுபவள். போன்ற என்ற கருத்துரு தோன்றினால் அது உவமையணியாகும்.

உருவகவணி:- இவ்வணியானது அது போன்றது இது என்று கூறாமல் அதுவே இது என்று கூறுவது.

எ - கா:- முகமலரைக் கண்டு நான் முகமலர்ந்தே
உளக்கமலத் துள்ளோர் இடம் கொடுத்தேன்.

முகமலர் - முகமாகிய மலர்
உள்ளக்கமலம் - உளமாகிய கமலம் (தாமரை)

போன்ற என்ற கருத்துருவானால் உவமையணி.
ஆகிய என்ற கருத்துருவானால் உருவகவணி.

உயர்வு நவிற்சியணி:- இவ்வணியானது நாம் கூறப்போகும் பொருள் ஒன்றைச் சிறப்பிக்கும் பொருட்டு அதன் இயல்பை உயர்த்திக்கூறுவதாகும்.

எ - கா:- வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்

யானைகளோடு போரிட்ட மார்பும்
மலையைத் தூக்கிய தோளும்

என்று இராவணனது பெருவலி உயர்த்திக் கூறப்பட்டுள்ளது. இது உயர்வுநவிற்சியணி.

மலைத்தோள் - தோளின் வலிமையையும்
பனைக்கை - கையின் நீட்டையும்
சிறப்புறுத்திக் கூறுவதே உயர்வுநவிற்சியின் பொருள்.

தற்குறிப்பேற்ற அணி:- தற்குறிப்பேற்ற அணியானது கவிஞன் தான் காணுகிற ஒரு காட்சியை தன் கற்பனை ஒன்றுடன் இணைத்துக் கூறுவது.

கூடுமிருளோடு படையினர்
போடும் குண்டுகளால் மக்கள்
எல்லாம் உயிரொடுங்கி
கல்லாய் உறைந்திருக்கும் நிலைக்கிரங்கி
கதிரவனே காரிருளை ஓட்டிடவா- என்று
கூவினவே சேவலெல்லாம் சேர்ந்து.

இருளில் படையினரின் கொடுமைகளைக் கண்டு அஞ்சியொடுங்கிக் கிடக்கும் மக்களின் துயர் துடைக்க விரைந்து வந்து, இரவைப்பகலாக்கு என்று கதிரவனை அழைப்பது போல சேவற்கோழிகள் கூவின. வைகறையில் விடியலைக் கண்டு கோழிகள் கூவுவது ஓர் இயற்கை நிகழ்வு. அந்த நிகழ்வை, மக்கள் துயரைக் கண்டு பொறுக்காமல் கதிரவனை வா விரைந்து! என்று கோழிகள் கூவியழைக்கின்றன என்று கூறுவது பாவலரின் கற்பனை. இது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

ஏறிய கொடி கம்பத்தில்
ஏறியே காற்றோடாடி
ஊருள தமிழரெல்லாம்
வருகவே வருகவென்று
வரவேற்கும் காட்சி போன்று
வரிப்புலிக் கொடியைக் கண்டேன்.

கம்பத்தில் ஏறிய கொடி காற்றிலாடுவது இயற்கை நிகழ்வு. அதைக் கண்டு, ஊரிலுள்ள மக்களெல்லாம் ஒன்றுதிரண்டு வாருங்கள் என்று கொடி கைகாட்டி அழைக்கிறது என்ற கூற்று, பாவலரின் கற்பனை.

எங்கே கீழ்வரும் தலைப்புகளுக்கு பாடல் எழுதுங்கள் பார்க்கலாம்.

1. தமிழே

2. என் மண்ணே

நீங்கள் விரும்பும் அமைவில் இருபாடல் எழுதுங்கள்.

இலக்கணம் - சொல்

ஓர் எழுத்துத் தனித்தோ அல்லது பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தருமாயின் அதைச் சொல் என்பர்.

பூ - இது ஓரெழுத்து ஒருசொல்.
பேருந்து - இது ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துகள் சேர்ந்த சொல்.

சொற்கள் பகுசொல், பகாச்சொல் என இருவகைப்படும்.

பழம் - பகாச்சொல்
மாம்பழம் - பகுசொல்

பகுசொல் பகுதி, சந்தி, மாற்றம், இடைநிலை, சாரியை, விகுதி என ஆறு உறுப்புகளை உடையது. இவற்றில் பகுதி விகுதி என்ற இரு உறுப்புகள் தொடங்கி ஆறு வரையிலும் சொற்களின் புணர்ச்சிக்கேற்ப இடம்பெறும்.

சொல்லிலக்கணம்

சொல் இலக்கணத்தில் திணை, பால், எண். இடம், காலம் என ஐந்து உறுப்புகள் உள்ளன.

திணை - உயர்திணை, அஃறிணை என்றிருவகை.

பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐவகைப்படும்.

எண் - ஒருமை, பன்மை என இருவகைப்படும்.

இடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

காலம் - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகை.

தமிழ்மொழியில் உள்ள சொற்கள் இலக்கிய வகையால் நான்கு, இலக்கணவகையால் நான்கு என வகுக்கப்பட்டுள்ளன.

இலக்கியவழி நாற்சொற்கள் - இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பன.

இலக்கணவகையால் நாற்சொற்கள் - பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பன.

பெயர்ச்சொல் - பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என அறுவகைப்படும்.

இக்குறிப்புகளோடு கற்றல் இலக்கண நூலை துணைகொண்டு கற்கவும்.

தேவையில் எழுந்த காலத்தின் கவிதைகள்

விபுலாநந்த அடிகள் பாடுகிறார்

'முந்தும் மனவெறி மொழிகளில் அமையின்
முன்பின் இங்கொணாத கலை மலரும்' - என்று

ஆம், காலத்திற்குக் காலம் 3500 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழினம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. கடல் பிறக்கோட்டி உலகம் வலம் வந்த தமிழ்ப்பெருங்குடி பலதடவை கடற்கோளால் அழிக்கப்பட்டது. அழிக்கப்படவே தமிழர் சிந்துவெளி நோக்கிப் புலம்பெயர்ந்தனர். பின் சிந்துவெளியிலே ஈரானிய மிலேச்சர் நுழைந்து தமிழரை அழித்தனர். மீண்டும் தலையெடுத்துத் தமிழ் நிமிர்ந்து நின்றபோது, ஆரியம் வஞ்சனையால் தமிழரிடையே நுழைந்து, நிமிர்ந்து நின்ற மூவேந்தரைப் பிரித்து, பகைமையை மூட்டி தமக்குள்ளேயே போரிட வைத்தது. அந்த உள்வீட்டுச் சண்டையில் தமிழினம் அழிந்து வலுவிழந்தது. இப்படி வலுவிழந்து இருந்த தமிழகத்தில் துருக்கிய சுல்தான்கள் நுழைந்து எண்ணற்ற தமிழரை அழித்தனர். இதைத்தொடர்ந்து தெலுங்கர், ஐரோப்பியர் வந்து நாட்டை மாறிமாறிக் கைப்பற்றி எதிர்த்தவர்களை எல்லாம் அழித்தனர். ஐரோப்பிய மேலாண்மை நீங்கியபோது விடுதலையின் பின் தமிழகத்திலும் இலங்கையிலும் ஒருவாறு தமிழர் மெல்லமெல்லத் தலைநிமிர்ந்தனர். இருந்தும் தமிழகத்தில் நாற்சாதி முறை நுழைந்து தமிழரைத் தாழ்த்திற்று. இலங்கையில் முன்நோக்கிய மதியற்ற தமிழரது தலைமைத்துவங்களால் ஆட்சியைப் பெற்றுக்கொண்ட சிங்களம் மக்கள்நாயகம் (சனநாயகம்) என்கிற பெரும்பான்மை அரட்டுகோன்மையால் மெல்லமெல்லத் தமிழினத்தை அழிக்கத் தொடங்கிற்று.

முதலில் அறவழிகளில் வாழ்வுரிமை கேட்ட தமிழரை இனவன்முறையைத் தூண்டிவிட்டு அழித்தது. சிங்களத்தின் எல்லைமீறிய அரட்டுகோளால் தமிழர் விடுதலைக்காக வன்முறையை வன்முறையால் சந்திக்க ஆயுதங்களைக் கையிலெடுத்தனர். அந்த ஆயுதப்போர் தக்காரும் மிக்காரும் இல்லாமல் உலகம் வியக்க வீரம் விளைத்தது. ஆனால், தென்கிழக்கு ஆசியாவில் தம் நாடுகளிடையே ஏற்பட்ட பல்விடுதலைப் போராட்டங்களை நசுக்க விரும்பிய பலநாடுகளும் தமிழரது விடுதலைப் போரை வெற்றிபெறவிட்டால், தம் நாடுகளிடையே உள்ள விடுதலைப் போராட்டங்கள் வலுப்பெறும் என்றஞ்சி, தமிழீழவிடுதலைப் போரை அரட்டுகோட் போராட்டம் என்று வகைப்படுத்திச் சிங்களத்துடன் தோள்கொடுத்து நின்று தமிழீழ விடுதலையை நசுக்கின. ஆனால், அந்த நாடுகள் எதிர்பாராத அரச அரட்டுகோள் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. இளைஞர்களும் இளைஞைகளும் எண்ணற்றோர் காணாமற் போயினர். தெருவால் போனோர் பிணமாய்க் கிடந்தனர். கடந்த முப்பதாண்டு காலத்தில் ஓரிலக்கம் பேர் இவ்வாறு அழிக்கப்பட்டனர். விடுதலைப் போர்

முறியடிக்கப்பட்ட அந்தக் கடைசி நாட்களில் போராளிகளுடன் போரிடுகின்றோம் என்ற சாக்கில் அரசபடைகளால், செய்திகளின்படி இருபதினாயிரத்துக்கும் ஐம்பதினாயிரத்துக்கும் இடைப்பட்ட மக்கள் காட்டுமிராண்டித் தனமாகக் கொன்று புதைக்கப்பட்டனர். இந்தப் பெருங்கொடுமை விளைந்ததைக் கேள்வியுற்று தமிழ்கூறும் நல்லுலகம் கொதித்தது: கொந்தளித்தது. அதனால், முந்தும் மனவெறியில் பிறந்த இனமானக் கவிஞர்களுடைய தேவையில் எழுந்த காலக் கவிதைகள் போற்றப்பட வேண்டியவை.

ஆரியத்தின் நால்வேதம், மனுநூல் போன்ற அறமற்ற அருவருக்கத்தக்க நூல்களால், ஏமாற்றி வாழும் ஒரு கூட்டம் பெரும்பான்மை மக்களைத் தீண்டத் தகாதோர் என்றும் பெண்கள் இழிபிறவிகள் என்றும் தமிழரைத் தாழ்த்துவது கண்டு, இரண்டாயிரத்தின் முன் கனன்று எழுந்தான் ஒரு கவிஞன். ஆரிய ஏமாற்றுக் கொள்கைகளை எதிர்த்துத் தன் மனத்தெழுந்த குமுறலைக் கவிதையாக்கினான். அந்தக் கவிதைகள் தான் ஒப்புயர்வற்ற உலகவிலக்கியமான திருக்குறள். ஆனால், அன்றைய தமிழக மன்னர்கள் குறளைத் தமது கருத்துக்கு எடுக்கவில்லை. மாறாக வடவரின் சாணக்கியத்தையும் மனுநீதியையும் போற்றி அழிந்தனர். வள்ளுவரின் வழியிலே கடந்த நூற்றாண்டில் கனக சுப்புரத்தினம் என்றோர் கவிஞன் தோன்றி, ஆரியச் சதியினைச் சாடினான். தன் சூறாவளிக் கவிதைகளால் ஏமாற்றுக் குமுகப் புரட்டுகளை புரட்டிப்போட்டான். கடவுட் கோட்பாட்டுத் தொன்மங்களையும் குமுகாய ஏற்றத்தாழ்வுகளையும் எதிர்த்துப் பாடினான். தமிழகம் அதை ஏற்றதால் குறிப்பிடத்தக்களவு மறுமலர்ச்சி கண்டது. இன்றோ, தமிழீழத்தில் எம் கண் முன் எம் உறவுகள் மீது நிகழ்த்தப்பட்ட வன்கொடுமை கண்டு உளங்குமுறிய கவிஞர்கள் தம் எண்ணங்களை பதிவுசெய்கின்றனர். இத்தகைய காலத்தின் கவிதைகளை நாம் கருத்திற்கு எடுத்து, எம்மைத் தமிழராக நிறுத்தவேண்டும். அவற்றுள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

நேரம் இதுதான்

சனல் ஃபோர் செய்திச் சேவையினர்
தந்த காணொளிக் காட்சிகளால்
அனலாய் நெஞ்சம் கொதிக்கிறது
அமைதி யின்றித் தவிக்கிறது

ஆடை களைந்து இளையோரை
அம்மண மாக்கிக் கண்கட்டிக்
காடைத் தனமாய்ச் சுடும்காட்சி
காண நெஞ்சம் பதைக்கிறது

ஆண்களுக் கிந்தக் கதியென்றால்
அவர்கள் கையில் அகப்பட்ட
பெண்கள் நிலைமை என்னாகும்
பிய்த்துப் பிடுங்கி இருப்பார்கள்

உணர்ச்சி உள்ள தமிழர்களே
உலுப்பும் காட்சி கண்டீர்கள்
தளர்ச்சி நீங்கி வாருங்கள்
தயக்க மின்றிக் குரல்கொடுப்போம்

உரிமை கேட்ட தமிழரினம்
ஒடுங்கித் தடுப்பு முகாம்களிலே
வரிசையில் நின்று கையேந்தி
வாடும் நிலைமை மாற்றிடுவோம்

- அருள் சுப்பிரமணியம்

அருள் சுப்பிரமணியம் என்னும் இந்தக் கவிஞனுடைய உள்ளத்திலே சனல்போஃர் தொலைக்காட்சி வெளியிட்ட காணொளியில், ஏதுமறியாத் தமிழ் இளைஞர்களை காட்டுமிராண்டித் தனமாக படையினர் கொன்று குவித்த அந்தக் காட்சி உள்ளத்தை உடைத்தது. அந்த நொருங்கலில் அவனது உள்ளத்திலே பிறந்த கவிதை கூறுவதைக் காணுங்கள். அதிக விரிவின்றி உள்ளத்து உணர்வினை அள்ளிக்கொட்டி, வெடிக்கும் வேதனையோடு அறைகூவுகிறான். நாங்கள் கண்டது ஒரு சிறிது. ஆனால் காணாததோ எண்ணற்றது. அதுவும் இளைஞருக்கு இந்தக் கதியென்றால் கன்னியரின் கதியென்ன என்று கலங்கிய அவனது உள்ளத்திலே சொற்கள் தோன்றவில்லை. மூன்றே சொல்லில் அந்த மாபெருங் கொடுமையைச் சொன்னான் பிய்த்துப் பிடுங்கி இருப்பார்கள் என்று. பிய்த்துப் பிடுங்கி என்றிரு சொற்களும் சொல்வது கொடுமையின் மாபெரும் விளக்கம். அந்த விளக்கத்தின் மூலம் உங்களது உள்ளத்தில் புதைந்து கிடக்கும் மாந்தநேயத்தை, இனவுணர்வை விழித்தெழச் செய்கிறான். அந்த விழிப்பிலே உங்கள் உறவுகள் படும் பேரஞ்ரை உங்களைக் காணவைக்கிறான். இதுதான் கவிதையின் மாண்பு. கவிஞனின் பேராற்றல். இத்தகைய காலத்தின் கவிதைகள் மக்களை உசுப்பி ஒருங்கிணைக்கும் சக்தி வாய்ந்தவை.

எழுத்தாணி ஏந்தும் ஈசர்கள்

இதோ
இன்னொரு இயேசுக் கிறித்து
மரணங்களை மட்டுமல்லாமல்
மனித மனங்களையும் இணைத்து
உணர்வுகளை எழுத
எழுத்தாணி பிடித்து
இறங்கி வருகிறார்

ஊடக வெளிச்சத்தால்
ஊழல்களைப் படம்பிடித்து
உண்மைகளை உளறிக் கொட்டுமுன்
அவரையும் அறைந்துவிடுங்கள்
சிலுவையில்

எங்கே சென்றாய் கோடரிக்காம்பே
யூதா! எங்கே சென்றாய்

மனிதம் கொன்று
மரணம் தின்னும் உனக்கு
புனிதரைக் கொல்லப்
புகட்டவா வேண்டும்

ஊழிஊழியாய் தொடரும்
காட்டிக் கொடுப்புகளும்
சிலுவை மரணங்களும்
இவருக்கான வாழ்வும் சாவும்
எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது

மரணம் நிகழும் வழிகள் தான்வேறு
சேருமிடம் என்னவோ கல்வாரிதானே.

- மன்னார் அமுதன்

'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்குச் சமம்' என்பது ஒரு தமிழ்ப்பழமொழி. ஆம், அரசுகளின் அரட்டுகோன்மையின் கொடுமை தாங்கமுடியாமல் அழுதழுது களைத்து, உயிரை வெறுத்து, உரிமையைக் காதலித்துக் கிளர்ந்தெழும் மக்கள் சக்தி பேராற்றல் வாய்ந்தது. அது கூரிய வாளாகப் புறப்படும். இது வெறும் கோட்பாடு அல்ல.

உருசியாவின் சார் ஆட்சிக்கு எதிரான மக்கள் புரட்சியும் லூயி மன்னனுக்கு எதிராக மக்கள் நடத்திய பிரான்சியப் புரட்சியும் இந்தப் பழமொழியை மெய்ப்பிக்கும் வரலாற்றுச் சான்றுகளாகும். அத்தகைய ஒரு குமுறல் தான் அமுதனின் கவிதை வரிகளில் தொனிக்கிறது. எதிரியை விட அஞ்சத் தக்கவன் இனத்துள்ளே இருந்து காட்டிக் கொடுக்கும் இரண்டகன் தான். ஏழை எளிய மக்களுக்காக தன்னைச் சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தார் இயேசுபெருமான். அதுபோன்றுதானே உண்மைகளை, அரசின் அரட்டுகோன்மையை - தமிழரது இரங்கத்தக்க நிலையை வெளிப்படுத்திய எத்தனையெத்தனை ஊடகவியலாளர் இனவேறுபாடின்றி கொன்றொழிக்கப்பட்டனர். எத்தனைபேர் காணாமற் போயினர். ஆனாலும் மரணத்திற்கும் அஞ்சாத உளவுரம் படைத்த தம்மை ஒப்புக்கொடுக்கத் தயங்காத ஊடகவியலாளர் தோன்றவே செய்வர். அவர்களையும் அவர்கள் உண்மைகளை எழுதும் முன் கொன்றுவிடுங்கள் என்று இரண்டகர்களை அழைக்கிறான் இந்தக் கவிஞன். வரலாற்றில் காட்டிக்கொடுப்பிற்குத் தலைமகனான யூதாசின் பெயராலேயே இவர்களையும் அழைக்கிறான். யூதாசு எங்கே சென்றாய்! வா இரண்டகனே என்று. இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட அதே பொழுதில் யூதாவும் கொல்லப்பட்டான். ஆம், அவன் தன்னைத் தானே கொன்றான். அதே போன்று யூதாசுகளே உங்களுக்கும் மரணம் வரும். ஆனால், வரும் வழிகள் வேறாயிருக்கும். கோடரிக்காம்பு போல் தன் இனத்தை அழிப்பதற்கு தன்னினத்தைக் காட்டிக் கொடுக்கும் இரண்டகர்களே! உங்களுக்கும் சாவு வந்தே தீரும். அப்போது சுடலை உங்களுக்கும் சொந்தமாகும். உங்களால் காட்டிக் கொடுக்கப்பட்டோர் போற்றலுக்கு உரிய வீரச் சாவடைய, நீங்கள் தூற்றப்பட்டு இழிக்கப்பட்டு இறப்பீர்கள் என்ற உண்மையை அவர்களது உள்ளத்தில் உறைக்கும்படி பாடுகிறான். 'சேருமிடம் என்னவோ கல்வாரி தானே' கடைசியில் நீயும் சேருமிடம் சுடலை தான். அதை உணர்ந்தாவது திருந்து என்று எச்சரிக்கிறான்.

தமிழினம் பெயர் சூட்டிக் கொள்வதில் எப்பவுமே சிந்தனையற்று வாழ்கிறது. இருபதாம் நூற்றாண்டின்போது தமிழருடைய பெயர்கள் இல்லாத சமயமாகிய இந்துசமயத்தின் ஆதிக்கத்தால் கடவுட் பெயர்களாகவே இருந்தன. அதனால், மேலும் சமயத்தின்மீது தங்கியிருந்து தம்மையிழந்தனர் தமிழர். பின் இடைக்காலத்தில் வடமொழி சார்ந்த பெயர்களைக் கொண்டார்கள். அதுவும் விழிப்புணர்வைத் தரும் தன்மையதாக அமையவில்லை. விடுதலைப் போர் தொடங்கியதன் கரணியமாக ஏற்பட்ட விழிப்புணர்ச்சியால் தாயகத்தில் பெயர்கள் நற்றமிழில் வளவன் செழியன் மாறன் எனறிவ்வாறாக இடப்பட்டன. ஆனால், புலம்பெயர் மக்களில் பெரும்பான்மையோர் தங்களது குழந்தைகளுக்கு டெனிசா டெனிசன் நதீஸ் என்றிவ்வாறாக பெயர் சூட்டுகின்றனர். இதைக் கண்டான் ஒரு கவிஞன். இதுவுமொரு இனவழிப்புச் செயல் என்று அவனது உள்ளம் துணுக்குற்றது. இதைத் தடுக்க வேண்டாமா? மக்களைத் திருத்த வேண்டாமா? தடுக்கவேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். எனவே, தனது உள்ளக் குமுறலைப் பதிவுசெய்கிறான்.

வெந்ததே சிந்தை

வாழையிளந் தளதளப்பும் வான்மதியின் ஒளிமுகமும்
வேழத்தெழு செம்மாப்பும் வேட்கத்தகு துணிதகவும்
செந்தமிழ்ச் சிறுசுகளின் சேர்வினிலே நான்கண்டு
சிந்தை மகிழ்ந்துருகச் சிறிதுநான் பார்த்தின்பக்
கொந்தளிப்பில் துள்ளி குறுகியக் குழந்தைகளை
வந்துங்கள் வாயாலே வளரும் மழலையிலே
சொல்லுங்கள் குறளென்று கொஞ்சுதமிழால் அழைத்தேன்
வந்தவர்கள் பெயரையவர் வாயாலே கேட்டிடவே
எண்ணித் துணிந்து எதுவுங்கள் பெயரென்றேன்
முல்லைப் பல்தெரிய மெல்லச் சிரிப்பெடுத்து
கள்ளமில்லா உள்ளத்து களிப்பதிலே மிதந்துவர
எல்லையில்லா இன்பத்தை என்மனதிற் குடியேற்றி
சொன்னார்கள் பாதுசா சபீனா ஜொமீல் என்று
இசுலாம் குழந்தைகளும் இனியதமிழ்ச் செல்வம்தான்
நன்று நன்று எனமகிழ்ந்து நானவர்கள் தந்தைபெயர்
நசுருதீன் அப்துல்லா நவாப் ஆயிருக்குமென்று
அப்பாபேர் கேட்டேன் அமுதாய் பொழிந்தார்கள்
அண்டம் அதிர்ந்ததோ அணுகுண்டு வீழ்ந்ததோ
அறியேன் கதிகலங்கி ஐம்புலனும் அடங்கியது
பக்கத்திருந்த நண்பர் பார்த்தார் என்நிலையை
ஒக்கப் புலனைந்தும் ஒடுங்கிப் பெருந்தவத்தில்
முக்குளித்துப் போயுள்ளார் மூச்சோ முனகலில்லை
என்றேங்கி என்னண்ணா என்றென்னைத் தட்டவுமே
விண்ணிருந்து மண்வீழ்ந்து வெந்ததடா சிந்தையென்றேன்
சுந்தருக்கும் சுகந்தனுக்கும் சுப்பிரமணி யத்துக்கும்
வந்துதித்த செல்வங்கள் வைத்திருக்கும் பெயரைப் பார்
என்றுநான் எடுத்துரைக்க ஏங்கிச் செயலிழந்தார்

ஐயோ தமிழா! அடிமடையா! முட்டாளே!
பிள்ளைக்குப் பெயர்வைக்க பைந்தமிழில் பெயரின்றி
என்னென்று தெரியாமல் எப்படியோ ஸ்ரைல் என்று
கன்னா பின்னாவாய் கருத்தின்றிப் பெயர்வைத்து
இன்னாரென் றெதிர்காலம் அறியாமற் தடுமாறி
மற்றோர் அகதியாய் மாறுவாய் இருந்துபார்

- தாமரைக்கண்ணன்

இலங்கைத்தீவிலே தமிழர் இனவழிப்புக்கு உள்ளாக்கப்படுவதைக் கண்டு குமுறுகின்ற, அரச அரட்டுகோன்மைக்கு எதிராகக் குரல் கொடுக்கின்ற, தமிழீழ விடுதலைக்காக எதையும் இழக்க அணியமாயிருக்கின்ற புலம்பெயர் தமிழர்கள் தம்மையும் அறியாமல், இனவழிவுக்குத் துணைபோகின்றார்களே என்று குமுகாயக் கண்ணோட்டத்தில் தன் கவிதையைப் பதிவு செய்கிறான் கவிஞன் தாமரைக்கண்ணன். நல்ல தமிழ்ப்பற்றும் பண்பாடும் கொண்ட இவர்கள் தங்கள் குடிதொடரும் மழலைச் செல்வங்களுக்குச் சூட்டுகின்ற பெயர்களைக் கண்டு கலங்குகிறான். தனது குடிவழியை, இனத்தை, பண்பாட்டை பேணுகிற பெயர்களைத் தமது பிள்ளைகளுக்குச் சூட்டாமல் என்ன பொருள் என்றே தெரியாத பெயர்களைச் சூட்டுவதும், பொருள் பிடிபடாவிட்டாலும் நாகரிகமாய் இருக்கும் என்று வேற்றின மதப் பெயர்களை வைப்பதும் பெரும்பான்மையோரது இயல்பாகிவிட்டது.

அத்தகைய பெயர்களுடைய பிள்ளைகள் பிற்காலத்தில் தமிழர் என்று தம்மை அடையாளம் காட்டுவதில் இடர்ப்படலாம். அல்லாமலும் எம் இன்தமிழில் இனிய தமிழ்ப்பெயர்கள் இல்லையா என்று ஏங்குகிறான். வாழிடமொழியின் தாக்கம் எம் இளந்தலைமுறையினர் மீது கல்வி மூலம் மேலாண்மை செலுத்துகிறது. இந்நிலையில், பெயரும் தமிழாய் இல்லாமலிருப்பது எத்தகை இழிவிற்குரியது. பெயரானது வெறும் அடையாளக் குறியீடு அல்ல. அது ஒரு மந்திரம். எண்ணித் தெளிந்து சூட்டப்படும் பெயர்கள் திரும்பத் திரும்ப அழைக்கப்படும்போது பிள்ளையின் உள்ளத்தில் ஆழப் பதிகிறது. பிள்ளை அப்பெயரை உணர உணர அப்பெயர் குறிக்கும் பொருளினுள் ஆளுமை வளர்கிறது. இதை அறியாமல் பிள்ளைக்குப் பெயர் வைப்பது அதனுடைய இனவாளுமையை அழிக்கும். அப்பெயரைக் கேட்பவர்கள் இவர் எந்த இனத்தவர் என்று எண்ணுவர். இன்றைக்கும் தென்னாபிரிக்காவில் வாழுகின்ற தமிழர் தமிழை மறந்துவிட்ட போதிலும் தம்மைத் தமிழரென்று இனங்காட்ட முடிகிறது. கரணியம் அவர்கள் தூய தமிழ்ப்பெயரைக் கொண்டிருக்கின்றனர். எனவே, எம் இளைய தலைமுறையினர் தங்கள் பெயரை தமிழில் சூட்டவேண்டும். பெற்றோரால் சூட்டப்பட்ட பெயர்கள் அப்படித் தமிழ்ப்பெயராக இல்லையேல் அத்தகைய பெயர்களை தமிழுக்கு மாற்றிக்கொள் என்பது இவனின் அறிவுரை.

இவ்விதமாக பல்வேறு கரணியங்களால் குமூகக் கோலங்கள் காலத்திற்குக் காலம் மாறுகின்றன. அரசியல், கல்வி, பொருளியல் போன்ற கரணியங்களால் இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன. ஈழத்தமிழரைப் பொறுத்த வரையில் இந்தமாற்றங்கள் அனைத்தும் சிலசமயம் நலன் விளைப்பதுபோல் தோன்றினாலும், பெரிதும் குமூகக்கேட்டையே விளைவிக்கின்றன. தாய்மண்ணிலே திட்டமிடப்பட்ட கலையொழுக்கச் சீர்கேடுகள்: அடிமைப்பட வைக்கும் மேலாண்மைச் செயல்களால் இளைஞரிடையே ஆளுமை அழிதல்: புலம்பெயர் நாடுகளில் கல்விமொழி மாற்றத்தால் விளையும் சிந்தனைக் குழப்பங்கள் : புதிய தலைமுறையினரிடம் தோன்றுகிற வாழிடக் கலப்பினால் விளையும் பண்பாட்டு மாற்றங்கள் என பல்வேறு வகையான குமூகக்கேடுகள் விளைகின்றன. எனவே, காலத்தின் தேவையால் தோன்றும் கவிதைகளை நாம் வரவேற்பது மட்டுமல்ல, அவற்றுள் பொதிந்துள்ள எண்ணங்களை நாம் கற்று உணரவேண்டும்.

சொற்பொருட் குறிப்பு

கடல்பிறக்கோட்டி	- கடலைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு மரக்கலம் செலுத்தி.
அரட்டுகோள்	- பயங்கரவாதம்.
அரட்டுகோன்மை	- அரசபயங்கரவாதம்,
சாணக்கியம்	- ஆரியரின் அரசியல் நூல்.
மனுநீதி	- நால்வருணத்தை அடிப்படையாகக் கொண்டு திராவிடரைத் தாழ்த்த எழுதப்பட்ட ஆரியச் சட்டநூல்.
பேரஞர்	- பெருந்துன்பம்.
கோடரிக்காம்பு	- கோடரியின் கைப்பிடி மரத்தாலானது. அது தன்னின மரத்தை வெட்டத்துணை செய்வது.

வினாக்கள்

1. உலகநாடுகள் தமிழீழவிடுதலைப் போராட்டத்தை ஏன் நசுக்க விரும்பின?
2. தமிழர்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட சிங்கள அரச அரட்டுகோள் பற்றி விளக்குக.
3. எத்தகைய சூழலில் இனமானக் கவிஞர்களின் கவிதைகள் எழுந்தன?
4. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆரிய ஏமாற்றுக் கொள்கைகளை எதிர்த்த கவிஞன் யார்? எவ்வாறு எதிர்த்தான்?
5. கனக சுப்புரத்தினத்தின் கவிதைகள் எவற்றை எதிர்த்து எழுதப்பட்டன?
6. சனல் ஃபோர் காணொளிக் காட்சி பற்றி கவிஞன் எவ்வாறு வண்ணிக்கிறான்?
7. ‘நேரம் இதுதான்’ என்ற கவிதையில் கவிஞனின் அறைகூவல் என்ன?
8. மக்கள் சக்தி எப்படிப்பட்டது? விளக்குக.
9. யூதாசையும் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த இரண்டகர்களையும் கவிஞன் ஒப்பிடும் வகையை விளக்குக.
10. ‘வெந்ததே சிந்தை’ என்ற கவிதையில் குறிப்பிடப்படும் இனவழிப்புச் செயல் எது?
11. கவிஞன் தாமரைக்கண்ணனின் ஏக்கம் என்ன?
12. இப்பாடத்திலுள்ள கவிதைகளில் உமக்குப் பிடித்த கவிதை எது? ஏன்?

மொழிவளம் - கட்டுரை எழுதுதல்

பனுவல்கள் எழுதுதலில் செய்யுள்நடை மறைந்து உரைநடை வளர்ச்சி அடைந்ததினால், கட்டுரை எழுதுதல் இக்காலத்தில் தனிச்சிறப்புப் பெறுகிறது. ஒரு மொழிப்பயில்வின் முதன்மைப் பயன், ஒருவர் தனது கருத்தை பிறருக்கு எடுத்துக்கூறுவதாகும். எனவே, கட்டுரை கருத்துத் தெளிவாகவும் நயப்புடனும் பிறரை ஈர்க்கும் வண்ணம் அமைதல் வேண்டும். அவ்வகையில் கட்டுரை கூறப்புகும் கருத்தை தெளிவுறக் கோவைப்படுத்திக் கூறுதல் வேண்டும்.

கட்டுரை மூன்று முதன்மைப் பிரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். எடுப்பு அல்லது தோற்றுவாய், தொடுப்பு அல்லது உள்ளீடு, முடிப்பு என்பன அவையாகும். எடுப்பு முதலாவது பந்தியாகும். எடுத்துக்கொண்ட தலைப்பை அறிமுகப்படுத்தும் வகையில் அமையும். தொடுப்பு எடுத்துக்கொண்ட தலைப்பை விளக்க அல்லது உறுதிசெய்ய பல விளத்தங்களை (விடயங்களை) ஒழுங்குபடுத்தி பல பந்திகளாகத் தொகுத்துக் கூறும் பகுதி. முடிப்பு மேலே கூறப்பட்ட கருத்துக்களை சான்று காட்டி நிறுவி, கருத்தைப் பிறர் ஏற்கும்படி வலியுறுத்தும் பகுதி.

கட்டுரை எழுதுமுன், சொல்லப்போகும் விளத்தம் பற்றி ஒழுங்குபடுத்திய சட்டகம் ஒன்று அமைத்தல் வேண்டும். அதனடிப்படையில், தொடர்ந்து எழுதினால் கட்டுரைக் கருத்துத் தொடர்பறாமல் அழகுற முடியும்.

கட்டுரை வகைகள்

எழுதப்படும் பொருளின் அடிப்படையில் கட்டுரைகளை பின்வரும் வகைகளாகப் பிரித்துள்ளனர்.

வண்ணனைக்கட்டுரை (வருணனை)

கண்ட ஒருகாட்சியை அழகுற வண்ணித்துக் கூறும் கட்டுரை.

வரலாற்றுக் கட்டுரை

ஏதேனும் ஒன்றின் வரலாற்றை அல்லது தன்வரலாற்றைக் கூறுவது.

விளக்கக்கட்டுரை

அறிவியல், அரசியல், குமூகநிலை போன்ற எடுத்துக்கொண்ட பொருளை விளக்கி எழுதுவது.

திறனாய்வுக் கட்டுரை (விமர்சனக்கட்டுரை)

வாசித்த அல்லது கண்டுணர்ந்த நிகழ்வு பற்றிய நன்றுதீது ஆய்ந்துரைக்கும் கட்டுரை.

கற்பனைக்கட்டுரை

ஏதாவது ஓர் எண்ணம் பற்றி, குறிக்கோள் பற்றி, எதிர்காலம் பற்றி கற்பனை செய்து எழுதுவது. கட்டுரை எழுதும்போது நீக்கப்படவேண்டிய குற்றங்கள்,

சேர்க்கப்படவேண்டிய அழகுகள் பற்றி நீங்கள் ஆண்டு பத்தில் கற்றுள்ளீர்கள். அவற்றை மனதிற் கொண்டு கட்டுரை எழுதும் பயிற்சியை மேற்கொள்க.

கட்டுரைப் பயிற்சி

சில கட்டுரைகளுக்கு எடுப்புத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக, வண்ணனைக் கட்டுரை. வண்ணனைக் கட்டுரை எழுதும்போது வாசிப்பவரது உள்ளத்தைக் கவரும்படியான சொல்லாட்சியைக் கையாளவேண்டும். வாசிப்பவரது மனதில் கட்டுரையை வாசிக்கும்போது காட்சி உருவகமாக வேண்டும். அப்படி உருவாகினால் தான் அது சிறந்த வண்ணனைக் கட்டுரையாகும். வெறுமனே சொற்களைக் கோத்து எழுதினால் அது கட்டுரையாகாது.

வண்ணனைக் கட்டுரை

காலைக்காட்சி

சட்டகம்

அ. காகங்கரைதல் - சேவல் கூவுதல் - விடிவெள்ளி- மெல்லென இருள் விலகல்.

ஆ. கிழக்குவானம் வெளுத்தல் - மெல்லிளந்தென்றல் - புதுமலர்கள் - உலாவுதல்.

இ. மக்கள் துயிலெழல் - மாணவர்கள் கற்றல் - இறைநெறிப்பாடல் ஒலித்தல் - அனைவரும் சுறுசுறுப்படைதல்.

ஈ. அவரவர் தத்தம் தொழில்களுக்கு விரைதல்.

உ. மக்களது அயர்வு நீங்கிய ஆரவாரம், மனமகிழ்வு.

இதேபோன்று வண்ணனைக் கட்டுரைகள் எழுதும்போது சட்டகம் அணியம் செய்து, காட்சிகளைத் தொடர்புபடுத்தி எழுதுக.

விளக்கக் கட்டுரை

நூலகத்தின் பயன்பாடுகள்

சட்டகம்

அ. எடுப்பு	- நூலகம் என்றால் என்ன? நூலகம் கொண்டுள்ள பொருட்கள்.
ஆ. தொடுப்பு	- நூலகம் ஒரு குமுகக் குரல் - சிந்தனைக்களஞ்சியம் - எதிர்காலத்தவருக்கான தேட்டம்
	- நூலகத்தின் பயன்பாடுகள் - நாளிதழ் வாசிப்பு, அறிவியல் செய்திகள், மாணவருக்கான பாடநூல், ஆய்வாளருக்கான உசாத்துணை, பயன்தரு பொழுதுபோக்கு, அறிவுப்பெருக்கு.
இ. முடிப்பு	- நூலகத்தைப் பயன்படுத்துதலும் பேணுதலும் - நூலகத்துக்கான ஒவ்வொருவரினதும் கடமை.

இச்சட்டகத்தில் எடுப்பு இடம்பெற்றிருப்பதை நோக்குக. இவ்விதமாகவே நீங்கள் தேர்ந்தெடுக்கும் கட்டுரைக்கு ஏற்றவகையில் சட்டகத்தை அமைத்து கட்டுரையை எழுதப் பயிலுங்கள்.

இலக்கணம் - சொற்புணர்ச்சி

புதிய சொல் உருவாக்கத்திற்கும் கருத்துத் தெளிவிற்கும் கருத்துச்செறிவிற்கும் மொழியழகிற்குமாகச் சொற்கள் ஒன்றோடொன்று புணர்கின்றன. இதைச் சொற்புணர்ச்சி என்பர்.

சொற்புணர்ச்சி இயல்புப்புணர்ச்சி, மாறுபடுபுணர்ச்சி என இருவகைத்து. மாறுபடுபுணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைத்து.

இயல்புப் புணர்ச்சியானது நிலைமொழி இறுதி எழுத்தும் வருமொழி முதல் எழுத்தும் எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகவே புணர்வது.

மாறுபடு புணர்ச்சியில் தோன்றலானது, புணரும் இருசொற்களுக்கும் இடையில் வேறோர் எழுத்து இடம்பெறுதல். திரிதலானது, இருசொற்களும் புணரும்போது நிலைமொழியிலோ வருமொழியிலோ ஒரெழுத்தோ ஈரெழுத்தோ ஒலித்திரிபு (ஒலிமாற்றம்) அடைதல். கெடுதலானது இருசொற்களும் புணரும்போது ஓரெழுத்து மறைதல்.

சொற்கள் புணரும்போது நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் இடம்பெறும் எழுத்துகளைக் கொண்டு புணர்ச்சி நான்காக அமையும்

அவை
உயிர் முன் உயிர் புணர்தல்
உயிர் முன் மெய் புணர்தல்
மெய் முன் உயிர் புணர்தல்
மெய் முன் மெய் புணர்தல் என்பனவாகும்.

உயிர் முன் உயிர் புணர்தலாவது, நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும் உயிரெழுத்தாக இருந்து புணர்தலாகும். எனினும், புணரும்போது ஓர் உயிர் கெடுமாயின் அது உயிர் முன் உயிர் புணர்தல் அல்ல. புணரப்பட்ட சொல்லில் இரண்டு உயிர்களும் தத்தம் இடத்தில் இருக்க, இடையில் உடம்படுமெய் அல்லது உடன்படுமெய் தோன்றினால் மட்டுமே, உயிர் முன் உயிர் புணர்தல் என்ற விதிக்குள் அடங்கும்.

எ - கா: பந்து + அடி = பந்தடி. இங்கே நிலைமொழி உகரம் கெட்டது
மா + இலை = மாவிலை. இங்கே இரு உயிர்களும் இருக்க வகரமெய் தோன்றியிருப்பதைக் கவனிக்கவும்.

புணர்ச்சி இருவகை

அவை:- வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப்பணர்ச்சி என்பன.

வேற்றுமைப்புணர்ச்சி என்பது பெயர்ச்சொல்லோடு வேற்றுமை உருபுகள் புணர்தலாகும். நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே முதலாம் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் தவிர்ந்த ஏனைய ஐ, ஆல், கு, இன், அது, கண் என்ற ஏதாவது ஒரு வேற்றுமை உருபு வெளிப்பட்டோ மறைந்தோ வரும் புணர்ச்சி வேற்றுமைப்புணர்ச்சி எனப்படும். சொற்றொடரில் வேற்றுமையுருபு மறைந்துவரின் வேற்றுமைத்தொகை எனவும் தோன்றிவரின் வேற்றுமைவிரி எனவும் கூறுவர்.

எ -கா

வேற்றுமைத் தொகை	வேற்றுமை விரி
1. உணவு உண்டான். இரண்டாம் வேற்றுமைத் தொகை	உணவை உண்டான்.
2. தலை வணங்கினான். மூன்றாம் வேற்றுமைத் தொகை	தலையால் வணங்கினான்.
3. கூலி வேலை நான்காம் வேற்றுமைத் தொகை	கூலிக்கு வேலை
4. மலைவீழருவி. ஐந்தாம் வேற்றுமைத் தொகை	மலையினின்றும் விழும் அருவி
5. தமிழர் பண்பாடு ஆறாம் வேற்றுமைத் தொகை	தமிழரது பண்பாடு
6. தலைமயிர் ஏழாம் வேற்றுமைத் தொகை	தலையின்கண் மயிர்

அல்வழிப்புணர்ச்சி என்பது வேற்றுமை அல்லாத வழிகளிற் புணர்வது. சொற்கள் தொடர்ந்து வரும்போது அவற்றினிடையே இடைச்சொற்களில் ஏதாவது ஒன்றோ இரண்டோ மறைந்துநின்று பொருள் தந்து, ஒரு சொல் போல வருமாயின் அவை அல்வழித்தொகை எனப்படும். இவை வெளிப்பட்டு நிற்பின் அல்வழித்தொகாநிலைத்தொடர் என்பர்.

அல்வழிப்புணர்ச்சி ஐந்து வகை.
அவை:- வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி இவற்றை உணர்த்தி பெயரொடு புணர்தலாகும்.

விளக்கத்தைக் கற்றல் இலக்கண நூலில் காண்க.

தென்றல் வரவு

பழந்தமிழர் இயற்கையோடிணைந்து இன்பந் துய்த்து வாழ்ந்தனர். இயற்கையின் இனிய இயல்புகளை நுணுகி ஆராய்ந்து அதற்கேற்பத் தமது வாழ்வை அமைத்துக் கொண்டனர். அதன்வழிதான் நானிலங்களை வகுத்து, நிலவியல்புகளுக்கு ஏற்ப வாழ்வை அமைத்தனர். அவர்கள் நிலவியற்கையை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என வகுத்தனர். அதையே தான் முறைப்பட எண்ணிய தொல்காப்பியர், முதற்பொருள் என நிலத்தையும் பொழுதையும் கொண்டார். நிலங்களை வகுத்து வாழ்ந்த பழந்தமிழருக்கு வாழ்க்கையின் பொருள்முதலாக இருந்தது நிலமும் பொழுதுமே. முதற்பொருளின் பின்புல அடிப்படையில் அமைந்த கருப்பொருளாகிய நிலைத்திணைகளும் விலங்குகளும் அமைந்ததற்கு அமைய, தொழிலும் பொருளியலும் கலைகளுமாகிய உரிப்பொருளில் வாழ்வு மலர்ந்தது. இயற்கையை ஒட்டியே ஆண்மையும் பெண்மையும் நிகரெனக் கொண்டு, ஒருத்தனுக்கு ஒருத்தியாய் ஈருடல் ஒருயிராய் காதலில் திளைத்து, கல்விகேள்விகளால் உயர்ந்து வாழ்ந்தனர்.

பழந்தமிழர்கள் தாங்கள் வகுத்துக்கொண்ட நிலங்களுக்கும் பொழுதுக்கும் பெயரிட்ட பாங்கு அவர்களுடைய மதிநலத்தைப் பறைசாற்றும். பன்னீர் ஆண்டுகளுக்கு ஒரு முறை குன்றுகளில் பூக்கும் பூ குறிஞ்சியாகும். அத்தகைய அரிய குறிஞ்சி பூத்தலின் குன்றுப்பகுதி குறிஞ்சி நிலமாயிற்று.

அதேபோன்று முல்லையின் காட்டில் கார்காலத்து மலரும் முல்லைமலர் தான் மலரும் நிலத்திற்குப் பெயராயிற்று.

மருதம் நீர்வளம் மிக்குள்ளதால், அங்கு செழித்து வளரும் மருதமரத்தில் எக்காலமும் மலரும் மருதமலரின் பெயர் மருத நிலத்திற்காயிற்று.

கடலோரக் களப்புகளில் மிகுதியாக நீலம் எனும் நெய்தல் மலர்வதால் கடல்சார் நிலத்திற்கு அது பெயராயிற்று.

குறிஞ்சியும் முல்லையும் வளங்குறைந்து தம் இயல்பு மாறும்பொழுது பாலை என்றொரு வரண்ட நிலம் தோன்றும். நீரின்றி வரண்டு கிடப்பதால் இலைகளுள்ள நிலைத்திணைகள் வளர்வதற்கு வாய்ப்பில்லை. எனவே, பாலைகளில் வெறும் தண்டுச் செடியாகிய கள்ளிச் செடிகளே வளரும். அவை தங்களுக்கு வேண்டிய நீரைப் பாலாகத் தம் தண்டிலேயே சேர்த்து வைத்துக் கொள்கின்றன. எனவே, அவை காரணியப் பெயராகப் பாலை எனப்பட்டன. பாலைப்பூ மிகுந்து மலர்வதால் அந்நிலம் பாலை எனப்பட்டது.

இவ்வாறு பழந்தமிழ் மக்கள் தாம் வாழும் நிலத்திற்கு அந்நிலத்திற்குரிய மலர்களால் பெயர் சூட்டியிருப்பது, அவர்தம் இயற்கையைப் போற்றும் இனிய அழகியற் பண்பாட்டையும் எண்ணத் தெளிவையும் காட்டுகிறது. இதை எண்ணில் சிந்தையும் மனமும் மகிழ்வால் குளிர்கின்றன.

பொழுதுக்குப் பெயரிட்ட மதிநுட்பமும் வியக்கத் தக்கதே. பொழுதை சிறுபொழுது பெரும்பொழுது என்று இரண்டாக வகுத்தனர். சிறுபொழுது ஒரு நாளிலும் பெரும்பொழுது ஓர் ஆண்டிலும் அடங்கும்.

சிறுபொழுதை மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு என ஆறாக வகுத்தனர். பெரும்பொழுதை கார், கூதிர், இளவேனில் முதுவேனில், முன்பனி, பின்பனி என ஆறாக பகுத்தனர். ஒவ்வொரு பெரும்பொழுதும் இரண்டு திங்களைக் கொண்டது. அந்தந்தப் பெரும்பொழுதின் இயற்கைக் காலநிலையின் தன்மையைக் கொண்டே இவ்வாறு பெயர் சூட்டினர். இதில் தென்றலுக்கு உரிய காலம் இளவேனிற் காலமாகிய சித்திரை, வைகாசித் திங்கள்களாகும். இளவேனில் என்றால் முதிராத மென்மையான வெப்பமுடைய வெய்யிலுள்ள காலம்.

அதுபோலவே அந்நிலங்களில் வீசும் காற்றுகளுக்கு வழங்கியுள்ள பெயர்களும் அவர்களது மதிநுட்பத்தைக் காட்டுகிறது. வடக்கிலிருந்து வீசுவது வாடை. தெற்கிலிருந்து வீசுவது தென்றல். மேற்கிலிருந்து வீசுவது கோடை. கிழக்கிலிருந்து வீசுவது கொண்டல்.

இவற்றுள் தென்றற்காற்று மேனிக்கு இதம் தரும் இளவேனிற் காலக் காற்றாகும். இத்தென்றலைப் பற்றிக் கழகப் புலவர்கள் தொட்டு, இன்றைய பாவலர்கள் வரை அருமையாக இனிமை சொட்டப் பாடியுள்ளனர்.

புரட்சிப் பாவலன் பாவேந்தர் கனக சுப்புரத்தினம் தென்றல் பற்றி....

தென்னாடு பெற்ற செல்வத்
தென்றலே உன் இன்பத்தை
தென்னாட்டுக்கு அல்லால் வேறு
எந்நாட்டில் தெரியச் செய்தாய்.

என்று வினாவெழுப்பி, தென்றல் தென்னாட்டுக்கே உரியது எனப் பெருமுகிறார்.

நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே

என்று கவிஞர் கண்ணதாசன் தென்றல் வருகையை ஒரு அழகியலாகப் பாடுகிறார்

தாலாட்டில். ஆற்றின் வெள்ளத்திலே நீர்விளையாடி தண்ணெனக் குளிர்ந்து, மலர்க்கொடிகளிலே நுழைந்து தலைவாரி மலர்மணங்களைக் காவிக் கொண்டு, மெல்ல அசைந்து வருகிறதாம் தென்றல். என்னே புனைவு! இவ்வாறு இன்றைய பாவலர் பழகுந்தமிழில் பாடினாலும், கழகக்காலப் புலவர்களின் புனைவுகள் வேறானவை. இயற்கையோடிணைந்த பட்டறிவுகளையும் சுவைப்பையும் காட்சிகளினூடாக வாழ்க்கையோடு இணைத்து அருமையுற ஓவியமாகப் புனைந்து தந்துள்ளனர்.

தமிழின் தன்னிகரற்ற காப்பியமான நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் தென்றலின் வருகை பற்றி மூன்று இடங்களில் பேசுகிறது. முதலாவதாகக் காப்பியத் தலைவன் கோவலனும் காப்பியத் தலைவி கண்ணகியும் மன்றலின் (திருமணம்) பின் புதுமனை புகுத்தப்படுகின்றனர். அவர்கள் பல்லடுக்குக் கொண்ட உயர்ந்த மாடத்தின் நடுமாடத்தில் இருந்த வேளையில், அங்கே தென்றல் வந்த பாங்கை மனையறம் படுத்த காதையில் இளங்கோவடிகள் அருமையாக வண்ணித்துள்ளார்.

கழுநீர் ஆம்பல் முழுநெறிக் குவளை
அரும்பு பொதியவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை
வயற்பூ வாசம் அளைஇ, அயற்பூ
மேதகு தாழை விரியல் வெண்டோட்டுக்
கோதை மாதவி சண்பகப் பொதும்பர்
தாது தேர்ந்துண்டு மாதர் வாண்முகத்து
புரிகுழல் அளகம் புகலேக்குற்று
திரிதரு சுரும்பொடு செவ்வி பார்த்து
மாலைத் தாமத்து மணிநிரைத்து வகுத்த
கோலச் சாளரக் குறுங்கண் நுழைந்த
வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்
கண்டு மகிழ்வெய்திக் காதலில் சிறந்து

பாடற் சொற்பிரிப்பு

சுரும்பிமிர் - சுரும்பு இமிர். வெண்டோடு - வெண்மை தோடு. வாண்முகம் - வாள் முகம். புகலேக்குற்று - புகல் ஏக்குற்று. மகிழ்வெய்தி - மகிழ்வு எய்தி.

பாடற் சொற்பொருள்

முழுநெறி - முழுமைபெற்ற. அரும்பு - மொட்டு. சுரும்பு - வண்டு. இமிர் - மொய்த்த. அளைஇ - அளைந்தபடி. மேதகு - சிறப்புடைய. விரியல் - விரிவு. பொதும்பர் - ஊர்ப்பூங்கா. வெண்டோடு - வெள்ளை இதழ். தோடு - பெரும் பூவிதழ். தாது - பூந்தாது (மகரந்தம்). வாண்முகம் - ஒளிமுகம். புரிகுழல் - சுருண்ட கூந்தல். அளகம் - கூட்டிக் கட்டிய கூந்தல். புகல் - நுழைதல். ஏக்குற்று - விரும்பி. செவ்வி - அமையம் (சந்தர்ப்பம்). தாமம் - கயிறு, நூல். குறுங்கண் - சிறுதுளை. புக்க - நுழைந்த. மணவாய் - மணம்பொருந்திய. எய்தி - அடைந்து.

பொழிப்புரை

செங்கழுநீர், செவ்வாம்பல் நன்றாக மலர்ந்த குவளை (நெய்தல்-நீலோற்பலம்) மொட்டவிழ்ந்து வண்டுகள் மொய்க்கின்ற தாமரை, வயல்களிலே மலர்ந்திருந்த மலர்கள் ஆகிய நீர்ப்பூக்களின் வாசத்தை அளைந்துகொண்டு வந்த தென்றல், நீர்நிலைகளுக்கு அப்பால் உள்ள பூக்களையும், சிறப்புடைய விரிந்த தாழம்பூ, வெண்ணிற இதழ்களையுடைய கோதையாக மலரும் மாதவிக் கொடியின் பூ, சண்பகப்பூங்காவிலுள்ள சண்பகமரத்தின் பூ இவற்றிலெல்லாம் தேர்ந்து தேனையுண்டு, மங்கையரின் ஒளிபொருந்திய முகத்தைச் சூழ்ந்துள்ள கூந்தலில் போய் அதன் வாசத்தையும் பெற்று இன்புறப் பேரவாக் கொண்டு, கண்ணகி இருந்த மாடத்தின் உள்ளே நுழைவதற்குச் சுற்றிச் சுழன்று திரிந்த வண்டு, அழகிய மாலைக்குரிய கயிற்றினால் நிரைநிரையாகக் கோத்து மணிகளால் ஆக்கப்பெற்ற அழகிய சாளரத் திரையைத் துளைத்துக் கொண்டு உள்ளே செல்ல, அமையம் பார்த்திருந்த நறுந் தென்றலும் நுழைந்தது. அவ்வாறு வந்த நறுமணத் தென்றலின் தழுவலால் பெருமகிழ்வு எய்திய கோவலனும் கண்ணகியும் காதலில் மூழ்கினர். இவ்விதமாக இனிய தென்றலை வண்டொடு உள்ளே விட்ட இளங்கோவடிகளின் இயற்கையின் வண்ணனை, எண்ணி இன்புறத் தக்கது.

நீர்நிலைகள் எங்கும் செங்கழுநீர், ஆம்பல், குவளை, வண்டுகள் மொய்த்ததால் விரிந்த தாமரைப் பூக்களும் மலர்ந்திருக்கின்றன. நீர் நிறைந்த வயல்களில் வேறுபல மலர்களும் மலர்ந்துள்ளன. அந்த மலர்களில் எல்லாம் காற்று, வாசத்தை அளைந்துகொண்டு நறுமணத்தோடு வருகிறது. நீர்நிலைகளுக்கு அயலில் உள்ள நிலத்தில் தாழை, மாதவி, சண்பகம் போன்ற மலர்கள் மலர்ந்துள்ளன. இந்த நிலப்பூக்களில் நன்றே தேனருந்திய வண்டுகள், பெண்களுடைய கூந்தலில் இருந்து வீசுகிற வாசனையை நுகர்ந்து, அந்த வாசனை வீசுகிற கூந்தலை அடைய ஆசைப்பட்டு சாளரங்களில் தொங்குகிற திரைச்சீலையை துளைத்துக்கொண்டு செல்கின்றன. இவ்வளவு நேரமும் வீசிய நறுமணக்காற்றும் அத்துளைகளினூடே நுழைகிறது. அந்த வாசனைத் தென்றல் வந்து மேனியிற் பட உள்ளிருந்தோர் மணம் மகிழ்ந்தனர்.
(இவ்விடத்திலே பழந்தமிழ் அறிவியல் ஒன்றைக் காட்டுகிறார். வண்டு தரைப் பூக்களில் தேனருந்தி இனப்பெருக்கத்துக்கான தாதுச் சேர்க்கையைச் செய்கிறது. அதனால், வண்டைத் தேனருந்த நிலப்பூக்களில் விட்டவர் காற்றை நீர்ப்பூக்களில் விட்டார். நீர்ப்பூக்களின் இனப்பெருக்கம் மகரந்தச் சேர்க்கையால் ஏற்படுவதில்லை. நிலக்கீழ்க் கிழங்கினாலேயே ஏற்படுகிறது)

புறஞ்சேரி இறுத்த காதையிலும் வேறொரு தென்றலின் சிறப்பைக் கூறுவார்.

புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பின்
பொதிகைத் தென்றல் போலாது ஈங்கு
மதுரைத் தென்றல் வந்தது காணீர்.

பாடற் சொற்பொருள்

பொதிகை - பொதிகைமலை. செந்நா - செம்மையான நா. நிவப்பு - பெருமை,சிறப்பு. ஈங்கு - இங்கு.

புலவர்களுடைய தமிழ் தவழும் செம்மையுடைய நாவினால் பாடப்பட்ட பொதிகை மலையின் தென்றல் போல் அல்லாது, தமிழ் செழிக்கும் மதுரையிலே தமிழ் மணக்க வருகிறது மதுரையின் தென்றல் அறியுங்கள் என்று நயம்படக் கூறுகிறார். தென்றல் தவழும் இடத்திற்கேற்பத் தென்றலைப் பாடியுள்ளார். ஊர்காண் காதையில் தென்றலின் இனிமையை வேறொரு வடிவில் காட்டுகிறார் இளங்கோவடிகள்.

கோதை மாதவி கொழுங்கொடி எடுப்ப
காவும் கானமும் கடிமலர் ஏந்தத்
தென்னவன் பொதியில் தென்றலொடு புகுந்து
மன்னவன் கூடல் மகிழ்துணை தழுவும்
இன்னிளவேனில் யாண்டுளன் கொல்

பாடற் சொற்பொருள்

கொழுங்கொடி - கொழுமை + கொடி. கொழுமை - செழிப்பு. கடிமலர் - நறுமலர். கடி- நறுமணம். கூடல் - மதுரைமாநகர்.

குறிப்பு :- இளவேனிலான் - தொன்மக் கதைகளின்படி இளவேனிற் காலத்திற்கு உரியவனான காதற்கடவுள், காமன் எனும் மன்மதன். அவன் மலர்க்கணை எய்து காதலரைக் கூடுவிப்பான்.

கோதையாய் மலரும் மாதவி இளந்தளிர்களை வீசிப் படர்ந்து மலரவும், சோலையும் காடும் நறுமலர்களைக் காவி நிற்கவும், பாண்டியனுடைய பொதிகை மலையிலிருந்து வரும் தென்றலொடு அவனுடைய மதுரை மாநகரிற் புகுந்து, தாம் தாம் இன்புற்றுத் தழுவுகின்ற துணைகளைத் தழுவி, காதலரை மகிழச் செய்கின்ற இனிய இளவேனிலான் (காமன்) மதுரையைத் தவிர வேறு எங்கேயுள்ளான் என்று மதுரை நகரத்துத் தென்றலை இளவேனிலுடன் இணைத்துக் கூறுகிறார்.

பழந்தமிழர்களுடைய இயற்கை வாழ்விலே இளவேனிற் காலம் உழைப்பொழிந்த காலம். அந்நாட்களில், இயற்கை சிலிர்த்துச் செழித்து மலர்ந்து தென்றலுடன் பேரின்பம் தரும் காலம். அக்காலத்தையே அவர்கள் மன்றலுக்கும் காதலுக்கும் ஏற்ற காலமாகக் கொண்டனர். அதனால், அக்காலத்தில் துணைவர்கள் விட்டுப் பிரியாது கூடியிருந்து இன்புறுவர். எனவே, அக்காலத்தில் இருபத்தெட்டு நாட்கள் இந்திரவிழா எடுத்தனர். இந்திரவிழா மதிக்கான விழா.

கழகத் தமிழான பரிபாடல் என்னும் நூலிலே புலவர் நல்லத்துவனார் இன்னொரு வகையான இயற்கையின் ஓவியத்தைத் தென்றலுடன் புனைந்து காட்டுவார். திருப்பரங்குன்றத்திலிருந்து தென்றல் புறப்பட்டு வரும் சிறப்பு அது.

குன்றின் அருவிதாழ் மாலைச் சுனை
முதல்வநின் யானை முழக்கங் கேட்ட
கதியிற்றே காரின் குரல்
குரல்கேட்ட கோழி குன்றதிரக் கூவ
மதநனி வாரணம் மாறுமா றதிர்ப்ப
எதிர்குதி ராகின் றதிர்ப்ப மலைமுழை
ஏழ்புழை யைம்புழை யாழிசை கேழ்த்தன்ன இனம்
வீழ்தும்பி வண்டொடு ஞிமிறார்ப்பச் சுனைமலர
கொன்றை கொடியிண ரூழ்ப்பக் கொடிமலர்
மன்றல் மலர மலர்காந்தள் வாய்நாற
நன்றவிழ் பன்மலர் நால நறைபனிப்பத்
தென்றல் அசைவ ரூஉம்செம்மற்றே யம்மநின்
குன்றத்தாற் கூடல் வரவு.

பாடற் சொற்பொருள்:

தாழ் - வீழ்கிற. சுனை - மலையருவி வீழ்கிற மலையிடை நீர்நிலை. கதியிற்றே - தன்மைத்தே, தன்மையாய். காரின்குரல் - இடிமுழக்கம். மதநனி - மதம் மிகுந்த. வாரணம் - யானை. அதிர்ப்ப - பேரொலி எழுப்ப. எதிர்குதிராகி - எதிரொலித்து. மலைமுழை - மலைக்குகை. ஏழ்புழை - ஏழுதுளை. ஐம்புழை - ஐந்துதுளை கேழ்த்தன்ன - ஒத்தாற்போல். வீழ்தும்பி - விரும்புகிற தும்பி. வீழ்தல் - காதல்கொள்ளல். அன்புசெய்தல். ஞிமிறு - தேர். கொடியிணர் - கோதையான பூங்கொத்து. ஊழ்ப்ப - முற்றாக மலர. மன்றல் - நறுமணம். நன்றவிழ் - நன்குமலர்ந்த. நால - தலைகவிழ. நறை - தேன். பனிப்ப - துளிசொட்ட. அசைவரூஉம் - அசைந்துவரும். செம்மற்றே - சிறப்புடைத்தே. சிறப்புடையதாய். அம்ம - வியப்பொலி. கூடல் - மதுரை. வரவு - வழி.

குன்றிலிருந்து அருவி வீழ்கிற சுனை உள்ள இடம் அது. ஒரு மாலைவேளை. தலைவனே! கார்மேகத்தின் முழக்கம் உன் யானையின் முழக்கத்தை ஒத்திருந்தது. அதனால், அந்த முழக்கக் குரலைக் கேட்ட கோழி அஞ்சிக் குன்றதிருமாறு கூவியது. அக்கூவல் ஒலி கேட்டு மதம் மிகுந்த யானைகள் மாறிமாறி அதிர முழங்கின. அம்முழக்கம் மலைக் குகைகளிலே மாறிமாறி எதிரொலித்தது. அதனால், ஏழ்துளைகளை உடையவும் ஐந்துளைகளை உடையவுமான குழல்களும் யாழும் ஒத்திசைத்தாற் போன்று முரலும், தம்மினத்தை விரும்புகிற இயல்புடைய தும்பிகளும் தேன்வண்டுகளும் தேர்க்களும் ஆரவாரித்தன. அந்த ஆரவாரத்தினால் சுனையுள் நின்ற செடிகள் எல்லாம் மலர, கொன்றை கொடிகொடியாக மலர்களைத் தொங்கவிட, கொடி மலர்கள் எல்லாம் நறுமணத்துடன் மலர, மலர்ந்த காந்தள் நறுமணம் வீச, நன்றாக மலர்ந்து அலராகும் மலர்கள் தலைகவிழ, அவற்றிலிருந்து தேன்துளிகள் சிந்தின. இந்நறுமணங்களை எல்லாம் சுமந்துகொண்டு தென்றல் அசைந்து வரும் சிறப்புடையது பரங்குன்றத்திலிருந்து கூடலுக்கு வரும் வழி. எத்தகைய அழகுடன் ஒரு குறிஞ்சிக் காட்சியைத் தென்றலுடன் பொருத்தித் தந்துள்ளார் புலவர்.

இவ்வாறு அகநானூறு, ஐந்திணை ஐம்பது போன்ற பல கழகநூல்களில் தென்றலின் வரவும் இனிமையும் அதன் பயனாக மக்கள் துய்த்த இன்பவாழ்வும் அழகுறப் பாடப்பட்டுள்ளன.

அன்று மட்டுமல்ல இன்றும் எம் தாயகத்தின் இளவேனிற் தென்றலின் இன்பத்தை மக்கள் நுகர்ந்தே வாழ்கின்றனர். முற்றத்து மாமரத்தின் கீழும் மல்லிகைப் பந்தரின் கீழும் சாய்மணை இருக்கையில் சாய்ந்திருந்து தென்றலைச் சுவைப்பவர்களை இன்றும் நாம் காணலாம்.

(கழக இலக்கியப் பாடல்களைக் படிப்பிக்கவேண்டிய கட்டாயம் இல்லை. ஆனால், உரைநடையில் காட்டும் காட்சியின் அழகைப் பாடலில் தான் காணலாம். எனவே, விரும்புபவர்கள் படித்துச் சுவைக்கலாம்)

வினாக்கள்:

1. தென்றல் அளைந்து வரும் மலர்களின் பெயர்களைத் தருக.
2. பழந்தமிழர் நிலங்களுக்கும் பொழுதுக்கும் பெயரிட்ட சிறப்பைக் கூறுக.
3. கவிஞர் கண்ணதாசனின் புனைவில் தென்றல் வந்த அழகை உமது மொழிநடையில் எழுதுக.
4. கோவலன் கண்ணகி இருந்த அறையில் நுழைந்த தென்றலின் சிறப்பைக் கூறுக.
5. காமன் என்பவன் யார்?
6. அறு சிறுபொழுதை விளக்குக.
7. இளவேனிற்கால இயற்கையை விளக்குக.
8. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.
   நால, நறை, கடி, சுரும்பு, மன்றல்
9. கள்ளிச்செடிக்குப் பாலை என்ற பெயர் வந்தது ஏன்?
10. ஊர்காண் காதையில் இளங்கோவடிகள் காட்டும் இளவேனிற் காட்சியை உமது மொழிநடையில் வரைக.
11. பழந்தமிழர் நிலங்களின் அடிப்படையில் வகுத்துக்கொண்ட முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவற்றை விளக்குக.
12. பழந்தமிழருடைய இயற்கை வாழ்விலே உழைப்பொழிந்த காலம் எது? ஏன்?

மொழிவளம் - பேச்சுவழக்கும் எழுத்துவழக்கும்

எல்லா மொழிகளிலும் பேச்சுவழக்கு எழுத்துவழக்கு என இருவகை காணப்படுகிறது. எனினும் மொழி ஒன்றுதான். குடியடர்த்தி, தொழிற்சூழல், கல்வி வாய்ப்புகள், குமூகத் தொடர்புகள் எனப்பல கரணியங்களினால் எழுத்துவழக்கின் செம்மை திரிந்து பேச்சுவழக்கு மொழியில் ஒலி திரிபடைகிறது. இதைக் கொச்சைமொழி என்பர். பழந்தமிழில் இதைக் கொடுந்தமிழ் என்பர். இதனால், ஒருமொழி பேசும் ஒரு நாட்டிற்குள்ளேயே பேச்சுவழக்கு பல்வேறு வகையாக மாற்றமடைகிறது. இதை வட்டார வழக்கு என்றனர். ஒருவட்டாரத்தில் பேசப்படும் சிலசொற்கள் மற்றொரு வட்டாரத்தில் வாழ்பவருக்குப் புரியாது. இவ்வட்டார வழக்குகள் நாட்டில் தொலைதூரங்களில் உள்ள பகுதிகளில் மிகக் கடுமையாக ஒலித்திரிபடைந்திருக்கும். சிலசமயம் அப்பகுதி மக்களின் பேச்சு நகர்ப்பகுதி மக்களுக்குப் புரியவே புரியாது. எனவே, ஒருமொழியில் இலக்கியங்களையும் கலைகளையும் அறிவியலையும் ஆவணப்படுத்தும்போது அம்மொழியின் செவ்வியல் வழக்குக் கையாளப்படுகிறது. அது எந்த வட்டாரவழக்கில் பேசினாலும் ஓரளவு கற்றவரான எல்லா வட்டாரத்தாராலும் விளங்கிக்கொள்ளப்படுகிறது.

தமிழகத்தில் ஏறத்தாழ முந்நூற்றுக்கு மேற்பட்ட வட்டார வழக்குத் தமிழ் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. தமிழீழத்திலும் ஏறத்தாழ பத்துவகைவரை வட்டார வழக்குகள் உண்டு. எனவே, நாமனைவரும் ஆவணமொழியான செவ்வியல் தமிழை கற்றால் மட்டுமே வட்டார வழக்குகளைப் புரிந்துகொள்ள முடியும். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு, யாழ்ப்பாண மக்கள் பேசுகின்ற செந்தமிழ், தமிழகத்தின் பின்தங்கிய மக்களுக்குப் புரிவதில்லை. ஆனால், அவர்கள் பேசுகிற மிகத் தாழ்வான கொடுந்தமிழ் தமிழீழ மக்களுக்கு முற்றிலும் புரியும்.

பேச்சுவழக்கில் நாங்கள் கற்ற இலக்கணத்திற்கு மாறான சொல்லமைப்புகள் காணப்படுவின்றன. ஆனால் கற்றோரும், மற்றோரும் அவ்வகையில் தான் பேசுகின்றனர். கரணியம் எழுத்துவழக்கில் உள்ளதை விட, பேச்சுவழக்குகளில் தான் உயிர்த்துடிப்புள்ள உணர்வுகள் வெளிப்படுகின்றன.

எ-கா - மாமா மாமி அவர்கள் எப்போது வருகின்றனர். - எழுத்துவழக்கு
மாமா மாமி அவை எப்ப வருகினம். - பேச்சுவழக்கு

இதில் நீங்கள் கவனிக்கவேண்டியது -

அவை என்பது அஃறிணைப் பன்மை. ஆனால், இங்கே உயர்திணைப் பன்மையைச் சுட்டுகிறது. எப்ப என்பது கொச்சை மொழி: வருகினம் என்பது இலக்கண வழுவுள்ள வழூச்சொல். ஆனால், எழுத்துவழக்கை விட, இந்த பேச்சுவழக்கு உறவின் உரிமையையும் அன்பின் ஆர்வத்தையும் வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது. எனவேதான், நீங்கள் பேச்சுவழக்கான வாழும் மொழியையும் எழுத்துவழக்கான ஆவணமொழியையும் ஆய்ந்து தேர்ந்து, உங்களது பேச்சை எழுத்துவழக்கில் நற்றமிழைப் பயன்படுத்த கற்றுக் கொள்ளுங்கள்.

இலக்கணம் - சொற்றொடர் (தொடர்மொழி)

சொற்கள் புணரும்போது சொற்றொடர் தோன்றுகிறது. சொற்றொடர்கள் தொகாநிலைத்தொடர், தொகைநிலத்தொடர் என்று இருவகைப்படும்.

தொகாநிலைத்தொடர்

சொற்களின் இடையே புணரும் இடைச்சொற்கள் எழுத்தில் தோன்றி, கருத்தை வெளிப்படுத்துவது.

தொகைநிலத்தொடர்

சொற்களின் இடையே இடைச்சொற்கள் தோன்றாமலேயே தோன்றியது போல் கருத்தை வெளிப்படுத்துவது.

புணர்ச்சி நிகழும்போது தான் சொற்றொடர் உருவாகி தொகைநிலையும் தொகாநிலையும் தோன்றும். அவ்வகையில் தொகைநிலைத்தொடர் வேற்றுமைத்தொகை, அல்வழித்தொகை என இருவகைப்படும்.

அல்வழித் தொகைநிலையில் வரும்போது வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஐந்துவகை.

வினைத்தொகை தொகாநிலக்கு மாறும்போது முக்காலத்திற்கும் பொருள் தரும்.

உம்மைத்தொகை தொகாநிலையாக விரியும்போது, சொற்றொடரின் இடை, கடை ஆகிய ஈரிடத்தும் வரும்.

அன்மொழித்தொகை தொகாநிலையாக விரிவடையும்போது, வேற்றுமைத் தொகையில் ஒன்றும் வேறு செயல்களும் காட்டி வரும்.

விளக்கம் கற்றல் இலக்கணத்தில் காண்க.

ஒழுக்கமுடைமை

திருக்குறள் நூற்றுமுப்பத்துமூன்று அதிகாரங்களை உடையது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த நூற்றுமுப்பத்துமூன்று அதிகாரங்களும் ஒரு கருத்தொழுங்கில் அல்லது வாழ்வியல் ஒழுங்கில் தான் வள்ளுவரால் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் திருக்குறளில் **'ஒழுக்கமுடைமை'** அதிகாரம் அறத்துப்பாலுள் வைக்கப்பட்டுள்ளது. ஒருவன் புரியவேண்டிய அறங்களில், தான் நன்றுடையானாய் ஒழுக்கமுள்ளவனாய் வாழ்வதும் ஒன்று என்பதைச் சுட்டவே அவ்வாறு வைக்கப்பட்டுள்ளது. ஒழுக்கமுடைமையின் அதிகார முறைமையை நோக்கும்போது அது அடக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டுள்ளது. அவ்வைப்பு ஒருவன் கல்வியாலோ செல்வத்தாலோ தனக்குள் செருக்கி வீண் இறுமாப்புக் கொண்டலைவானேல் அவனிடம் ஒழுக்கம் தோன்றாது. எனவே, ஒருவன் பொருட்செல்வத்தையோ கல்விச் செல்வத்தையோ கொண்டிருந்தாலும் அடக்கம் உடையவனாய் இருந்தால்தான் அவனிடம் ஒழுக்கம் உண்டாகும். அக்கரணியம் பற்றியே அடக்கமுடைமையின் பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டது. அடக்கமுடைமையாவது 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்' அதாவது, ஐம்புலன்களையும் அவற்றின் அவாக்களின்படி செல்லவிடாமல் அடக்குதல். ஐந்தும் அடங்கினால் அறிவு தானே தலைப்பட்டு ஒழுக்கவழியில் ஒருவரைக் கொண்டு செல்லும். எனவே, ஒழுக்கமுடைமையாவது யாது எனக் காண்போம்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ஒழுக்கம் மேன்மையைத் தருவதால் ஒழுக்கம் உயிரினும் மேலானதாகக் காக்கப்படும்.

பேறுகளில் பெரும்பேறு மாந்தராகப் பிறத்தல். அத்தகைய அருமைக்குரிய உயிர்ப்பைப் பெற்றிருக்கின்றனர் மாந்தர். எனினும், அவ்வுயிருக்கும் ஒருநாள் அழிவு வரும். உயிர் பிரிந்தால் உடலும் இயற்கையோடு கலந்துவிடும். உற்றாரும் நீரினுள் மூழ்கி நினைப்பொழிந்து போவர். எனவே, அந்த உயிர் வாழும் காலத்திலேயே ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்து வாழ்வாராயின், உலகம் அவரைப் புகழ்ந்து போற்றும். உயிருடம்பின் வாழ்வு முடிந்த பின்னும் புகழுடம்பு உலகில் நின்று நிலைக்கும். எனவேதான், உயிரினும் மேலானதாக ஒழுக்கத்தைப் பேணல் வேண்டும்.

விழுப்பம் - மேன்மை, உயர்வு, சிறப்பு.
ஓம்பல் - காத்தல், பேணல்.

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

அக்கறையுடன் பேணிக் காக்க ஒழுக்கத்தை. தெரிந்தெடுத்துப் பேணி ஆராய்ந்து பார்த்தாலும் அதுவே துணையாகும்.

வெறுமனே பிறர் ஒழுக்கம் என்று சுட்டுகின்றவற்றை ஒழுகினால் போதாது. மிகுந்த அக்கறையுடன் நுணுகி எவையெவை என் குடிக்குரிய சிறந்த ஒழுகலாறுகள் எனக் கண்டறிந்து, அவற்றை நான் கடைப்பிடிக்கிறேனா? என்று தெளிந்து தெரிந்துகொண்டு அவற்றைப் பேணி வாழவும். ஏனெனில், எவ்வகையால் நாம் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கம் போன்று இம்மை மறுமை இரண்டிலும் துணையாய் நிற்பது வேறொன்றும் இல்லை.

பரிந்து - பற்றுவைத்து, மிகு அக்கறையுடன்.
தேரினும் - ஆராய்ந்தால், தேர்ந்தெடுத்தால்.
இம்மை - உயிர்வாழ்வு.
மறுமை - புகழ்வாழ்வு (இறப்பின்பின்)

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கம் உடைமையே குடிப்பிறப்பு. ஒழுக்கமின்மை இழிந்த பிறவியாய் ஆக்கிவிடும்.

ஒழுக்கமுடையவராய் இருப்பது ஒருவருக்கு நற்குடியிற் பிறந்தார் என்ற பெருமையைத் தரும். குடிமை என்பது ஒருகுடி தன் முன்னோரிலிருந்து தொடரும் வாழ்க்கைப் பண்புகளை கடைப்பிடித்து வாழ்தலாகும். அவற்றை மீறாமல் பேணிக் கடைப்பிடித்தாலே அக்குடிச் சிறப்புப் போற்றப்படும். அக்குடி ஒழுக்கங்களில் விலகி இழுக்கான வழிகளில் வாழ்ந்தால் அவரது குடிக்கு இழுக்கு. எனவே, அவரது குடியே அவரை ஒரு இழிபிறவியாகக் கருதி குடியிலிருந்து விலக்கிவிடும். குடியால் விலக்கப்பட்டவர் உலகால் இகழப்படுவர். உடைமை என்றால் சொத்து என்பது பொருள். அச்சொல்லின் மூலம் ஒழுக்கந்தான் ஒருவனுடைய பெருமைக்குரிய சொத்து என்பதை வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார்.

குடிமை - ஒரு குலத்தின் வாழ்வொழுக்கம்.
இழுக்கம் - ஒழுக்கமின்மை, இழிதகவு.

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

மறந்தாலும் கற்றுக் கொள்ளலாம். பார்ப்பானுடைய குடிப்பிறப்பு அவன் ஒழுக்கம் குன்றின் அழியும். கற்றல் கற்பித்தல் தொழிலுக்கு உரியவன் பார்ப்பான். அத்தகையவன் தான் கற்றதை மறந்து போயினான் ஆகின், கற்பித்தலைச் செய்யும் தகுதியை இழப்பான். அது இழிவன்று. ஏனெனில், அவன் மீண்டும் முயன்று கலைகளைக் கற்றுத் தன் அறிவை மேம்படுத்திக்கொண்டு கற்பித்தல் இயலும். ஆனால், பார்ப்பானுக்கு உரிய ஒழுகலாறுகளை விலக்கி இழிவான செயல்களில் ஈடுபடுவானானால், அவனது பார்ப்பாரக் குடிப்பிறப்பு அழிந்து இகழப்படுவான். அதன்பின் எத்தகைய கற்றோனாலும் பார்ப்பானாக வாழமுடியாது.

இன்று நாங்கள் பார்ப்பான் என்பது வேறு. இன்றைய பார்ப்பான் மதங்களின் பெயரால் மக்களை ஏமாற்றி வாழ்பவன். வள்ளுவர் காலத்துப் பார்ப்பார் வேறு. வள்ளுவர் காலத்துப் பார்ப்பான் குமுகாயத்தில் நன்மங்கலங்களையும் கற்பித்தலையும் கல்லா மக்களை அறவழி வாழ வழிகாட்டலையும் தவறாது பார்த்து வந்தவன்: குமுகாயம் நலம்பெற வேண்டிய வழிகளைப் பார்த்தவன்: அதனால், கரணியப் பெயராக பார்ப்பான் எனப்பட்டான்.

அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பொறாமை உடையவனிடத்திலே செல்வம் சேர்வதில்லை. அதுபோல், ஒழுக்கம் இல்லாதவனிடத்திலே உயர்வு இல்லை.

பிறருடைய செல்வப் பெருக்கத்தைக் கண்டு பொறாமை கொள்பவனிடம் செல்வம் சேர்வதில்லை. ஏனெனில், பிறரைப் பார்த்துப் பொறாமைப்படுவதில் தன் மனதைச் செலுத்திக் கெண்டிருப்பதனால் அவனது செயலில் ஈடுபாடு குறையும். குறையவே செயற்றிறன் குறையும். அதனால், பொருள் வருவாய் வளங்குறையச் செல்வம் சேராது. அதுபோலவே, ஒழுக்கம் இல்லாதவன் ஒழுக்கம் பற்றி எண்ணாமல் இழிந்தவற்றையே எண்ணியும் செய்துகொண்டும் இருப்பான். இதன் கரணியமாக உலகால் வெறுக்கப்படுவான். எனவே, அவனுக்கு வாழ்வில் புகழ் பெருமை என்பது கிடைக்கப் பெறாது.

ஒழுக்கத்தில் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

ஒழுக்கத்திற் குன்றார் உளவுரம் வாய்ந்தோர். ஒழுக்கம் தவறுவதால் குற்றம் உண்டாவதை அறிந்து.

உரவோர் எனின் நன்று தீது பகுத்தாய்ந்து தேரும் அறிவின் பயனாய் உறுதியான உளமுடையோர். அத்தகையோர் ஒழுகலாறுகளில் ஒழுக்கம் தவறின் பழி வந்து சேரும் என்பதை உணர்ந்து, ஒழுக்கத்தில் ஒருசிறிதும் குன்றாது உறுதியுடன் வாழ்வர். எனவே, கல்லாக் கழிமக்களே இழுக்கிய வழிகளில் வாழ்வர் என்பது புலப்படுகிறது.

ஒல்கார் - குன்றார்
உரவோர் - மனவுறுதியுடையோர்
ஏதம் - குற்றம்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

ஒழுக்கத்தினால் பெறுவர் மேன்மை. ஒழுக்கம் தவறின் அடைவர் அடையக்கூடாத பழி.

தத்தமக்குரிய ஒழுக்கத்தின்படி ஒழுகி வாழ்வோர், அதனால் மேன்மைகள் கிடைக்கப்பெறுவர். தமக்குரிய ஒழுக்கத்தின் வாழாது ஒழுக்கம் தவறி வாழ்வோர், பலரும் கண்டிரங்குமாறு அடையக்கூடாத பெரும்பழியை அடைவர். அதாவது, குடியினால் வெறுத்து விலக்கப்பட்டு, குமுகாயத்தால் ஒதுக்கப்பட்டு வாழ்வுக்கு வழியின்றி பெருந்துன்பத்துள் உழல்வர்.

எய்தல் - அடைதல், கிடைக்கப்பெறுதல்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

நன்மைக்கு விதையாகும் நல்ல ஒழுக்கம். தீய ஒழுக்கம் எப்பொழுதும் துன்பம் தரும்.

ஒருவர் கடைப்பிடிக்கிற நல்லொழுக்கங்கள் அவருக்கு உலகில் நற்பெயரையும் புகழையும் தேடித்தருவதால், அவரது உயர்விற்குரிய பயன் விளைகிற பயிருக்குரிய விதைகள் போன்றவை. தீயொழுக்கம் இத்தகைய சிறப்பைத் தராது போவதுடன் மட்டும் விடாது. அது என்றும் எக்காலத்தும் தொடர்ந்து நின்று துன்பத்தையும் அச்சத்தையும் தரும்.

இடும்பை - அச்சம், துன்பம்.

ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்காவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

ஒழுக்கமுடையவர்களுக்கு இயலாது, தீயவற்றைத் தவறியும் தம் வாயால் சொல்லுதல்.

ஒருவர் உள்ளம், சொல், செயல் ஆகிய மூன்றினாலும் தூயவராய் இருத்தல் வேண்டும். உள்ளம் முகத்தில் தெரியும். செயல் பிறரால் உணரப்படும். சொல் சொல்லும் வரை தோன்றாது. அவருடைய உள்ளத்திலே தீய எண்ணங்கள் இன்மையால் சொல்லிலும் அவை தோன்றா. அத்தகையோர் தவறுதலாகவேனும் தீயதை வாயால் பேசமாட்டார்கள். நாவினாற் சுட்ட புண் ஆறாது. ஆகையினால், வெறும் பேச்சுத்தானே என்ற வகையில் கூட ஒழுக்கமுடையார் வாயில் தீயவை வரா. அப்படி வராதிருந்தாலே அவர் ஒழுக்கமுடையவர் ஆவார்.

ஒல்கல் - இயலுதல், முடியும்.
ஒல்கா - இயலாது, முடியாது.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

உலகத்தோடு சேர்ந்து வாழக் கற்காதவர் பலவற்றைக் கற்றிருந்தாலும் கல்லாதவர் ஆவார்.

உலகம் எதை ஒழுக்கம் என்று சொல்லிப் பின்பற்றுகிறதோ, அதை ஏற்றுக்கொண்டு வாழ்வதே ஒழுக்கம். அது அறிவிற்குப் பிழையாகத் தோன்றினாலும் கூட, உலகம் அதைச் சரியென்று ஏற்றுக்கொண்டால் நாமும் ஏற்று ஒழுகல் வேண்டும். அதை ஏற்க மறுத்தால் உலகம் அவரைப் புறந்தள்ளும். எனவே, உலகோடு ஒத்து வாழவேண்டும். அப்படி வாழாதவர் என்னதான் பல கலைகளைக் கற்ற பேரறிவாளர் ஆனாலும் கூட அவர் கல்வி அறிவற்ற இழிந்தோருக்கு ஒப்பாவார்.

தான் வாழும் குழூகம் எதை ஒழுக்கம் என்கிறதோ அதையொட்டி வாழ்வதே அறிவுடைமையாகும். (ஊரோடினால் ஒத்தோடு)

ஒட்ட ஒழுகல் - சேர்ந்துவாழல், இயைந்து வாழல்.

ஒழுக்கமுடைமையின் பின் அதிகாரமுறைமையில் பிறனில் விழையாமை வைக்கப்பட்டது. அதாவது, ஒழுக்கக்கேடுகளில் மிகவும் இழிந்த கேடு பிறனில் விழைதல் என்பது. பிறனில் விழைதல் என்றால் பிறனுக்கு உரிமையுடைய பெண்ணை விரும்புவது.

வினாக்கள்

1. ஒழுக்கமுடைமை அதிகார வைப்புமுறை பற்றி விளக்குக.
2. ‘ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்கல்’ - விளக்குக.
3. உயிரினும் மேலானது எது? எவ்வகையில்?
4. குடிமை என்றால் என்ன?
5. பார்ப்பான் எப்பொழுது இகழப்படுவான்?
6. வாழ்வில் ஒருவனுக்குப் புகழ், பெருமை கிடைக்கப் பெறாமைக்குக் கரணியம் என்ன?
7. ஒழுக்கத்தில் சிறிதும் குன்றாது உறுதியுடன் வாழ்வோர் யார்?
8. ஒழுக்கம் தவறி வாழ்வோர் அடையும் நிலை என்ன?
9. தவறுதலாகவேனும் தீயவற்றைப் பேசாதோர் யாவர்? விளக்குக.
10. எது அறிவுடைமையென்று வள்ளுவர் கூறுகிறார்? ஏன்?
11. ஒழுக்கக்கேடுகளில் மிக மோசமான ஒழுக்கக்கேடு எது?
12. **பொருள் தருக:**

விழுப்பம்	பரிந்து
இழுக்கம்	இடும்பை
ஒல்லல்	அழுக்காறு

மொழிவளம் - சிறுகதை எழுதுதல்

இன்று எந்தவொரு குமுகாயத்திலும் எழுத்தாளரே மக்களால் அறியப்பட்ட நன்மதிப்புடையோராய் விளங்குகின்றனர். அதிலும் கதை எழுதுவோர் மிகவும் உளமீர் கலைஞர்களாக விளங்குகின்றனர். கதை நெடுங்கதை- சிறுகதை என இருவகை. இக்காலத்தில் சிறகதை எழுதுவோரே நெடுங்கதை எழுத்தாளரைவிட முன்னிலை வகிக்கின்றனர். கரணியம் என்ன? நெடுங்கதைகள் பல கதைமாந்தரைக் கொண்டிருக்கும். கதைத்தலைவனுடைய இளமை முதல் அவனது செயல் முடிவுவரை கதையைத் தொடர்த்திச் செல்லும். அதனால், நெடுங்கதைகள் வாசிப்போரது உள்ளத்தில் கதைமாந்தருடைய குணவியல்புகளையும் செயற்பாடுகளையும் கதைமாந்தரிலேயே ஏற்றிச் சுவைப்பூட்டுவன. சிறுகதையோவெனில் அப்படியில்லை. சிறுகதை எழுத்தாளன் தான் காணும் ஒரு நிகழ்விலிருந்து, அவனது உள்ளத்தைத் தாக்கும் உணர்விலிருந்து, ஒரு குமூகக்கொடுமையின் முறைகேட்டிலிருந்து, மூடநம்பிக்கையில் மூழ்கிக்கிடக்கும் தன் குமூகத்தைக் கண்டு, பீறிட்டு எழும் உள்ளக்கிளர்ச்சியை ஒருசில கதைமாந்தரூடாக வெளிப்படுத்துகிறான். அவ்வெளிப்பாடு நாம் வாழ்வில் நேரடியாகக் கண்டுணர்கின்ற பட்டறிவுகளுடன் கூடியதாய் இருக்கும். சிறுகதை எழுத்தாளனுடைய படைப்பு எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றால், குமூக இயல்புடைய நிகழ் உணர்வின் ஒரு வெளிப்பாட்டை மட்டுமே காட்டுவதால், வாசகன் தன் பட்டறிவின் மேல் அவ்வுணர்வை ஏற்றி தானே அதற்கு ஆட்படுகிறான். எனவேதான், சிறுகதை எழுத்தாளர் இலகுவில் மக்கள் மனதை கவர்கின்றனர்.

அதுமட்டுமல்ல, சிறுகதை எழுத்தாளன் அன்றாடம் மக்கள் வழங்கும் மொழிவழக்கில் கதைமாந்தரின் இயல்புகளை விளக்குவதால், வாசகரது உள்ளத்தோடு சுவைப்பு இரண்டறக் கலக்கிறது. இதுவே, சிறுகதை எழுத்தாளனின் சிறப்பு.

இத்தகைய சிறப்புக்குரிய சிறுகதையை எழுதி, உங்களது உள்ளங்களில் நிகழ்கிற குமுகாயம் பற்றிய உள்ளக் கிளர்ச்சிகளை வெளிப்படுத்த முயலுங்கள்.

தமிழர் குமுகாயத்தில் இன்று போராட்டச் சூழலில், தமிழர் பெருமளவில் புலம்பெயர்ந்துள்ள நிலையில், அவர்களது வாழ்க்கைப் போராட்டம் தொடர்பான சிறுசிறு மனவுணர்வுகளை நீங்கள் சிறுகதையாக எழுதலாம். முயலுங்கள். சிறுகதை எழுதும்போது எழுத்தாளன் தானே கதைக்குரியவன் போல் உணர்ந்து எழுதினால் சிறந்த சிறுகதை பிறக்கும். 'முந்தும் மனவெறி மொழிகளில் அமையின் முன்பின் இங்கொணாத கலை மலரும்' என்கிறார் விபுலாநந்தர். சிறுகதை எழுதுவதன் மூலம் உங்களது எண்ணங்களை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல், உங்களுக்குள்ளேயே நீங்கள் மாற்றங்களைக் காணுவீர்கள்.

சிறுகதை எழுதப் பயில்தல்

- ✔ உமக்குப் பிடித்த- மனதைக் கவர்ந்த- சினத்தையும் வெறுப்பையும் தந்த மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தியவை போன்ற எண்சுவைகள் வழியாக ஊன்றி நோக்குக.
- ✔ அவை நிகழ்வதற்கான கரணியத்தை அறிக.
- ✔ அக்கரணியத்துக்கான குமூகச் சூழலை ஆய்ந்துணர்க.
- ✔ கதையை எங்கு தொடங்கி எங்கே முடிப்பது என்பதைத் தீர்வு செய்க.
- ✔ ஆசிரியன் சொல்வது போலா அல்லது கதையில் வரும் ஆட்கள் பேசுவது போலவா எழுதுவது என்பதை முடிவு செய்க.
- ✔ உணர்வுகளை நன்கு விளக்கக் கூடிய, உள்ளத்தை ஊடுருவக்கூடிய சொற்களை எண்ணித் தெளிக.
- ✔ சிறுகதைகள் வட்டாரப் பேச்சுத் தமிழில் எழுதலாம். எனவே, வட்டார வழக்கின் இனிய சொற்களைத் தேடி கதையில் கையாள்க.
- ✔ இனியென்ன எழுதுங்கள் சிறுகதை.

எண்சுவைகளாவன:- நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை.

இலக்கணம் - சொல்லியம்

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கூட்டம் அல்லது சொற்றொடர் முற்றுப்பெற்ற கருத்தை தந்து நின்றால் அதைச் சொல்லியம் என்பர். கருத்து முற்றுப் பெறவில்லை என்றால் அது சொற்றொடர் ஆகும்.

சொல்லிய வகைகள்

சொல்லியங்களை கருத்தை வெளிப்படுத்தும் வகையால் பின்வருமாறு வகுப்பர். கூற்றுச்சொல்லியம் (செப்புச்சொல்லியம்), வினாச்சொல்லியம், விருப்புச்சொல்லியம், மெய்ப்பாட்டுச் சொல்லியம். விருப்புச் சொல்லியம் ஏவல், வியங்கோள் என தன்னுள் இரண்டாகும்.

சொல்லிய உறுப்புகள்

ஒரு சொல்லியமானது கருத்துகளைத் தெளிவுற வெளிப்படுத்துவதற்கு பல உறுப்புகளைக் கொண்டுள்ளது. அவை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழி என்பனவாகும்.

எழுவாய் சொல்லியத்தில் கருத்துத் தோன்றுமிடமாகவும் முடிந்த கருத்துக்கு உரிமையுடையதுமாகும். பயனிலை சொல்லியத்தில் கருத்து முற்றுப்பெறுவதைக் காட்டும்.

செயப்படுபொருள் எழுவாயின் செயலுக்கு உட்படுத்தப்பட்ட பொருளைக் காட்டும். செயப்படுபொருள் இன்றியும் கருத்து முற்றுப்பெறும் சொல்லிய வகைகளும் உண்டு.

அடைமொழியானது, எழுவாய் செயப்படுபொருள் பயனிலை மூன்றையும் சிறப்பித்துக் கூறுவதற்காக பயன்படுத்தும் உறுப்பாகும். எனினும், அடைமொழி இல்லாமலும் ஒரு சொல்லியம் கருத்தை விளக்கும்.

எழுவாய் செயப்படுபொருள் பயனிலை ஆகிய மூன்றும் எழுத்தில் தோன்றாமல் கருத்தில் தோன்றுவதுமுண்டு. அவ்வாறு தோன்றினால் அவை தோன்றா என்ற அடைமொழியுடன் கூறப்படும்.

பயனிலை இலக்கண வழியால் பெயர், வினை, வினா என மூவகைப்படும். வினைச்சொல் சொல்லியத்தில் கருத்தை முடித்துநிற்கும்போது வினைமுற்று என்றும் கூறப்படும்.

வினைமுற்றில் காலங்காட்டாதது குறிப்பு வினைமுற்று எனப்படும். வினைமுற்றில் காலங்காட்டுவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

விளக்கத்தைக் கற்றல் இலக்கணநூலில் காண்க.

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளின் முன்னால், பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியற் கருத்துகள் தேங்கிக் கிடக்கின்றன என்று சிலர் பேசியபோது, தமிழெதிரிகள் சும்மா கற்பனையில் புலவர்கள் எழுதிவிட இவர்கள் பழந்தமிழகத்தில் அறிவியற்றுறைகள் வளர்ச்சி அடைந்திருந்தன என்று கற்பனையில் மிதக்கினம் என்று எள்ளி நகையாடியதை என் இளமைக் காலங்களில் காதால் கேட்டிருக்கிறேன். ஆனால், நானே அவற்றைக் கற்றுத் தேறியபோது, அப்பப்பா! பழந்தமிழ் காப்பியங்களில் தமிழன் அறிவியலின் உச்சநிலையில் இருந்தான் என்பதைக் கண்டு வியக்கிறேன். அந்த அறிவியலைக் கற்பனைகள் என்று மறுக்கின்றவர்கள் புல்லுருவிகள். உயர்வுநவிற்சி என்றொரு அணி இலக்கியங்களில் கையாளப்படுவதால், இவை உயர்வுநவிற்சி என்று ஏரணித்தால் ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். முற்றிலும் கற்பனை என்று சொன்னால் அது தவறான எண்ணவோட்டந்தானே.

கழகநூல்களிலும் தேவாரங்களிலும் நிறையவே அறிவியற் குறிப்புகள் காணப்படுகின்றன. அதுவும் வேண்டிய சான்றுகளுடன் காணப்படுகின்றன. அவை பற்றி அறிவோம். கம்பராமாயணகாலம் கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டு. அதாவது இற்றைக்கு தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முற்படக் கம்பர் எழுதிய இராமாயண காவியத்திலே, இராவணனை விளக்க முற்பட்டார். அதிலே ஓரடி

'கோளொத்த சிறைவைத்தாண்ட கொற்றவன்'

என்று வருகிறது. எமது உடுத்தொகுதியிலே உள்ள ஒன்பது கோள்களையும் சிறை வைத்திருந்தானாம் இராவணன். சிறை என்றால் கட்டுப்படுத்துதல், பக்கம் எனப் பலபொருள் உண்டு. எனவே, இந்த உடுத்தொகுதியிலுள்ள கோள்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தான். எனின், இன்றைய அறிவியல் உலகம் மின்னணுக் கணினிகள் மூலம் கோள்களில் நடவடிக்கைகளை மேற்கொள்வது போல், இராவணன் கோள்களில் நடமாட்டத்தைக் கொண்டிருந்தான் என்பது தெரிகிறது. அதே வேளையில் கோள் என்பது உருண்டையைக் குறிப்பதால் நமது உலகம் உட்படக் கோள்கள் உருண்டை வடிவின எனவும் அன்றே தமிழன் அறிந்திருந்தான். அதே காவியத்தில் இராவணன் விண்ணுந்து வைத்திருந்தான் என்று கம்பராமாயணம் கூறுவது எல்லோரும் அறிந்ததே. எனவே, வானியல் சார்ந்த அறிவியலை பழந்தமிழன் அறிந்திருந்தான் என்ற கருத்தை மறுப்பதற்கில்லை.

போர்க்களத்திலே இராமராவணப் போரின்போது, இராமன் ஏவிய கணை சென்று இராவணன் உடலில் தைத்த தன்மையை விளக்க முற்பட்ட கம்பர், கணை சென்ற கடுகதியை விளக்க எடுத்துக்கொண்ட உவமை வியப்பைத் தருகிறது. அந்த வரி

'சொல்லினும் கடிய வேகச் சுடுசரம்'

சொல்லின் வேகம் என்றால் ஒலியின் செல்விரைவு. ஒலியின் கடுகதியை விட கணை கடிதிற் (விரைவிற்) சென்று இராவணனைத் தாக்கிற்று என்கிறார். அப்படியாயின், அன்றைய தமிழர் ஒலிச்செலவு பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர் என்பது தெற்றெனத் தெரிகிறது.

இதே கம்பராமாயணத்தில், யுத்தகாண்டம் - இராவணன் சோகப்படலம் - பாடல் 51ல், போர்க்களத்திலே இந்திரசித்து எனப்படும் சேயோன், எதிரிகளால் அறம்மறந்து செய்யப்பட்ட தாக்குதலில் மாண்டுபோனான். அவனது உடல் சின்னாபின்னப்பட்டு சிதைந்து கிடக்கிறது. தாய் மண்டோதரி எனப்படும் வண்டார்குழலி மகனின் உடலின் கோலத்தைக் கண்டு கதறிப் புலம்புகிறாள். அணுகுண்டு தாக்கியது போல் சிதைந்து கிடக்கிறாயே என்று புலம்புகிறாள். அது கம்பருடைய வரியில்

'மேரு உக்கிட அணு ஒன்று ஓடி உதைத்தது போலும் அம்மா'

எனப்படுகிறது. மேரு என்பது ஒருபெருமலை. உக்குதல் உருக்குலைந்து சிதைந்து பொடிப்பொடியாதல். அணுத்தாக்குதலால் மேருமலை உடைந்து சிதறிக் கிடப்பது போல் சிதறிக் கிடக்கிறான். இவ்விடத்தில் அணுவாயுதத் தாக்குதல் பற்றிய உண்மை பொதிந்து கிடக்கிறது.

பாரதத்தில் ஒரு துணைக்கதை இரணியன் கதை. இரணியனுக்கும் அவன் மகன் பிரகலாதனுக்கும் ஒரு கருத்துப்போர். இரணியன் கடவுள் இல்லை என்கிறான். பிரகலாதன் கடவுள் இருக்கிறார் என்கிறான். எங்கேயடா இருக்கிறான் உன்கடவுள் என்ற இரணியனின் கேள்விக்கு

'அணுவைச் சதகூறிட்ட கோணிலும் உள்ளான்'

என்கிறான் பிரகலாதன். இதில் வியக்கத்தக்க விளத்தம் (விளக்கமான செய்தி) என்னவென்றால், அன்றே தமிழன் அணுவைப் பிளக்கமுடியும் என்பதையும் அறிந்து, அணுவை நூறாகப் பிளந்த ஒரு கூறிற்கு கோண் என்று பெயருமிட்டிருந்தான் என்பது.

கம்பருக்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் மாணிக்கவாசகநாயனார் எனப்படும் திருவாதவூரர். அவர் எழுதிய திருவாசகம் அருள் இலக்கியங்களில் மிகவும் போற்றப்படுவது. திருவாசகத்தில் ஒரு பகுதி **'திருவண்டப்பகுதி'**. அண்டம் என்பது எல்லையற்றுப் பரந்து விரிந்து கிடக்கிற விண்வெளி. அந்த அண்டத்தைப் பற்றி திருவாதவூரர் பின்வருமாறு பாடுகிறார்.

அண்டப் பகுதியில் உண்டைப் பிறக்கம்
அளப்பெருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றினுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன.

அண்டம் - விண். உண்டை - கோள், உருண்டை. பிறக்கம் - குவியல், பெருக்கம்.

இந்தப் பேரண்டம் எங்கும் கோள்கள் குவிந்து கிடக்கின்றன. அளவிட முடியாத அளவில் நிறைந்திருக்கும் கோள்களின் இனிய காட்சியை ஒன்றினோடு ஒன்றினை ஒப்பிக் கூறுவதானால், நூற்றியொரு கோடிக்கும் மேலே பெருகிக் கிடக்கின்றன என்கிறார். தி.பி பதினாறாம் நூற்றாண்டிலேயே உலகம் உருண்டையா? தட்டையா? என்று ஏரணம் செய்துகொண்டிருந்தது, இன்றைய அறிவியல் மேம்பாடுற்றுள்ள மேற்குலகம். உருண்டை தான் என்று விடாப்பிடியாக நின்ற கலீலியோ மரணம் வரை வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். அதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தி.பி ஆறாம் நூற்றாண்டிலேயே அண்டப்பகுதி முழுவதும் உடுத்தொகுதிகள் நிறைந்திருக்கின்றன. அவை உருண்டை வடிவின என்று திருவாதவூரர் பாடினார் என்றால், அற்றைத்தமிழர் இன்றைய அறிவியல் உலகத்தை விட உயர்ந்த வானியல் அறிவைப் பெற்றிருந்தனர் என்பது புலனாகிறது.

திருவாதவூரருக்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன், அதாவது தி.மு முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவள்ளுவர் காலத்திலேயே உலகம் கோள வடிவினது என்றும், அது தன்னைத்தானே சுற்றுகிறது என்பதையும், ஞாயிற்றைப் பால்வீதியில் சுற்றி வருகிறது என்பதையும் தமிழர் அறிந்திருந்தனர். சான்று யாதெனில், வள்ளுவர் தன் குறளிலே உலகம் உருண்டை, அது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, பால்வீதியில் சுற்றி வருகிறது எனக் கூறியுள்ளார்.

**சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை.**

சுழன்றும் ஏர்ப் பின்னது. சுழன்றும் என்ற சொல்லில் சுழன்று என்ற வினையெச்சத்துடன் வியப்பு உம்மையைப் புணர்த்தி வியப்பைக் காட்டிச் சொல்கிறார். உலகம் சுழல்கிறது. சுழல்தல் - தன்னைத்தானே சுற்றுதல். இதிலென்ன வியப்பு? படுகதியில் சுழல்கிறது. அப்படிச் சுழன்றும் சுழல்வின் அசைவே தெரியாமல், இயற்கையும் செயற்கையுமான கட்டுமானங்கள் குலையாமல் சிதையாமல் சுழல்கிறது என்பதே வியப்பு. இப்படிப்பட்ட விந்தையைச் செய்கிற உலகம், உழவன் உழுதால் தான் நிலைத்து நிற்கும். இல்லையேல் உலகப்படைப்புகள் அழிந்துபடும்.

வள்ளுவனுக்கு முன்னரே இந்த எமது கோளைக் குறிக்கத் தமிழர் **'உலகம்'** என்ற பெயரை வைத்துள்ளனர் என்று கழகவிலக்கியங்களால் அறிகின்றோம். உலவு, உலா, உலவுதல், உலாவருதல் என்றால் பொருள் சுற்றி வருதல். ஓய்வின்றி எந்நேரமும் இவ்வையகம் ஞாயிற்றைச் சுற்றி உலவி வருவதால், அதற்கு உலகம் என்று

பெயரிட்டான் தமிழன். ஆகவே, அன்று உலகம் அறியாத பேரறிவியலைச் சொன்னான் வள்ளுவன். உலகம் தன்னைத்தானே சுற்றுவதோடு ஞாயிற்றையும் சுற்றி வருகிறது என்று பண்டைத்தமிழன் அறிந்திருந்தான் என்ற இந்தப் பேருண்மைகளைப் புரியாது உள்ளனரே நந்தமிழர்.

இத்தகைய குறளைப் புகழப்புகுந்த இடைக்காடர் என்ற புலவன்,

> கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்திக்
> குறுகத் தரித்த குறள்... - என்றான்.

கடுகைத் துளைத்து அதனுள்ளே ஏழ்கடலையும் புகுத்தினாற் போன்று, சிறிதான குறட்பாவினுள்ளே ஏழ்கடலைப் போலப் பரந்து விரிந்த பொருளை வள்ளுவர் புகுத்தியுள்ளார் என்று பாராட்டினான். இடைக்காடனாருடைய உவமை ஒளவையாருக்கு ஏற்பில்லை. கட்புலப் பொருளான கடுகைத் துளைத்து அதனுள்ளே கடலைப் புகுத்துவது நடந்தும் விடலாம். ஆகவே, கடுகையும் விடச் சிறிதானதும் சக்தியுடையதுமான ஒரு பொருளைத் தேடினார் ஒளவையார். அவருக்குக் கிடைத்த உவமை அணு. உடனே உவமித்தார்.

> அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகுத்திக்
> குறுகத் தரித்த குறள். - என்று.

அணுவானது கட்புலனாகா அளவிற்குச் சிறிய பொருள். அத்தகைய அணுவைத் துளைத்து அதனுள் ஏழ்கடலையும் புகுத்தினாற் போன்று, சிறிய குறளுக்குள்ளே எல்லையற்ற விரிவுடைய பொருள் அடங்கியிருக்கிறது என்பது அவருடைய கருத்து. இன்றைய உலகில் கட்புலனாகா அணுவைக்கொண்டு பேராற்றற் செயல்களை நிகழ்த்துகின்றனர். அணுவைப் பிளக்கும் போது அது தொடர்ந்து பிளந்து பிளந்து விரிவடைந்து பெருஞ்சக்தி பிறக்கிறது. அதைப்போன்று அணுவுக்குள் ஏழு கடலையும் புகுத்திய பின் அதை உடைத்துவிட்டால், கடல்கள் பாய்ந்து உலகை மூடும். அதுபோல், இச்சிறிய குறளைப் பிரித்துப் பொருளுரைக்கப் புகின், விரிபொருள் எல்லையற்று விரியும். இங்கே நாம் நோக்க வேண்டிய இடம், அணுவுக்கு உள்ள அந்த அளப்பரும் ஆற்றலை மக்கள் அறிந்திருந்தனர் என்பது. ஒரு புலவர் ஓர் உவமையைக் கையாளுகிறபோது மக்களுக்குத் தெரிந்த பொருளைத்தான் கையாள்வார். அறியாத பொருள் எனின் அந்த உவமையாற் பயனில்லை. எனவே, பண்டைத்தமிழ் மக்கள் அணுவைப் பற்றி அறிந்திருந்தமை தெரிகிறது.

தி.மு வுக்கு முன்னும் பின்னுமான சில இலக்கியங்களில் விண்ணுந்து பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரத்திலே கண்ணகி **'கோவலன் தன்னோடு வானவூர்தி ஏறினள்'** என்று கூறப்பட்டுள்ளது. கலிங்கத்துப் பரணியிலே **'விண்ணில் மொய்த்தெழு விமானம்'** என்கிறது ஒரு பாடல்வரி. அதில் ஆராயப்படவேண்டிய செய்தியொன்றுண்டு.

விண்ணில் மொய்த்தெழு விமானங்களில் சுரர்களாய்
மீதுபோம் உயிர்களும் அன்றியே இன்று தம்
கண்ணிமைப்பு ஒழியவே முகமலர்ந்து உடல்களும்--- - பாடல் 496.

களத்தில் வீழ்கின்ற வீரர்களது உயிரோடு உடல்களும் விண்மீது போகும் முகமலர்ந்து. இதன் பொருள் என்ன? களத்திலே வெட்டுண்டு உயிரிழந்த வீரர்களது உடல்கள் உயிரோடு வானுந்தில் மகிழ்வோடு செல்கின்றன. அதாவது, படுகாயப்பட்டு சாநிலையிலுள்ள வீரர் உடனடியாக மருத்துவமனைக்கு அப்புறப்படுத்தப்படுகின்றனர். இது இன்றைய போர்க்களக் காட்சியல்லவா? களத்திலே வீழ்கின்ற வீரர்களது உயிரைக் காப்பதற்காக உடனுக்குடன் உலங்கு வானுந்துகள் இறங்கும் நிலையிலும் ஏறுநிலையிலும் மாறிமாறி பறக்கின்றன. விரைவும் அகத்தியமும் கருதி அவைகள் விண்ணில் மொய்த்துள்ளன. இந்தக் காட்சிக்கும் கலிங்கத்துப்பரணிக் காட்சிக்கும் வேறுபாடில்லையே. அப்படியிருக்க இதைக் கற்பனை என்று ஒதுக்கமுடியுமா?

சீவகசிந்தாமணியில் உலங்கு வானுந்து என்றொரு செய்தி வருகிறது. சீவகன் தன் அமைச்சனால் ஏமாற்றப்பட்டு சூழ்ச்சிப் பொறியுள் அகப்பட்ட வேளை, கர்ப்பிணியான தன் மனைவியை மாடத்திலிருந்த சிறு (மயிற்பொறி) உலங்குவானுந்தில் ஏற்றித் தப்பிக்க வைக்கிறான். அதை இன்னோரிடத்திலே

'துன்பமில் பறவையூர்தி சேர்த்தனன்
துணைவி சேர்ந்தாள்' - என்கிறது.

அவள் விண்ணில் பறந்துகொண்டிருந்தபோது, சீவகனது வீழ்ச்சியைக் காட்டும் ஆரவாரம் கேட்கிறது. உடனே அவள் மயங்கிச் சரிகிறாள். அதனால், ஓட்டுவாரற்ற உலங்கு வானுந்து காட்டில் விழுகிறது. இதைக் கற்பனை என்று ஒதுக்கிவிட முடியாது.

வலவன் என்றால் விண்ணுந்தை அல்லது வானுந்தைச் செலுத்துபவன். விண்ணுந்து இல்லாமல் எப்படி இப்படியொரு இனியசொல் தமிழில் இடம்பெற்றிருக்கமுடியும். பருவகாலம் தோறும் கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் பறவைகள் அம்பின் வடிவில் ஈர்ப்புவிசையில் மிதந்து செல்கின்றன. இச்செலவை **'வலசை'** என்கிறது தமிழ்.

புறநானூற்றில் பாடல் - புறம் 27

'வலவன் ஏவா வானவூர்தி எய்துப'

என்றொரு தகவல் இருக்கிறது. வலவன் ஏவாமல் தானியங்கியாகப் பறக்கும் வானுந்தில் செல்வர் என்பது பொருள். எனவே, வலவன் ஏவிய வானூர்தி ஒன்று எதிர்ப்பொருளாகத் தோன்றுகிறது. இப்படிப் பரவலாகப் பலவிடங்களில் விண்ணுந்து கூறப்பட்டுள்ளதால் விண்வெளிச் செலவுக்கு உரிய பேரறிவைத் தமிழர் பெற்றிருந்தனர் என்பது புலனாகிறது. அதை ஆய்தலை விட்டு, வெறும் கற்பனை என்று எள்ளிநகையாடுவது அறிவுடையார் செயலன்று.

தி.மு ஆயிரங்களில் அதாவது ஏறத்தாழ இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுந்தது இலக்கண நூலான தொல்காப்பியம். இந்தத் தொல்காப்பியத்திலே உயிரியல் பற்றிய உயர்ந்த அறிவியல் கூறப்பட்டுள்ளது. உயிரினங்களின் உயிர்ப்பின் தன்மையும் உயிர்ப் புலன்களின் தன்மையும் கண்டறிந்து, புலன்களின் அடிப்படையில் அவற்றைப் பகுத்துக் கூறியுள்ளமை, எம் முந்தையோரின் அறிவியற் பேராற்றலை எண்ணி எம்மை வியக்கவைக்கிறது. ஓரறிவு உடையனவான நிலைத்திணைகள் உற்று உணர்கின்றன என்ற கருத்து விந்தையானது.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சி.பி.இராமன் என்ற அறிவியலாளர் தாவரங்கள் தங்களுக்கு ஏற்படும் தீங்கை உணர்கின்றன. ஆனால், வெளிப்படுத்தும் உணர்வில்லை என்று நிறுவி நோபல் பரிசு பெற்றார். ஆனால், அவருக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இதைத் தொல்காப்பியம் கூறியுள்ளது.

ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே

உலகிற் படைக்கப்பட்டுள்ள உயிர்களை எல்லாம் ஆராய்ந்து, முற்றுணர்ந்தோர் உயிரினங்களை ஆறாக வகுத்தனர். ஒவ்வொரு உயிரிகளதும் புலன் திறனையும், அவற்றுடைய கூர்ப்பையும் அவர்கள் வகைப்படுத்தியிருப்பது எண்ணியெண்ணிப் பெருமிதம் கொள்ள வைக்கிறது.

புல்லும் மரனும் ஓரறிவினவே - நிலைத்திணை என்று சொல்லப்படும் புல் முதல் மரம் வரையானவை ஓரறிவு உயிரின.

தமக்கு வேண்டிய ஊட்டத்தைப் பெறும், தீங்கிழைக்கப்படும்போது வருந்தும் அறிவு ஒன்று மட்டும் உடையன.

நந்தும் முரளும் ஈரறிவினவே	-	**நத்தையும், சிப்பியும் அவை போன்றவையும் ஈரறிவுயிரின. ஊட்டமும் சுவையும் உணர்வன.**
சிதலும் எறும்பும் மூவறிவினவே	-	**கறையானும் எறும்பும் அவை போன்றனவும் மூவறிவின. ஊட்டம், சுவை, முகருதல் என்று மூவறிவை உடையன.**

நண்டும் தும்பியும் நாலறிவினவே	-	**நண்டும் தும்பியும் அவை போன்றனவும் நாலறிவின. ஊட்டம், சுவை, முகர்தல், காணல் என்னும் நாலறிவினை உடையவை.**
மாவும் புள்ளும் ஐயறிவினவே	-	**விலங்குகளும் பறவைகளும் அவை போன்றனவும் ஐயறிவின. ஊட்டம், சுவை, முகர்தல் காணலுடன் கேட்டல் அறிவினையும் உடையன.**
மக்கள் தாமே ஆறறிவுயிரே	-	**மக்களும் மக்கள் போல்வனவும் ஆறறிவு உயிர்கள். மேற்கூறப்பட்ட ஐந்து அறிவுகளோடு பகுத்தறிந்து உணரும் ஆறாவது அறிவையும் பெற்றுள்ளன.**

இவ்வளவு நுட்பமாக உயிரினங்களை அவற்றின் உயிரியல் தன்மைக்கு அமைய வகுத்தறிந்தனர் என்றால், எத்தகை உயிரியல் அறிவியல் உயர்வுடையோராய் எம்முந்தையோர் வாழ்ந்தனர் என்பது எண்ணிற் பெருமிதம் தான்.

17ம் நூற்றண்டில் பாச்கர் என்ற அறிவியாலாளர் நீர்ப் பொருள் சுருங்காது என்று கண்டறிந்தார். அவரது இந்த கருத்து **'பாச்கர் விதி'** என்று அறிவியலில் அழைக்கப்படுகிறது. இவருக்கு ஏறத்தாழ ஆயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஔவை, நீர்ப்பொருள் சுருங்காது என்பதை மிக அழுத்திக் கூறியுள்ளாள்.

'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர் நாழி முகவாது நாநாழி'

ஆழமான கடல், கடலில் ஆழம் கூடக்கூட நீரில் அழுத்தம் அதிகரிக்கும். அப்படி அழுத்தமுள்ள ஆழத்திற்கு நாழியை அமுக்கி அள்ளினாலும் ஒரு நாழி (அளவுக்கலம்) நான்கு நாழி தண்ணீரை அள்ளாது ஒரு நாழியைத்தான் அள்ளும். இலக்கியம் என்ற பெயரால் **'பாச்கர் விதியை'** ஔவையார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறியுள்ளமை பண்டைத்தமிழரின் அறிவியல் தரத்தைக் காட்டுகிறது அல்லவா?

மண்ணியல், விண்ணியல், நீரியல், உயிரியல், பொறியியல் எனப் பல்துறை அறிவியலைப் பண்டைத்தமிழர் கொண்டிருந்தனர் என்பதற்கு மேலே கூறப்பட்டவை ஒருசில சான்றுகளே. இலக்கியங்கள் முழுவதையும் இந்நோக்கில் ஆராயின், எண்ணற்ற அறிவியற் கூறுகள் காணப்படும்.

வினாக்கள்

1. திருவாதவூரருடைய திருவாசகத்தில் ‘**திருவண்டப்பகுதி**’ எனும் பகுதியில் காணப்படும் வானியல் அறிவை விளக்குக.
2. இராமாயணத்தில் ‘**கோளொத்த சிறை வைத்தாண்ட கொற்றவன்**’ என்ற வரியிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது?
3. இராமாயணத்தில் காணப்படும் இன்றைய மின்னணு அறிவியல் என்ன?
4. வள்ளுவரது சுழன்றும், உலகம் என்றிரு சொற்களிலிருந்து, நீர் அறிகிற உலகம் பற்றிய அறிவியற் கருத்து என்ன?
5. ‘**சுழல்தல்**’ என்னும் தொழிற்பெயரோடு வியப்புக் குறிப்பை எவ்வாறு காட்டுகிறார் வள்ளுவர்?
6. குறளின் பொருள் விரிவுக்கு ஔவையார் கூறிய உவமையை விளக்குக.
7. விண்ணுந்து பற்றி எவ்வெவ் இலக்கியங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன?
8. அறுவகை உயிரினங்களின் புலனுணர்வுப் பிரிவுகளை விளக்குக.
9. இக்கட்டுரையில் நீர் காணும் அறிவியல் துறைகள் யாவை?
10. இப்பாடம் கூறும் அறிவியற் சான்றுகள் பற்றி உமது கருத்து என்ன?
11. உலகம் என்ற சொல்லின் பொருளைச் சான்று காட்டி விளக்குக.
12. நீர்ப்பொருள் சுருங்காது என்ற அறிவியல் கருத்தை ஔவையார் எவ்வாறு விளக்குகிறார்?

மொழிவளம் - மரபுச் சொற்றொடர்கள்

கூறும் கருத்தை வலியுறுத்தவும், செய்தியின் அழுத்தத்தை உணர்த்தவும், சொற்சுருக்கத்திற்காகவும், மொழியழகிற்காகவும் வழங்கி வரும் சொற்றொடர்களை மரபுச்சொற்றொடர்கள் என்பர்.

அவை:- அடுக்குத்தொடர், அடுக்கிடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி, இணைமொழி, மரபுத்தொடர் என்பனவாகும்.

அடுக்குத்தொடர் - கூறியகருத்தை அழுத்துவதற்காக ஒருசொல்லை இரண்டுமுறை இணைத்துச் சொல்லுதல் - வாழையடிவாழையாக.

அடுக்கிடுக்குத்தொடர் - பலபொருட்களுள் ஒன்றின் சிறப்பை, பண்பை எடுத்துக் காட்டுவதற்காக ஒப்பீட்டு அடிப்படையில் பொருளுணர்த்துவது - சின்னஞ்சிறிய.

இரட்டைக்கிளவி - இது ஒரு செயல், ஒர் உணர்வு போன்றவற்றின் ஒலிக்குறிப்பை உணர்த்துவதாகும் - கடகட, படபட

இணைமொழி - இது ஒரு கருத்தின் இருவேறு நிலையின் பயன்பாட்டை உணர்த்துவது - கல்விகேள்வி, அல்லும்பகலும்.

மரபுத்தொடர் - இது சொல்லின் நேர்ப்பொருளை உணர்த்தாமல் வேறொரு பொருளை விளக்குவது.

எ - கா: ஓட்டைக்கையன்

நேர்ப்பொருள் - கையில் ஓட்டையுள்ளவன்.

மரபுப்பொருள் - கணக்குவழக்குப் பாராமல் அள்ளிச் செலவழிப்பவன்.

இங்கே ஒருவனது கையில் ஓட்டை என்ற பொருளை உணர்த்தாது, அவன் ஒரு செலவாளி அல்லது வீணாகச் செலவழிப்பவன் என்ற பொருளைத் தருவது காண்க.

இலக்கணம் - வேற்றுமை

ஒரு பெயர்ச்சொல் வேறுபட்ட கருத்துகளைத் தெரிவிக்க முயல்கையில் அதற்கேற்ப இடைச்சொற்களோடு புணரும். அவற்றுள் முகமையானது (முக்கியமானது) வேற்றுமை என்பர். வேற்றுமைகள் எட்டு. அவற்றில் எழுவாய்வேற்றுமையும் விளிவேற்றுமையும் வேற்றுமை உருபை ஏற்பதில்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையான வேற்றுமைகள் உருபுகளை ஏற்கும்.

சொல்லியத்தில் சொற்றொடர்கள் அமையும்போது, எழுத்துருவில் வேற்றுமைகள் தோன்றாமல் கருத்துருவில் தோன்றுவதும் உண்டு.

வேற்றுமை உருபு எழுத்தில் தோன்றும் சொற்றொடர் தொகாநிலைத்தொடர் என்றும் உருபு எழுத்தில் தோன்றாமல் கருத்தில் தோன்றும் சொற்றொடர் தொகைநிலைத்தொடர் என்றும் கூறுவர். (தொகுதல் - மறைதல்)

தொகைகள் இருவகை	- அவை வேற்றுமைத்தொகை, அல்வழித்தொகை என இரண்டினுள் அடங்கும்.
அல்வழித்தொகை	- வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, உவமைத்தொகை, அன்மொழித்தொகை என ஐந்தாகும்.

விளக்கத்தை கற்றல் இலக்கண நூலில் காண்க.

ஈழத்தமிழரும் ஏதிலி வாழ்வும்

சிலப்பதிகாரத்தில் **'பதியெழு அறியாப் பழங்குடி'** எனப் போற்றப்பட்ட குமரிக்கண்டத் தமிழினம், குமரியின் தொடர்பறாமல் இருந்த இலங்கையிலும் நிலைத்திருந்தது. பின்னர் ஏற்பட்ட கடற்கோளால் இலங்கை குமரியிலிருந்து பிரிந்தபோதும் தமிழகத்தின் தலைநகராகவே இருந்தது என்பதை, மாவீர இராவணன் வரலாற்றிலிருந்து அறியப்படுகிறது. கலிங்கநாட்டு விசயன் என்பவன் கி.மு ஐந்நூறுகளில் இலங்கை வரும்வரை இயக்கர் நாகர் என்ற இரு தமிழ்க் குமுகாயங்கள் தெற்கிலும் வடக்கிலும் பேரரையங்களை நடத்தின. விசயனுடைய சூழ்ச்சியாலும் அவனுக்கும் அவனுடைய எழுநூறு தோழர்களுக்கும் பெண்கொடுத்த, அன்றைய பாண்டிய மன்னனின் மதியின்மையினாலும் சிங்களம் என்றொரு குமுகாயம் உருவாகிற்று. இருந்தும் தமிழராட்சி வீழ்ந்துவிடாமல் கி.பி பதினாறாம் நூற்றாண்டுவரை யாழ்ப்பாணத்தில் நிலைத்து நின்றது. பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பியரது நுழைவால் தமிழீழ அரசுகள் வீழ்ந்தன. எனினும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை வன்னி மன்னரது ஆட்சி நீடித்திருந்தது. இதை வரலாறு காட்டுகிறது. இலங்கையை இறுதியாக ஆண்ட ஆங்கிலேயர் அரசாட்சி இலகுவாக நடப்பதற்கு ஏதுவாக 1833ல் சிங்கள தமிழ்த் தேசங்களை இணைத்ததும் நாமறிந்ததே.

1948ம் ஆண்டு பல்வேறுவகை நெருக்கடிகள் கரணியமாக பிரித்தானிய அரசு இலங்கைக்கு விடுதலை கொடுத்துவிட்டுச் சென்றது. ஆனால், ஒன்றிணைத்த தமிழ் சிங்களப் பகுதிகளை பிரித்துக்கொடாமல் சிங்களத்திடம் ஆட்சியதிகாரத்தைக் கொடுத்துச் சென்றது. அன்றிலிருந்தே தமிழர்களின் ஏதிலிவாழ்வு தொடங்குகிறது.

விடுதலை கிடைக்கிற போது இலங்கை அரசின் அதியுயர் பொறுப்புகளில் தமிழர்களே இருந்தனர். பெரிய கல்விமான்கள் என்று கருதப்பட்ட நம்மவர்கள் அமைச்சர்களாக இருந்தனர். இலங்கையின் முதலாவது தலைமையமைச்சர் (பிரதமர்) டி எசு.சேனநாயக்கா. அவர் இந்தத் தமிழர்களை வைத்துக்கொண்டே அவர்களது ஒத்துழைப்புடன் தமிழர்களை ஏதிலிகளாக்கிக் கொண்டிருந்தார். முன்நோக்குச் சிந்தனையற்ற எங்களது அறிவுவாழிகள் (புத்திசீவிகள்) தாங்களே தலைமைதாங்கி அதற்கு உதவிநின்றனர்.

இன்று தாய்மண்ணை விட்டு வேறுநாடுகளுக்குப் புலம்பெயர்ந்த மக்களையே நாம் ஏதிலிகள் என எண்ணுகின்றோம். ஆனால், உண்மையிலே புலம்பெயர் மக்கள் எவ்வழியாலும் ஏதிலிகள் என்று கூறுவதற்கில்லை. அவர்கள் ஒரு சிறுவிழுக்காட்டினரைத் தவிர மற்ற அனைவரும் வாழ்வின் எல்லா வாய்ப்புகளையும் உரிமைகளையும் பெற்றுச் சிறந்து வாழ்கின்றனர். உண்மையில் தாய்மண்ணிலும் தமிழகத்திலும்தான் நம்மவர் ஏதிலிகளாக வாழ்கின்றனர்.

இலங்கையின் அன்றைய கிழக்கு மாகாணம் நீர்வளம் மிக்க நிலப்பரப்புடையதாய் இருந்தது. பதுளை - மடுசீமாவில் இருந்து ஊறத்தொடங்கிய ஆறு கிழக்கு மாகாணத்தில் பட்டிப்பளை ஆறாக ஓடி, அக்கரைப்பற்றுக்கு அண்மையில் கடலில் சேர்கிறது. அந்தப் பட்டிப்பளை ஆற்றுப்படுகையில் பட்டிப்பளை ஊர் அமைந்திருந்தது. அங்கு தமிழர் மட்டுமே வாழ்ந்தனர். ஏனெனில, அது தமிழர் நிலம். அந்த நிலத்துக் காடுகளை அழித்து மேம்படுத்தி, மக்களைக் குடியேற்றி பொன்விளையும் நிலமாக மாற்றுவோம் என்ற சேனநாயக்காவின் ஏமாற்றுக் கதைகளில் மயங்கிய மேற்கூறிய அறிவுவாழிகள் முன்னின்று, பட்டிப்பளை ஆற்றை மறித்து **'சேனநாயக்க சமுத்திரம்'** என்ற பெரிய அணையைக் கட்டியும் மக்கள் குடியேற்றத்திற்கு வேண்டிய அனைத்து ஏந்துகளையும் (வசதிகளையும்) நிறைவேற்றிக் கொடுத்தனர். ஆனால், அதன் பின் நடந்தது என்ன? மக்கள் குடியேற்றப்பட்டபோது ஐம்பது விழுக்காடு தென்னிலங்கைச் சிங்களவர் குடியேற்றப்பட்டனர். மீந்த பகுதி தமிழர், சோனகர், பறங்கியர் ஆகிய மூவினத்தாருக்கும் வழங்கப்பட்டது. பட்டிப்பளை கல்லோயா என சிங்களத்தில் பெயர் மாற்றம் பெற்றது. அடுத்த சில ஆண்டுகளில் கல்லோயாச் சிங்களவர்கள் ஏதாவது ஒரு வாய்ப்பைத் தோற்றுவித்துக்கொண்டு இனக்கலவரங்களை மேற்கொண்டனர். எனவே, தம் உயிரின் பொருட்டு தமிழர்கள் தோட்டந்துரவு சொத்துகளைக் கைவிட்டு ஏதிலிகளாய் மீந்திருந்த தமிழர் பகுதிகளுக்குள் ஓடினர். இந்தத் தொடரில், இதற்கு முன்னரும் பின்னருமாக இருபத்தைந்து ஆண்டுகளில் தொடர்ந்து பட்டிப்பளை மண்ணைப் பறித்து தமிழர்களை ஏதிலிகளாக்கினர். இன்று பட்டிப்பளை மண் கல்லோயா என்ற தனிச்சிங்கள மாநிலமாயிற்று.

கண்தழை (கந்தளாய்) - கந்தலே, அரிப்பு - சேருவெல, கல்லாறு - சோமபுர, நீலாப்பளை - நீலாப்பொல, முதலிக்குளம் - கொமரவெல என இன்னும் பற்பல தமிழ் ஊர்கள் சிங்கள மயமாக்கப்பட்டு தமிழர் ஏதிலிகளாக்கப்பட்டனர்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தேழில் (1997) சிங்களவர் மேற்கொண்ட இனவெறிக் கலவரங்களின்போது பல்லாயிரம் மலையகமக்கள் ஏதிலிகளாக வடதமிழீழத்திற்கு வந்தனர். இரங்கத்தக்க அந்த மக்கள் இன்றும் ஏதிலிகளாகத்தான் வாழ்கின்றனர். 1995 ல் யாழ்க்குடாநாட்டு மக்கள் அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக, ஒரே இரவில் வெளியேறினர்.

2009 மே மாதம் மொத்த வன்னி மக்களும் ஏதிலிகளாக முட்கம்பி கொட்டடிகளுள் (முகாங்களுள்) அடைக்கப்பட்டனர். அவர்களுடைய அனைத்துச் செல்வங்களும் அழிக்கப்பட்டன. அவர்கள் தேடித்தேடிச் சேர்த்த அவர்களது அசையும் அசையாச் சொத்துகள் கொள்ளையிடப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன. அவர்கள் மீள்குடியேற்றம் என்ற போர்வையுள் இன்றுவரை ஏதுமற்ற ஏதிலிகளாகவே வாழ்கின்றனர். ஏதிலியாகக் கூட உயிர்வாழ முடியாத அரட்டுகோன்மைக்குள் (அரசபயங்கரவாதம்) வைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப்போர் நடந்த ஏறத்தாழ முப்பது ஆண்டுகால இடைவெளியில் பணவாய்ப்புள்ளோர் மேற்குலகம் நோக்கிப் புலம்பெயர்ந்தனர். ஏழைமக்கள் தமது தாய்நாடு என்ற உணர்வில் தோணிகளில் தமிழகம் நுழைந்தனர். அங்கும் அவர்கள் சொல்லொணாத் துன்பத்தில் வைக்கப்பட்டுள்ளனர். வெளிநாடுகளில் இருந்து பணம்பெற வாய்ப்புள்ளோர் பணத்தினால் தமது வாழ்வை ஓரளவு வளமாக அமைத்துக்கொண்டனர். ஏனையோர் தமிழக அரசினால் அமைக்கப்பட்ட ஏதிலிக் கொட்டடிகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். எந்தவித வாழ்வாதாரங்களும் இன்றி, இன்றியமையாத தேவைகளுக்கும் கதியின்றி வறுமையிலும் துயரத்திலும் வாழ்கின்றனர்.

ஒருசில தமிழ் உணர்வாளர்கள் ஈழத்தமிழ் ஏதிலிகளுக்காக ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் தொடர்ந்து நடத்துகின்றனர். எனினும், அரசுகள் அதுபற்றிக் கண்டுகொள்ளாமல் மாந்தநேயமற்று நடக்கின்றன.

ஈழத்திலோவெனில், இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு விடுதலைப்போரின் கை வீழ்ந்தபோது முட்கம்பிக் கொட்டடிகளில் அடைக்கப்பட்ட வன்னிமக்கள், அரசபடைகளின் அத்தனை அரட்டுகோளையும் தாங்கிக்கொண்டு கையறுநிலையில் உள்ளனர். பிறநாடுகளின் அழுத்தங்களின் கரணியமாக அவர்களை இலங்கையரசு மீள்குடியேற்றம் என்ற சாக்கில், கொட்டடிகளில் இருந்து வெளியேற்றி வன்னிமண்ணின் காடுகளில் எந்தவித வாய்ப்புகளும் வாழ்வாதாரங்களும் இன்றி விட்டுள்ளது. அவர்கள் படைகளும் அவர்களது கையாட்களும் செய்யும் கொடுங்கோன்மைகளைத் தாங்கிக் கொண்டு வாழ்கின்றனர். உணவு உடை உறையுள் எதுவுமே அவர்களுக்கு இல்லை. தமது சொந்தமண்ணிலே அழிந்தது போக மீந்திருக்கிற நிலைத்திணைகளையும் விலங்குகளையும் கொண்டு, எதிர்கால வாழ்விற்காகப் போராடுவோம் என்றால், அதற்கும் மறுத்து படையினர் அவர்களது நிலங்களை தாம் கைப்பற்றுகின்றனர். போதாக்குறைக்கு படையினரின் பாதுகாப்புடன் தொழில் முனைவோர், குத்தகைத் தொழில் புரிவோர் என சிங்களவர் குடியேற்றப்படுகின்றனர். இவர்களுடைய இந்தச் செயல்களால் சினங்கொள்ளும் இளைஞர்களை இனங்கண்டு காணாமற் போகச் செய்கின்றனர். ஒரு தமிழ்ப்பெண் தன்னுடலையே காப்பாற்ற முடியாத நிலை.

மீண்டொரு தடவை மக்கள் புரட்சி செய்தாலன்றி இனி மீளமுடியாது என்ற அவலத்துள் தமிழீழ மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் ஏதிலிகளுள் ஏதிலிகளாக, உயிருக்காக வாழ்கின்ற ஏதிலிகளாக வாழ்கின்றனர்.

இவர்கள் இந்த அரட்டுகோன்மையிலிருந்து தம்மைக் காத்துக்கொள்வதற்காக நாட்டைவிட்டுப் புலம்பெயர முயல்கின்றனர். எனவே, கனடா ஆத்திரேலியா போன்ற மாந்தநேயம் மிக்க நாடுகளுக்குத் தப்பியோட எத்தனிக்கின்றனர். இதைப் பயன்படுத்திக் கொண்டு குழூகக்கேடர்கள் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, கடலோடத்

தகுதியில்லாத மரக்கலங்களில் ஏற்றிவிடுகின்றனர். இந்தக் கடற்செலவில் (கடற்பயணம்) கரைசேர்ந்தோர் எத்தனைபேர் என்பது கேள்விக்குறி. காணாமற்போன மரக்கலங்களும் கடலில் ஆழ்ந்து போன மரக்கலங்களும் பல. எதற்காக ஓடப்புறப்பட்டனரோ அந்த உயிரும் கடலோடு கடலானது. மீறிச் சென்றடைந்தோர் சிறைக்கூடங்களுள் வைக்கப்படுகின்றனர். இடைவழியில் இலங்கைக் கடற்படை பிடித்துவிட்டால் பெரும் குற்றவாளிகள் போல் சிறைக்கூடங்களில் தள்ளப்படுகின்றனர். இப்படியாக முடிந்துகொண்டிருக்கிறது ஈழத்தமிழரது வாழ்வு.

இன்று தாய்மண்ணை விட்டு வேறுநாடுகளுக்குப் புலம்பெயர்ந்த மக்களையே நாம் ஏதிலிகள் என எண்ணுகின்றோம். ஆனால், உண்மையிலே புலம்பெயர் மக்கள் எவ்வாற்றாலும் ஏதிலிகள் என்று கூறுவதற்கில்லை. அவர்கள் ஒரு சிறுவிழுக்காட்டினரைத் தவிர மற்ற அனைவரும் வாழ்வின் எல்லா வாய்ப்புகளையும் உரிமைகளையும் பெற்றுச் சிறந்து வாழ்கின்றனர். எனினும், தாய்மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்துள்ளதால் இவர்கள் தங்களை ஏதிலிகளாகவே எண்ணுகின்றனர். உண்மையில் தாய்மண்ணிலும் தமிழகத்திலும் வாழ்கின்ற நம்மவர்களே ஏதிலிகளாக உள்ளனர்.

இவ்வாறு ஈழத்தமிழர்கள் அனைவரும் ஏதோ ஒருவகையில் ஏதிலிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தமிழே எங்கள் உயிர்

மொழிவளம்

பொருளறிதல்

இன்றைய நாட்களில் தமிழரது தமிழ்மொழி அறிவு சுருங்கி வருகிறது. அதனால், பண்டைய இலக்கியங்களைப் படித்து இன்புற வாய்ப்பின்றி, பேச்சு வழக்கையே தமிழ் என்று சொல்லிக்கொண்டு, கற்றும் கல்லாராய் வாழ்கின்றனர். இலக்கியம் கற்றல் குறைந்து வருவதால், எம்மினிய செந்தமிழ் தமிழரால் அறியப்படாததாய் வழக்கொழிந்து, அருஞ்சொற் குவியலாய் மாறிவருகிறது. இதற்குக் கரணியம் கற்றல் கற்பித்தல் முறையில் புகுந்துள்ள தேர்வு நோக்கிய கல்வி முறைதான். தேர்வில் அதிக புள்ளிகள் பெறுவதுதான் கல்வியின் பெறுபேறு என்று வாய்ப்பாட்டு அடிப்படையில் கற்பிக்கப்படுகிறது. அதனால்தான், தமிழுக்கு இந்நிலை. உலகமொழிகளிலே மிக அதிக சொற்களைக் கொண்ட மொழி தமிழ். அத்தகைய சொல்வளம் கொண்ட தமிழ் வடமொழிக்கலப்பால் தள்ளாடுகிறது. வடமொழியைக் களையெடுத்து தமிழைத் தூயதமிழ் ஆக்கும் பணியில் உள்ளோர், மேற்கூறிய மாற்றத்தால் நற்றமிழ் சொற்களைக் கண்டறியமுடியாது திணறுகின்றனர். பெரிதும் இடரப்படுகின்றனர். இன்னும் ஐம்பது ஆண்டுகளில் பழந்தமிழ்ச் சொல்வளம் அறிந்தோர் இல்லையென்ற நிலைகூட வரலாம். ஆகையால், பழந்தமிழ் இலக்கியங்களை கற்பித்தலையும் கற்றலையும் அக்கறையுடன் செய்தல் வேண்டும்.

எனவே, நாம் இலக்கியச் செய்யுள்களை படித்துப் பொருளறிவதற்கு ஒரு முறையைக் கண்டறிய வேண்டும். அதன் மூலம் ஓரளவாவது இலக்கியங்களைப் பொருளுணர்ந்து படிக்க முடியும். ஓரளவு அறிந்தவுடன் தன்னையறியாமலே இலக்கிய அறிவு தன்னுள் வளருவதை ஒருவர் உணர்வார். எனவே, ஓரளவாவது இலகுவாக இலக்கியங்களைக் கற்பது பற்றி நோக்குவோம்.

1. முதலில் ஒவ்வொருவரும் அகரமுதலி ஒன்றை வைத்திருத்தல் வேண்டும். அகரமுதலியில் சொற்பொருள் காண்பதற்கு தமிழின் நெடுங்கணக்கு எழுத்து ஒழுங்கு தெரியவேண்டும். நெடுங்கணக்கு எழுத்து மட்டை ஒன்றை வைத்திருந்தால் அதைப்பார்த்துச் சொற்களைத் தேடலாம். இன்றேல் எந்த எழுத்து எவ்விடத்தில் வரும் என்று காலத்தை வீணாக்கித் தேடிக்வொண்டிருக்க வேண்டியேற்படும்.

2. தேடிக்காணும் பொருளை இரண்டு மூன்று தடவை பார்த்து மனத்திருத் திக் கொள்வதற்காக தாளில் எழுதுங்கள். அல்லது மறக்கப்பட்டுவிடும்.

3. நீங்கள் படிக்கவுள்ள பாடலில் உள்ள சொற்புணர்ச்சிகளைப் பிரியுங்கள். பொருள் புரியாத போதிலும் சொற்களின் புணர்ச்சி புரியும். புணர்ச்சியைப் பிரித்தபின் முதலில் பொருள் விளங்காத சொல் பெரும்பாலும் பொருள் விளங்கும்.

4. இடையில் பொருள் விளங்காத சொல்லை அகரமுதலியில் தேடி எடுத்தாலும் சிலவமயம் பொருள் பொருந்தாமல் இருக்கலாம். எனவே, அந்தச்சொல்லின் முன்னும் பின்னும் உள்ள சொற்கள் கூறும் கருத்திற்கு ஏற்பப் பொருள் எடுத்துக்கொள்ளலாம்.

5. மேலோட்டமாக பாடல் கூறும் உட்பொருளைக் கண்டறியுங்கள் அல்லது காட்சியை மனதில் உருவகியுங்கள். அந்த உட்பொருளுக்கு, காட்சிக்கு ஏற்ப புரியாத சொற்பொருளைப் புரிந்து கொள்ளுங்கள்.

6. நீங்கள் கண்டறிந்த பொருளை இன்னொருவருடன் கலந்துரையாடுங்கள். அப்போது இருவருக்கும் ஏற்பட்ட ஐயம் நீங்கிச் சரியான பொருளைக் கண்டறியலாம்.

ஒரு பாடலை இங்கு பயிற்சிக்கு எடுப்போம்.

குறுந்தொகை 119

சிறுவெள் அரவின் அவ்வரிக் குருளை
கானயானை அணங்கி யாங்கு
இளையள் முளைவாள் எயிற்றள்
வளையுடைக் கையள்எம் அணங்கியோளே

சொற்பிரிப்பு

சிறு வெள்ளை அரவின் அவ் வரிக் குருளை
கான யானை அணங்கி ஆங்கு
இளையள் முளைவாள் எயிற்றள்
வளை உடைக் கையள் எம் அணங்யோள் ஏ

முதல் வரியில் உள்ள அவ் - அந்த என்ற சுட்டுச்சொல்லின் இன்னொரு வடிவம் என்பதை இப்போது புரிந்து கொள்வீர்கள். அணங்கி என்பதற்கு அகரமுதலி வருந்தி, துன்புற்று, தாக்கி எனப் பலபொருள் தரும். அந்தப் பொருளின் அடிப்படையில் யானை,அணங்கி என்றவிடத்தில் பொருள் பொருந்தாது. எனவே, அப்பொருட்களின் அடிப்படையில் அஞ்சுதல் என்று பொருள் கொள்ளலாம். தாக்குதல், வருந்துதல் என்பதற்குள் அஞ்சுதல் என்ற பொருளும் ஓரினப் பொருள்தான். கடைசி வரியில் அணங்கியோள் என்பதில் அணங்கி என்பதற்கு அகரமுதலியின் படி வருத்தி எனப்பொருள் கொள்ளலாம். ஏ என்பது இவளே என்று உறுதிப்படுத்துதல். அதை தேற்றம் என்பர் இலக்கணீயர்.

குறள்

தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

தன் காத்து தன் கொண்டான் பேணி தகை சான்ற
சொல் காத்து சோர்வு இல்லாள் பெண்.

தன்னையும் காத்து: தன்னைக் கொண்டவனையும் காத்து: பெருமை பொருந்திய சொல்லைக் காத்து, இம்மூன்று காப்பினாலும் சோர்வு இல்லாத ஊக்கமுடையவளே சிறந்தபெண்ணாவாள்.

இவ்விதமாக முயன்று இலக்கியங்களைக் கற்று தமிழறிவில் மேன்மையடைக.

இலக்கணம்

சொல்வழுவும் வழுவமைதியும்

பேச்சுவழக்கிலும் எழுத்துவழக்கிலும் இலக்கணமுறை தவறி சொற்கள் கையாளப்படுவதும் உண்டு. எனினும், அவ்வாறு பயன்படும் சொற்களைகாலந்தோறும் பயன்படுத்தி வருவதால் அவை மொழிமரபு என ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு ஏற்றுக்கொள்வதை வழுவமைதி என்பர்.

சொல்வழு

சொல்வழு ஏழ்வகைப்படும்

அவை:-

திணைவழு, பால்வழு, இடவழு, காலவழு, வினாவழு, விடைவழு, மரபுவழு என்பனவாகும்.

இவ்வழுக்கள் மொழிவழக்கில் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் வழுவமைதி எனப்படும்.

வழுவமைதி ஐந்து.

அவை-

திணைவழுவமைதி, பால்வழுவமைதி, இடவழுவமைதி, காலவழுவமைதி, மரபுவழுவமைதி என்பனவாகும்.

வினாவழுவுக்கும் விடைவழுவுக்கும் வழுவமைதி தரப்படவில்லை. கரணியம், வினா வழுவானால் விடை சரியானதாய் அமையாது. விடை வழுவானால் செய்தி தவறான தாக அமையும். எனவே இவற்றுக்கு வழுவமைதி இல்லை.

இதற்கான விளக்கத்தை கற்றல் இலக்கண நூலில் காண்க.

வினாக்கள்

1. சிங்கள இனம் உருவாகிய வரலாற்றைத் தருக.
2. தமிழரின் ஏதிலி வாழ்வு எப்போது தொடங்கியது? இதற்குக் கரணியம் யார்?
3. **'சேனாநாயக்க சமுத்திரம்' 'கல்லோயா'** இவைபற்றி விளக்குக.
4. பட்டிப்பளை மண் கல்லோயா எனும் தனிச்சிங்கள மாநிலமாக மாறியது எவ்வாறு?
5. சிங்கள மயமாக்கப்பட்ட தமிழ் ஊர்கள் சிலவற்றின் பெயர்களைத் தருக.
6. 1977, 1995, 2009 ஆகிய ஆண்டுகளில் அரச அரட்டுகோன்மையினால் இடம்பெயர்ந்த மக்களது ஏதிலி வாழ்வு பற்றி விளக்குக.
7. தமிழகத்தில் அடைக்கலம் புகுந்த ஈழத்தமிழரது வாழ்வின் நிலை என்ன?
8. 2009 ஆம் ஆண்டு விடுதலைப் போரின் வீழ்ச்சியின் பின் வன்னி மக்களின் அவலவாழ்வு பற்றி விளக்குக:
9. சிங்கள அரட்டுகோன்மையிலிருந்து உயிர் தப்புவதற்காகக் கடற்செலவை மேற்கொள்ளும் ஈழத்தமிழ் ஏதிலிகளுக்கு ஏற்படும் விளைவுகள் என்ன?
10. உண்மையில் ஈழத்தமிழ் ஏதிலிகள் எனப்படுவோர் யாவர்?
11. மேற்குலகில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் தம்மை ஏதிலிகள் எனக் கருதுவதற்கான கரணியம் என்ன?
12. **'தமிழின் பெயரால் நாமனைவரும் ஒன்று சேருவோம்'** - இக்கூற்று பற்றி உமது கருத்தை விளக்குக.

திரையிசையில் தித்திக்கும் தீந்தமிழ்

இசையினில் மயங்கியே இன்புறா உள்ளமுண்டோ? அஃறிணை உயிரிகள் கூட இசைக்கு இசைகின்றன. இசை எங்கெல்லாம் உண்டோ அங்கெல்லாம் தேடிச்சுவைக்கலாம். அவ்வகையில் திரைப்படங்களில் காணப்படும் பாடல்களையும், இசையையும் அந்த இசையூடாகச் சொல்லப்படும் கருத்துகளையும் சுவைப்போம்.

திரைப்படங்கள் இன்று வணிகநோக்கில் உருவாக்கப்பட்டாலும் சில படங்கள் குமுகாயத்தை வழிப்படுத்துவனவாகவும் விழிப்பேற்றுவனவாகவும் எடுக்கப்படுகின்றன. அத்தகைய படங்களில் கங்கையைப்போல் காவிரிபோல் ஊறும் இனிய கருத்துகளை அள்ளியெடுத்து தமிழோடிசை கலந்து, உள்ளத்து உணர்வுகள் பொங்க செவிக்கின்பம் மல்க, பாடல்களைப் பாவாணர்கள் பாடித்தந்திருக்கின்றார்கள். அவை காலத்தால் சாகாதவை.

அப்பாடல்கள் எண்சுவைகளின் ஆழத்தைத் தொடுவனவாகவும் உள்ளத்தில் சிலிர்ப்பையும் தெளிவையும் தருவனவாகவும் அமைந்துள்ளன. தீந்தமிழ் என்றால் தீம் - தமிழ் என விரியும். தீம் என்றால் இனிப்புச் சுவை என்று கருதிவிடலாகாது. பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் கலந்து செய்த கண்டு போல் தெவிட்டாத சுவையைத் தருவது. தீம் - சுவை தீஞ்சுவை. அத்தகைய தீஞ்சுவைப் பாடல்கள் சிலவற்றை இங்கு காண்போம்.

பரிவு

அன்பில் ஈடிணையற்றது தாயன்பு. அதற்கு இணையான அன்பு உலகில் கிடையாது. உயர்திணைகளாகட்டும் அஃறிணைகளாகட்டும் எல்லா உயிரினங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது தாயன்பு. அத்தகைய தாயன்பை விளக்கும் ஒரு பாடலைப் பார்ப்போம்.

படம் - பதிபக்தி

சின்னஞ்சிறு கண்மலர் செம்பவள வாய்மலர்
சிந்திடும் மலரே! ஆராரோ
வண்ணத்தமிழ்ச் சோலையே! மாணிக்க மாலையே!
ஆரிரோ அன்பே! ஆராரோ

ஏழைநம் நிலையை எண்ணி நொந்தாயோ?
எதிர்கால வாழ்வில் கவலை கொண்டாயோ?
நாளை உலகம் நல்லோரின் கையில்

நாமும் அதிலே உயர்வோம் உண்மையில்
மாடிமனை வேண்டாம் கோடிசெல்வம் வேண்டாம்
வளரும் பிறையே! நீ போதும்

பாப்பா உன் அப்பாவைப் பார்க்காத ஏக்கமோ?
பாய்ந்தே மடிதனில் சாய்ந்தால் தான் தூக்கமோ?
தப்பாமல் வந்துன்னை அள்ளியே அணைப்பார்
தாமரைக் கன்னத்தில் முத்தங்கள் விதைப்பார்
குப்பைதனில் வாழும் குண்டுமணிச் சரமே!
குங்குமச் சிமிழே! ஆராரோ

தன் பிள்ளைக்கனியமுதை தொட்டிலிலே வளர்த்துகிறாள் அம்மா. பிள்ளை உறங்குவதாய் இல்லை. அதனுடைய முகத்திலே சிரிப்பில்லை. அதைக்கண்டு தாயின் மனம் கவல்கிறது. கவன்றபோதிலும் தன் மகவைப் பார்க்கப் பார்க்க உள்ளம் களிப்பில் மலர்கிறது. பாடிப்பாடித் தாலாட்டுகிறாள். அவளுடைய எண்ணத்திலே கவலை தோன்றுகிறது. குப்பையில் முளைத்த குன்றிமணி போல் எங்கள் ஏழ்மைக்குள் வந்து பிறந்தாயே செல்வமே! என்று கவன்றுகொண்டே பாடுகிறாள்.

கண்ணோ மலர். வாயோ பவளமலர் (ஆம்பல்) அழகில் போதையூட்டுகிறது. மலர் சிந்தும் அழகு மேனி. இலக்கியங்களும் கூத்தும் இசையும் மலர்ந்து நிறைந்துள்ள தமிழ்ச் சோலை நீ. ஒன்பான் மணிகளிலே விலையுயர்ந்த மாணிக்கத்தால் கோத்த மாலை நீ. என் அன்பே கண்ணுறங்கு.

ஏழைகளாகிய எமது நிலைக்கிரங்கி அதைப்போக்க செல்வமாக வந்தாயோ? எதிர்காலத்தில் எம் வாழ்வை சிறப்பிக்க எண்ணி வந்தாயோ? நாளைய உலகம் இன்றுபோல் கொடுமை நிறைந்ததாய் இருக்காது. அது நல்லோரின் கையில் தான் இருக்கும், அந்த உலகில் நாமும் உயர்வடைவோம். இது உண்மையிலும் உண்மை.

எமக்கு மாடிமனை வேண்டாம், கோடிகோடியாய் செல்வம் வேண்டாம். வளர்பிறையான நீயே போதும் செல்வமே கண்ணுறங்கு.

பிள்ளையோ தூங்குவதாகத் தெரியில்லை. அப்பாவைக் காணவில்லை என்ற ஏக்கமா கண்ணே! அப்பாவின் தோளில் சாய்ந்தால்தான் தூக்கம் வருமா? அப்பா வருவார். பிள்ளையை இரண்டு கைகளாலும் அள்ளியெடுத்து உன் தாமரைப் பூப்போன்ற கன்னத்தில் முத்தங்கள் பொழிவார். குப்பையில் வளர்ந்த குன்றிமணியின் மாலையே! குங்குமச் சிமிழே தூங்கடா கண்ணே!

புரியாத மொழியில் புரிந்த அன்பின் இசையில் மயங்கிக் குழந்தை கண்வளர்கிறது.

படம் - தேடி வந்த மாப்பிள்ளை

தாய்மை

வெற்றிமீது வெற்றி வந்து என்னைச் சேரும் - அதை
வாங்கித் தந்த பெருமை எல்லாம் உன்னைச் சேரும்
பெற்றெடுத்து பெயர் கொடுத்த அன்னை அல்லவோ - நீ
பேசுகின்ற தெய்வம் என்பது உண்மை அல்லவோ!

தாய்ப்பாலில் வீரம் கண்டேன்
தாலாட்டில் தமிழைக் கண்டேன்
உண்ணாமல் இருக்கக் கண்டேன்
உறங்காமல் விழிக்கக் கண்டேன்

மற்றவர்க்கு வாழுகின்ற உள்ளம் அல்லவோ - அது
உன்னிடத்தில் நானறிந்த பாடமல்லவோ!

அன்னை சிந்தும் கண்ணீர் எல்லாம் பிள்ளையினால் பன்னீராகும்
ஆசை தரும் கனவுகள் எல்லாம் அவனால் தான் நனவுகளாகும்
அன்று தொட்டு நீ நினைத்த எண்ணம் என்னம்மா? -அதை
இன்று தொட்டு நான் முடிக்கும் வண்ணம் பாரம்மா!

மகன் தாயை எண்ணிப் பார்க்கிறான். என்னை ஈன்று நான் வாழ்வதற்காகவே வாழுகிற என் அம்மா. அவள் இல்லையென்றால் நானில்லை. என்னைப் பெற்றெடுத்து, இன்னார் எனப் பெயர் தந்து, இந்த உலகத்தில் வாழ்க்கையில் வெற்றிகள் எல்லாம் சேரும்படி என்னை வளர்த்திருக்கிறாளே. ஆகா! என்னை உலகிற்குத் தந்து சான்றோனாய் ஆன்றோனாய் உருவாக்கிய தெய்வம் தாயல்லவா? நாம் கெண்டாடுகின்ற தெய்வங்கள் பேசாது. ஆனால் தாய் பேசுகிற தெய்வம். தாயை விட உயர்ந்தது உலகிலுண்டா?

அவளுடைய தாய்ப்பாலை ஊட்டும்போதே வீரத்தையும் ஊட்டினாள். அவள் பாடிய தாலாட்டில் தமிழ்ப்பற்றை ஊட்டினாள். என் நலம் நோக்கி, தான் உண்ணாமல் இருந்தாள். என்னை உறங்கவைத்துத் தான் உறங்காமல் காத்து விழித்துக் கிடந்தாள். அவளிடத்தில் நான் கற்றுக்கொண்ட பாடம் என்பும் பிறர்க்குரியதாய் வாழ்வதல்லவா.

எனக்காக அவள் விட்ட கண்ணீர் எல்லாம் என்னைப் பன்னீரால் குளிப்பாட்டியது போலல்லவா நலம் சேர்த்தன. அவளது கனவுகளையெல்லாம் நான் நனவாக்குவேன். தாயே! நீ உன் உள்ளத்தில் கொண்ட ஆசைகளையெல்லாம் நான் நனவாக்குவேன். நீ உன் கண்ணாலே காண்பாய் அம்மா. ஆம். ‘ஈ’ என்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்.

உழவு

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம். அதனால் உலகில் சிறந்த தொழில் உழவேயாகும். ஏரின் கொழு ஆணி மண்ணுள் பதிவதனால் உழவன் உலகத்தார்க்கு ஆணியா கிறான். உழவன் உழவில்லை என்றால், இவ்வுலகின் இயக்கமே நின்றுபடும். செவ்வாயில் கலம் விட்டாலும் உழவின்றேல் ஒன்றுமேயில்லை. அதனால் தான், தமிழன் உழவைப் போற்றினான். தைப்பொங்கல் என்றும் மாட்டுப்பொங்கல் என்றும் உழவுத்தொழில் தொடர்பில் விழாக்களைக் கொண்டாடினான். பழந்தமிழ் மக்களுடைய இந்தக் கூர்த்த மதிநலம், எண்ணி மகிழவும் போற்றவும் தக்கது. அவ்வகையில் திரைப்படப் பாடல் ஒன்றைக் காண்போம்.

படம் - பிள்ளைக் கனியமுது

ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லை

பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே - பயிர்
பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரியினாலே - நாம்
சேமமுற நாள் முழுதும் உழைப்பதனாலே - இந்த
தேசமெல்லாம் செழித்திடுது நம்ம கையாலே

நெற்றி வேர்வை சிந்தினோமே முத்து முத்தாக - அது
நெல்மணியாய் விளைஞ்சிருக்கு கொத்துக் கொத்தாக
பக்குவமாய் அறுத்து அதைக் கட்டுகட்டாக - அடிச்சி
பதறு நீக்கி குவிச்சி வைப்போம் முத்து முத்தாக

வளர்ந்து விட்ட பருவப்பெண் போல் உனக்கு வெக்கமா - தலை
வளஞ்சி சும்மா பாக்கிறியே தரையின் பக்கமா - இது
வளத்து விட்ட தாய்க்கு தரும் ஆசை முத்தமா - ஏன்
மனைக்கு வரக் காத்திருக்கும் நீயென் சொத்தம்மா!

கலப்பை தாங்கிய கொழுவின் முனைக்கு நிகராக இவ்வுலகில் எதுவும் கிடையாது. அந்த ஏர்முனையால் என்றைக்குமே விருந்தோம்பலுக்குப் பஞ்சமேயில்லை. உலகில் மழை சூரியனால் கிடைக்கிறது. அந்த மழையினால் தான் பயிர்கள் பூத்துக்காய்த்து விளைகின்றன. நாள் முழுவதும் உடல் நலம்பெறுமாறு நாம் உழைப்பதனால், அந்த உலகம் எங்கள் கைகளால் செழித்து வாழ்கிறது.

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்தோமே, அந்த வியர்வைத்துளிகள் கொத்துக்கொத்தாக நெல்மணிகளாய் விளைந்திருக்கின்றன. சூடடித்துப் பதர் நீக்கி முத்துமுத்தாக இருக்கும் அந்த நெல்மணிகளைக் குவித்துவைப்போம். இதனால் வறுமை அகன்றது. விருந்தோம்பல் சிறந்தது.

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்து, கண்ணேபோல் காத்த உழவன் விளைந்திருக்கும் நெற்பயிர்களைப் பார்க்கிறான். உள்ளம் களிப்பில் துள்ளுகிறது. கதிர்கள் முற்றி வளைந்து நிலம்நோக்கி நிற்கின்றன. மகிழ்வில் பயிர்களுடன் பேசுகிறான். ஏனம்மா! வளர்ந்து விட்ட குமரிப் பெண்போல் உனக்கு நாணமாக உள்ளதா? தலைசாய்த்துப் பார்க்கிறாயே தரையின் பக்கமாக. அல்லது உன்னை இப்படி வளர்த்துவிட்ட நிலமகளுக்கு நீ ஆசையுடன் அளிக்கும் முத்தமா? எதுவானாலும் என் மனைக்கு வரத்தானே காத்திருக்கிறாய். எனக்கு நீ சொந்தக்காரி.

மேற்கண்ட இந்தப் பாடலில் உழவன் முரணாக கற்பனையை வளர்ப்பது அவனது உள்ளக் களிப்பின் வெளிப்பாடு என்ற உள்ளுறை பொருளை பாவலர் அருமையாகத் தந்துள்ளார். ஒருகால் கதிரவனும் மாரியும் வேண்டுவன தந்தாலும் என்கையால் தான் இவ்வுலகம் வாழ்கிறது என்கிறான். மறுகால் தன் வியர்வைத்துளிகள் தான் நெல்மணிகளாய் விளைந்திருக்கின்றன என்கிறான். பின் பயிரைக் குமரிப்பெண்ணாகக் கற்பனையில் அதனுடன் பேசுகிறான். ஓர் உழவனின் உள்ளக்கிளர்வு உண்மையிலேயே இப்படித்தான் இருக்கும். அதைப் பட்டறிந்தவர்கள் உணர்வார்கள்.

காதல்

உலகப்படைப்பின் உயிர்த்துவம் நோக்கியே இயற்கை காதலைப் படைத்திருக்கிறது. எல்லாவுயிர்களுக்கும் பொதுவான இந்த இனிய உணர்வு மாந்தரிடத்தில் தான் வரன்முறை தவறியுள்ளது. உணர்வுகளால் இன்புறாமல் உடலால் இன்புறுவதால்தான் இந்நிலை. மாந்தரின் காதலானது உள்ளங்களின் இணைவால் தோன்றவேண்டும். அப்படித்தோன்றின் அங்கே வரன்முறை தவறாது. அது குமுகாயத்திற்கு நலம் பயக்கும் காதலாகும். அத்தகைய காதலை தரும் ஒரு பாடல்.

படம் - பிள்ளைக் கனியமுது

வசந்த முல்லை போலே வந்து
அசைந்து ஆடும் பெண் புறாவே
மாயமெல்லாம் நானறிவேனே
வா வா ஓடிவா

இசையினில் மயங்கியே இன்புறும் அன்பே வா
ஈடில்லா உனையே என்மனம் நாடுதே

சிந்தனை விருந்தாகி சீரிய கனவாகி
விந்தைகள் புரிந்தாய் நானறியாமலே
மந்திரக் கண்ணாலே தந்திர வலைவீசும்
சுந்தரவடிவே உன்துணை காணவா

இந்திரவில் நீயே
சந்திர ஒளி நீயே
ஈடில்லா உனையே என்மனம் நாடுதே

பெண்புறாவின் குறுகுறு நடை நடந்து, இளவேனிற் காலத்து முல்லைமலர் வாசம் தென்றலில் மிதந்து வருகிறதைப் போல் வருகிறாள். அதைக் கண்டதும் கலைஞனான காதலனின் உள்ளத்திலே உவகை பொங்குகிறது. கண்ணாலும் நடையாலும் எனை வீழ்த்தும் உன் மாயமெல்லாம் நானறிவேன் கண்ணே ஓடிவா! விரைந்து வா! என்கிறான்.

என் இசையினில் மயங்கியே இன்புறும் அன்பே! ஈடில்லா உனையே என்மனம் நாடுதே என்கிறான். அவளுக்கு ஈடில்லை. அவளுக்கு நிகர் அவளே தான். வள்ளுவன் கண்ட பெருந்தக்க பெண் அவள்.

உயரிய என் எண்ணங்களுக்கு விருந்தாய் ஆனாய். அதனால், சிறந்த வாழ்க்கைக்கான கனவாய் நீ எனக்கு அமைந்துவிட்டாய். இதை நான் அறியாமலேயே என் உள்ளத்து உணர்வுகளிலே விந்தைகளைப் புகுத்திவிட்டாய். கண்டதும் கட்டுண்ண வைக்கும் மந்திரம் போன்று உன் கண்ணாலே என்னைக் கட்டி, அதிலிருந்த நான் தப்பிவிடாமல் தந்திரமாக வலை வீசுகிற அழகின்உருவானவளே!,

நான் உன் துணையால் கிடைக்கும் பேரின்பத்தைக் காண வா! அழைக்கிறான். வாழ்க்கைத் துணைநலம் தானே. வாழ்க்கைச் சுவையல்லவே.

பின்னும் இக்காதலனால் பொங்கும் உள்ளத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால், அவனுடைய வண்ணனை நீள்கிறது. வண்ணக்கோலங்கள் காட்டும் வானவில் நீ.! முழுமதியின் பால்நிலா நீ. ஆதனால, நானல்ல என் மனமே ஒப்புயர்வற்ற உன்னை நாடுகிறது. என்ன அருமையான சொற்புனைவு. இந்த இடத்திலே காமம் புலப்படாத உள்ளங்கள் இணைவதைக் கண்டு இன்புறலாம்.

குமுகாயம்

இந்தக் குமுகாயம் ஏற்றத்தாழ்வுகளால், மேடுபள்ளங்களால் சிதைந்து வேற்றுமைகளை நிலைநிறுத்தி, சீரழிந்து கிடக்கிறது. சாதிச்சண்டைகள் கொலைவெறித் தாண்டவங்கள் வன்கொடுமைகள் நிறைந்ததாய் இருக்கிறது. பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்று தானே இந்த இயற்கை படைத்திருக்கிறது. அப்படியிருக்க ஏனிந்த வேறுபாடு. எல்லாமக்களும் ஒன்றாக வாழமுடியாதா? என்று ஏங்குகிறான் ஒரு குமுகாயத் தொண்டன். இந்த மக்கட்கூட்டத்திற்கு இதை உறைக்கும்படி சொல்லிப் புரிய வைக்கவேண்டும் என்று துடிக்கிறான். மரணத்திற்குத்தான் மாந்தன் அஞ்சுவான். கடவுளுக்கும் அஞ்சாத கொடியன் மரணத்திற்குக் கட்டாயம் அஞ்சுவான். எனவேதான், இக்கவிஞன் வாழ்வின் முடிவான மரணத்தையும் அது முடிகிற இடமான சுடுகாட்டையும் தன் உள்ளக்குமுறலுக்கு இடமாக்குகிறான்.

படம் சாராங்கதாரா

சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே

சாதியில் மேலோரென்றும் தாழ்ந்தவர் தீயோரென்றும் பேதமிலாது
எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு
தொல்லையின்றியே தூங்கிடும் வீடு
உலகினிலே அதுதான் நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே

ஆண்டி எங்கே அரசனும் எங்கே
அறிஞன் எங்கே அசடனும் எங்கே
ஆவி போனபின் கூடுவாரிங்கே
சேவை செய்யும் தியாகி சிங்கார போகி
ஈசன் பொற்பாதம் தன்னை நாடிடும் யோகி
இங்கே எல்லோரும் ஒன்றாய் உறங்குவதாலே

உண்மையிலே இதுதான் நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே

ஏற்றத்தாழ்வின்றிச் சரிநிகர் சமானமாய் இருக்கின்ற இடம் எது? இந்த இடம்தான் அது. நாம் வாழ்வில் எங்கும் காணாத சமத்துவம் உலாவும் சுடுகாடு தான். நான் உயர்ந்த சாதி நீ தாழ்ந்த சாதி தீயவன் என்கிற பேதம் இல்லாது, எல்லோரும் ஒன்றாக வாழ்க்கை முடிவில் சேருகிற காடு சுடுகாடு. எந்தத் தொல்லையுமின்றி எந்தச் சச்சரவுகளும் இன்றி ஏதுமறியாமல் தூங்கிடும் வீடு இந்தச் சுடுகாடு தான். அதனால், சுடுகாடு தான் உண்மையிலேயே சமத்துவம் உலாவும் ஒரே இடம்.

இரந்துண்ணும் ஆண்டி, நாடாளும் அரசன், கற்றிந்த அறிஞன், கல்லாத ஒன்றுக்கும் பயன்படாத மூடன், குமுகாயம் நலமுற தொண்டாற்றும் நல்லோன், ஊரை ஏமாற்றித் தான் போகவாழ்வு வாழ்கிற போகி, வீடுபேற்றிற்காக இறைவன் திருவடிகளே துணை என்கிற துறவி, எவராயிருந்தாலும் உடலைவிட்டு உயிர் போனபின் முடிவில் இங்கே ஒன்றாய்க் கூடி நித்திய உறக்கம் கொள்வதனால் உண்மையில் நாம் வாழ்வில் காணா சமத்துவம் நிலவுகிற இடம் சுடுகாடு தான்.

மதம்

இந்த உலகப் படைப்பிலே படைக்கப்பட்டவை எல்லாம் கற்பகாலத்தில் இருந்தே மாறாமல் இருக்கின்றன. தத்தமது இயல்பை பேணி இயற்கையைச் சார்ந்து வாழ்கின்றன. ஆனால், மாந்தன் மட்டும் தன் இயல்பிலிருந்தும் இயற்கையிலிருந்தும் மாறிவிட்டான். பட்டறிவுகளிலிருந்து பெற்ற அறிவைப் பயன்படுத்தி தானாகவே இயற்கையினின்றும் மாறுபட்ட பலவற்றைப் படைத்தான். இயற்கையிலுள்ள சக்திகளை அறிந்துகொண்டு அவற்றைப் பயன்படுத்தி ஆற்றரும் செயல்களைப் புரிந்தான். இருந்தும் ஒவ்வொரு குமுகாயமும் தமக்குள் மதத்தின் பெயரால் முட்டி மோதிக்கொண்டிருக்கின்றன. அதனால், மாந்தவாழ்வின் செந்நெறி சிதைந்து விட்டது. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணம் மறைந்துவிட்டது. ஏன்? ஏன்? என்ற கேள்வியினால் பாவலனின் உள்ளத்தெழுந்த ஆற்றாமை இப்பாடலின் மூலம் வெளிப்படுகிறது.

படம் - பாவமன்னிப்பு

வந்தநாள் முதல் இந்தநாள் வரை
வானம் மாறவில்லை
வான் மதியும் நீரும் கடல் காற்றும்
மலரும் மண்ணும் கொடியும் சோலையும்
நதியும் மாறவில்லை
மனிதன் மாறிவிட்டான் மதத்தில் ஏறிவிட்டான்

நிலை மாறினால் குணம் மாறுவான்
பொய் நீதியும் நேர்மையும் பேசுவான்
தினம் ஜாதியும் பேதமும் கூறுவான்
அதுவே தன் விதியென்றோதுவான்

பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்
பாயும் மீன்களில் படகினைக் கண்டான்
எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்
எதனைக் கண்டான்
மதங்களைப் படைத்தான்

இன்பமும் துன்பமும் இயற்கையின் நீதி
ஏற்றத்தாழ்வுகள் மனிதனின் ஜாதி
பாரில் இயற்கை படைத்ததையெல்லாம்
பாவி மனிதன் பிரித்து வைத்தானே

இந்த உலகம் தோன்றிய நாள்முதல் இன்றுவரை வானம் மாறவில்லை. வானில் தோன்றும் மதியும் கடலும் காற்றும் நன்னீரும் செடிகொடிகளில் தோன்றும் மலரும் இந்த மண்ணும் கொடியும் சோலைகளும் ஆறுகளும் மாறவில்லை. அவையெல்லாம் படைக்கப்பட்டபடியே அப்படியே இருக்கின்றன. ஆனால், மாந்தன் மாறிவிட்டான். இல்லாத மதத்தின் பெயரால் இருக்கிற இறைவனைப் பிரித்துப் போட்டு மதத்தில் ஏறிவிட்டான். ஒன்றேயான இறை மாந்தரால் பிரிக்கப்பட்டு, பல மதங்களாகி மக்களை மோதவைக்கிறது. மதப்போர்களை நிகழ்த்தி மக்களை அழிக்கிறது. கடவுள் இப்படிச் செய் என்று சொன்னானா? இதைச்செய்தது மாந்தன்.

பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கருடனைப் பார்த்துச் சிரித்தது போல் தன்னிலை மாறினால் குணமும் மாறுவான். பொய்யே அறமும் நேர்மையும் பேசுவான். பொய்யை மெய்யாக்குவான் மெய்யைப் பொய்யாக்குவான். அதிகாரத்திற்கு வரும்வரை மாந்தநேயம் பேசுவர், அதிகாரத்திற்கு வந்துவிட்டால் அரட்டுகோளே அறமென்று ஏரணிப்பர். நாள் தவறாது தலைவிதிப்படிதான் சாதி உண்டாயிற்று. அதனாலே நீ தாழ்ந்தவன்: தீண்டத்தகாதவன். அது தான் விதியென விரிவுரை செய்து, சமத்துவம் பிறந்துவிடாமல் செய்வான்.

பறவையைக் கண்டான். அது கீழிறங்குவதையும் மேலெழுவதையும் பறப்பின் இலாகவத்தையும் கண்டு விண்ணுந்தைப் படைத்தான். எகிறிப் பாய்ந்து நீரைக்கிழித்தோடும் மீன்களைக் கண்டான். அந்தப் பட்டறிவிலிருந்து படகினைக்

கண்டறிந்தான். மலைக்குன்றுகளிலே தன்னுடைய குரல் மீண்டும் எதிரொலிப்பதைக் கேட்டான். ஒலி காற்றில் மிதக்கிறது என்பதை உணர்ந்தான் வானொலியைப் படைத்தான். பட்டறிவுகளிலிருந்து பயன்பெறத் தெரிந்துகொண்ட மாந்தன், எதனைக் கண்டு மதங்களை உருவாக்கினான். இயற்கையை ஒட்டி படைப்புகளை மேற்கொண்ட அவன் பயனைப் பெற்றான். இயற்கையில் இல்லாத ஒன்றைத் தன்னுணர்வுக்கு ஏற்றவாறு படைத்துச் சீரழிந்தானே!

இன்பமும் துன்பமும் இயற்கையின் அறம். அந்த இன்பத்தையும் துன்பத்தையும் சாதி ஏற்றத்தாழ்வுகளை வகுத்து தன்னுடைய எண்ணத்திற்கு மாற்றியமைத்து விட்டானே! இன்பம் என்பது தனக்குத்தான் தாழ்ந்தவனுக்கு இல்லை, அவன் துன்பத்துள் வாழவேண்டியது அவனுடைய விதி. பாரில் உயிர்கள் நலம்பெற வேண்டி இயற்கை படைத்ததை எல்லாம் இந்தப் பாழாய்ப்போன மனிதன் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிப் பிரித்துவிட்டானே. மதங்களையும் சாதிகளையும் உருவாக்கி ஆறறிவை பெற்ற பயனை அழித்துவிட்டானே பாவி.

படம் - ஆட்டோகிராப்

நம்பிக்கை

ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே
வாழ்வென்றால் போராடும் போர்க்களமே!

ஒவ்வொரு விடியலுமே சொல்கிறதே
இரவானால் பகலொன்று வந்திடுமே!

நம்பிக்கை என்பது வேண்டும் நம் வாழ்வில்
இலட்சியம் நிச்சயம் வெல்லும் ஒரு நாளில்
மனமே! ஓ மனமே! நீ மாறிவிடு
மலையோ அது பனியோ நீ மோதிவிடு

உள்ளம் என்றும் எப்போதும்
உடைந்து போகக் கூடாது
என்ன இந்த வாழ்க்கை என்ற
எண்ணம் தோன்றக் கூடாது

எந்த மனித நெஞ்சுக்குள் காயமில்லை சொல்லுங்கள்
காலப்போக்கில் காயமெல்லாம் மறைந்து போகும் மாயங்கள்
உளி தாங்கும் கற்கள் தானே மண்மீது சிலையாகும்

வலி தாங்கும் உள்ளம் தானே நிலையான சுகம் காணும்

யாருக்கில்லை போராட்டம்
கண்ணில் என்ன நீரோட்டம்
ஒரு கனவு கண்டால்
அதை தினம் முயன்றால்
ஒரு நாளில் நிஜமாகும்

மனமே! ஓ மனமே! நீ மாறிவிடு
மலையோ அது பனியோ நீ மோதிவிடு

வாழ்க்கை கவிதை வாசிப்போம்
வானம் அளவு யோசிப்போம்
முயற்சி என்ற ஒன்றை மட்டும்
மூச்சை போல சுவாசிப்போம்
இலட்சம் கனவு கண்ணோடு
இலட்சியங்கள் நெஞ்சோடு
உன்னை வெல்ல யாருமில்லை
உறுதியோடு போராடு!

மனிதா உன் மனதைக் கீறி விதை போடு மரமாகும்
அவமானம் படுதோல்வி எல்லாமே உறவாகும்
தோல்வி இன்றி வரலாறா
துக்கம் இல்லை என் தோழா

ஒரு முடிவிருந்தால்
அதில் தெளிவிருந்தால்...
அந்த வானம் வசமாகும்

பூக்கள் காலையில் மலர்கின்றன. வண்ணவண்ணக் கோலம் காட்டி மணம் வீசிக் காற்றிலாடி மகிழ்வூட்டி, வண்டாடக் கசங்கி மாலையில் வாடிவதங்கி வீழ்கின்றன. மறுபடியும் மறுநாட் காலையில் புதிதாக மலர்ந்து நேற்றுப் போன்றே வீழ்கின்றன. இப்படியாக மலர்கள் இன்பமும் துன்பமும் வாழ்வில் கலந்தது தான் வாழ்க்கைப் போராட்டம் என்று நமக்குச் சொல்கின்றன.

ஒவ்வொரு விடியற்காலைப் பொழுதும் விடியலின் பின்னும் இரவு வந்துதான் தீரும் என்று சொல்கிறது. துன்பம் வந்தால் துவண்டுவிடாதே அடுத்துவருவது இன்பம்தான் என்று எமக்குச் சொல்கிறது.

வாழ்வில் ஒரு குறிக்கோள் வேண்டும். அதன்மீது நம்பிக்கை வேண்டும். மலையே வந்தாலும் எதிர்த்துத் தகர்த்து முன்னேறு. மனமே! என் மனமே! ஒரு நாள் உன் குறிக்கோள் வெல்லும்.

உள்ளம் என்றும் உடைந்துபோகக் கூடாது. என்ன வாழ்க்கை என்று சலிப்புத் தோன்றக்கூடாது. தோன்றினால் வாழ்க்கை வாழ்கையாய் இராது. யார்க்கில்லைப் வாழ்வில் போராட்டம். எல்லோருக்கும் தான் வாழ்வில் போராட்டம் இருக்கும். எனவே, அதைக்கண்டு கண்கலங்கி நிற்காதே. தொடர்ந்து போராடு. அதுதான் வாழ்வை வென்றெடுக்கும் வழி..

காயங்கள் இல்லாத நெஞ்சே இல்லை. ஆனால், அந்தக் காயங்கள் காலப் போக்கில் மாயமாக மறைந்துவிடும். அதுதான் காலம் என்னும் மருந்தின் செயல். உளி கல்லை உடைத்துச் செதுக்கினால் தான் அழகான கற்சிலை தோன்றும். அதுபோல், வலிகளைத் தாங்கிப் பழகிய உள்ளம் தான் வாழ்க்கையை வென்று நலம் தரும்.வாழ்க்கையை - கவிதையைச் சுவைத்து இன்புறுவது போல் துய்த்து வாழ்வோம். அதனூடாக ஆழ எண்ணி முயல்வோம். முயற்சியை மட்டும் விட்டுவிடாமல் மூச்சைப்போல் விடாமல் தொடர்வோம். மூச்சை நிறுத்தினால் உயிர் போவதுபோல் முயற்சியை நிறுத்தினால் வாழ்வு போய்விடும்.

குறிக்கோளை மனக்கண்ணிலே காண். அதை நெஞ்சிலே நிலைநிறுத்திக்கொள். உறுதியோடு போராடினால் உன்னை உலகத்தில் வெல்ல யாராலும் முடியாது. மனதில் உன் குறிக்கோளை ஆழமாக ஊன்றிவிடு. அது கட்டாயம் வளர்ந்து மரமாகும். வழியில் பல தடைகள் வரலாம் அவமானம் தோல்வி எல்லாம் வரும். அவற்றைத் தாங்கிக்கொண்டு போராடு. தோல்விதான் வரலாற்றைப் படைக்கிறது.

இந்தத் திரைப்பாடல் மூலம் நாம் உணரவேண்டியது, வாழ்வில் குறிக்கோள் வேண்டும். அதன்மீது நம்பிக்கையோடு விடாது முயன்றால் எண்ணியதை எண்ணியபடி அடையலாம். அந்த முயல்வில் தோல்விகள் தடைகள் வரலாம். அவற்றைக் கண்டு துவளாமல் கலங்கிவிடாமல் இரு. தோழா! நீ ஒரு முடிவு எடுத்தால் அதில் தெளிவாக உறுதியாக இருந்தால் வானத்தையும் வெற்றி கொள்ளலாம்.

படம் - நாளை நமதே

அன்பு மலர்களே! நம்பியிருங்களே
நாளை நமதே இந்த நாளும் நமதே
தர்மம் உலகிலே இருக்கும் வரையிலே
நாளை நமதே இந்த நாளும் நமதே

தாய்வழி வந்த தங்கங்கள் எல்லாம்
ஒருவழி நின்று நேர்வழி சென்றால் நாளை நமதே
காலங்கள் என்னும் சோலைகள் மலர்ந்து
காய்கனியாகும் நமக்கென வளர்ந்து

பாசம் என்னும் நூல்வழி வந்த வாசமலர்க் கூட்டம்
ஆடும் அழகில் அமைவதுதானே வாழ்க்கைப் பூந்தோட்டம்
மூன்று தமிழும் ஓரிடம் நின்று பாடவேண்டும் காவியச்சிந்து
அந்தநாள் நினைவுகள் எந்த நாளும் மாறாது

வீடு என்னும் கோவிலில் வைத்த வெள்ளித் தீபங்களே!
நல்ல குடும்பம் ஒளிமயமாக வெளிச்சம் தாருங்களே
நாடும் வீடும் உங்களை நம்பி நீங்கள்தானே அண்ணன் தம்பி
எதையுமே தாங்கிடும் இதயம் என்றும் மாறாது

நாளை நமதே இந்த நாளும் நமதே

ஒரு புரட்சித்தலைவன் இளைய குமுகாயத்தைப் பார்க்கிறான். அந்த முகங்களில் இளமையின் மலர்ச்சி தெரிகிறது. ஆனாலும் அவர்கள் மாற்றானின் அதிகாரத்துள் அடங்கிக் கிடக்கின்றார்கள். அவர்களைப் பார்த்து நம்பிக்கை ஒளியூட்டி தன்னுரிம (சுதந்திரம்) உணர்வை விதைக்கிறான். அன்பு மலர்களே! நம்பியிருங்கள் இனிமேலும் அடங்கிக் கிடக்க முடியாது. நாளை நம்முடைய விடுதலைக்கான நாள். நாளை மட்டுமல்ல இன்றைய நாளும் எங்களது நாள்தான். ஏனென்றால், இன்று நாங்கள் ஒன்றுபட்டுவிட்ட நாள். நாம் எழுச்சி கொண்ட நாள். அறம் என்பது இந்த உலகில் உள்ளவரை, இன்றே நமது நாளாகத் தொடங்கிவிட்டது. நாளை நாம் வென்றெடுத்த நாளாக இருக்கும். ஏனென்றால் அறம் வெல்லும்.

தமிழ்த்தாயின் வழியில் தோன்றிய தங்கங்கள் நீங்கள். நீங்களெல்லாம் ஒன்றுபட்டு அறவழியில் நின்று போராடினால் நாளை நமது நாளாகும். காலம் என்றும் ஒரேமாதிரியாக இருக்காது. எதிர்காலம் சோலைபோல் வளர்ந்து கொண்டேயிருக்கும். அந்த எதிர்காலச் சோலை எங்களுக்கு வேண்டிய பயன்களை விளைவிக்கும். பாசம் என்கிற நூலின் தொடரறாமல் வந்த வாசமலர்களின் கூட்டம். நீங்கள் ஆடிப்பாடி மகிழும் அழகில் மலர்வது வாழ்க்கை பூந்தோட்டமாக அமைகிறது. முத்தமிழும் ஒன்றாகக் கூட்டி களத்திலே நின்று வெற்றிச் சிந்து பாடவேண்டும். அந்த இனியநாளின் நினைவுகள் எந்தநாளும் மாறாது வாழ்க்கையில் இன்பத்தையூட்டும்.

நல்ல குடும்பம் வாழ்கிற வீடு கோவிலைப் போன்றது. அந்தக் கோவிலில் ஏற்றி வைத்த வெள்ளி விளக்குகள் நீங்கள். அந்தக் குடும்பம் திகழொளி வீசும் வண்ணம் உங்கள் நன்னடத்தையால் ஒளிமயமாக்குங்கள். வீடு மட்டுமல்ல நாடும் உங்களை நம்பித்தான் இருக்கிறது. நீங்களெல்லாம் உடன்பிறப்புகள். எந்தத் துயர் வரினும் தாங்குகிற உறுதியோடு உள்ளமிருந்தால், இந்தநாளின் உறுதி எந்தநாளும் மாறாது. வெற்றி நிச்சயம் நாளை நமதே!இத்தகைய நற்றமிழ் பாடல்களைப் பாடி மகிழ்வதும் அவைகூறும் கருத்துகளை மனதிருத்திக் கொள்வதும் பயன்தரும் பொழுதுபோக்காகும். பாடிக் களிப்போம்.

படம் - ஆயிரத்தில் ஒருவன்

அதோ அந்த பறவை போல வாழவேண்டும்
இதோ இந்த அலைகள் போல ஆடவேண்டும்
ஒரே வானிலே ஒரே மண்ணிலே
ஒரே கீதம் உரிமை கீதம் பாடுவோம்.

(அதோ அந்த)

காற்று நம்மை அடிமையென்று விலகவில்லையே
கடல் நீரும் அடிமையென்று சுடுவதில்லையே
காலம் நம்மை விட்டுவிட்டு நடப்பதில்லையே
காதல் பாசம் தாய்மை நம்மை மறப்பதில்லையே

(ஒரே வானிலே)

(அதோ அந்த)

தோன்றும் போது தாயில்லாமல் தோன்றவில்லையே
சொல்லில்லாமல் மொழியில்லாமல் பேசவில்லையே
வாழும்போது பசிஇல்லாமல் வாழவில்லையே
போகும் போது வேறு பாதை போகவில்லையே

(ஒரே வானிலே)

லலாலா லலாலா லலாலா........
கோடி மக்கள் சேர்ந்து வாழவேண்டும் விடுதலை
கோயில் போல நாடு காண வேண்டும் விடுதலை
அச்சம் இன்றி ஆடிப்பாட வேண்டும் விடுதலை
அடிமை வாழும் பூமி எங்கும் வேண்டும் விடுதலை

(ஒரே வானிலே)

படம் - உலகம் சுற்றும் வாலிபன்

வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்
இப்படை தோற்கின் எப்படை வெல்லும்

(நமது வெற்றியை நாளை ....)

நீதிக்கு இது ஒரு போராட்டம்
இதை நிச்சயம் உலகம் பாராட்டும்
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ....

வல்லோர்கள் சுரண்டும் பொல்லாத கொடுமை
இல்லாமல் மாறும் ஒரு செய்தி
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ....
அந்த இல்லாமை நீங்கி எல்லோரும்
வாழ இந்நாட்டில் மலரும் சம நீதி
நம்மை ஏய்ப்பவர் கையில் அதிகாரம்
இருந்திடும் என்னும் கதை மாறும்
நம்மை ஏய்ப்பவர் கையில் அதிகாரம்
இருந்திடும் என்னும் கதை மாறும்

(நம்மை ஏய்ப்பவர்...)

ஆற்றலும் அறிவும் நன்மைகள் ஓங்க
இயற்கை தந்த பரிசாகும்

(ஆற்றலும் அறிவும்...)

இதில் நாட்டினைக் கெடுத்து நன்மையை அழிக்க
நினைத்தால் எவர்க்கும் அழிவாகும்
நல்லதை வளர்க்கும் அறிவாற்றல்
அல்லதை நினைப்பது அழிவாற்றல்
நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்
இப்படை தோற்கின் எப்படை வெல்லும்

வினாக்கள்

1. அன்பில் உயர்ந்த அன்பு யாருடைய அன்பு?
2. வண்ணத்தமிழ்ச்சோலை? என்ற சொற்றொடரை விளக்குக.
3. பிள்ளை வளர்ப்பில் தாயின் சிறப்புகளை விளக்குக.
4. உற்றவர்க்காய் வாழுகிற உள்ளம் யாருடைய உள்ளம்?
5. தமிழர் உழவைப் போற்றியமைக்கான கரணியங்களை வினக்குக.
6. நெல்மணியாய் விளைந்திருப்பது என்ன?
7. சமரசம் உலாவுகிற இடம் எது? ஏன்?
8. நிலைமாறினால் குணம் மாறுவான்? விளக்குக.
9. ஒவ்வொரு பூவும் சொல்வது என்ன?
10. வாழ்வில் வெற்றிபெற எது வேண்டும்?
11. வீடு என்னும் கோவிலில் வைத்த வெள்ளித் தீபங்கள் என்று யாரைச் சொல்லப்படுகிறது. ஏன்?
12. நாளை நமதாக இளையதலைமுறையினர் எவ்வாறு செயற்பட வேண்டும்?

மொழிவளம் - மொழிபெயர்த்தல்

மொழிபெயர்த்தல் என்றால் ஒரு மொழியில் உள்ள செய்தியை இன்னோர் மொழிக்கு மாற்றுதலாகும். உலகமயமாக்கல் என்ற கொள்கை பரவியுள்ள இந்நாளில், மொழிபெயர்த்தல் மிகமிக அகத்தியமானதாகும். அதுவொரு மாபெரும் கலையாகவும் தொழிற்றுறையாகவும் இன்று வளர்ந்துள்ளது. உலகமொழிகள் அனைத்தையும் மொழிபெயர்க்க வல்ல நிறுவகங்கள் இன்று செயல்படுகின்றன. எனவே, மொழிபெயர்ப்புக் கலை பற்றி நாம் விளக்கமாகக் கற்கவேண்டியதில்லை. எமக்குத் தேவையான அளவிற்கு செம்மையான மொழிபெயர்ப்பு எவ்வாறு அமையும் என்பதை அறிவோம்.

தாய்மண்ணில் விளைந்த, விளைகிற அரசியல் அரட்டுகோன்மை கரணியமாக உலகின் பல்வேறு பகுதிகளிலும் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு இன்றியமையாத திறனாக மொழிபெயர்த்தல் தேவைப்படுகிறது. தாம் வாழும் நாட்டின் மொழியில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள், தாம் வாழும் நாட்டு மக்களுக்கு, தமிழீழ மக்களுக்கு நிகழும் அவலங்களை எடுத்துக் கூறவும் உலகின் கவனத்திற்கு அவற்றைக் கொண்டு செல்லவும் மொழிபெயர்த்தல் தேவைப்படுகிறது. அதற்கும் மேலாக, தாம் வாழும் நாடுகளில் காணப்படும் குமுகாய விழுமியங்களை தமிழினத்திற்குள் கொண்டு வரவும், தமிழரது மரபொழுக்கு (கலாச்சாரம்) பண்பாட்டு விழுமியங்களை அங்கு வெளிப்படுத்தி, எம்மின மேன்மையை எடுத்துக்காட்டவும் மொழிபெயர்ப்பு மிகமிகமிகத் தேவையானது. அவ்வகையில் மொழிபெயர்த்தல் கலையில் நாம் கையாளவேண்டிய முகமைக் கருதுகோள்களை தெரிந்துகொள்வோம்.

மொழிபெயர்க்கும்போது பின்வருனவற்றைக் கவனத்தில் கொள்க.

1. முதலில் மொழிபெயர்க்க வேண்டிய பகுதியை நன்கு வாசித்து, அதன் பொதுக்கருத்தை மனத்திருத்துக.
2. அப்பொதுக்கருத்தை மாற்றவேண்டிய மொழியில் எழுதுக.
3. இரண்டையும் ஒப்புநோக்கிச் சரி செய்க.
4. மொழிபெயர்ப்பின்போது கருத்தோட்டம் சரியாகத் தொடர்கிறதா என்பதை உறுதிசெய்க.
5. மொழிபெயர்ப்பில் மூலப்பகுதியிலுள்ள எடுத்துக்காட்டுகள் மேற்கோள்கள் தவறாமல் பெயர்ப்பிலும் இடம்பெறல் வேண்டும். ஏனெனில், அவை கூறும் கருத்தை அழுத்திச் சொல்வதாக அமைவன.
6. இலக்கிய மொழிபெயர்ப்புகளில் சொல்லுக்குச் சொல் நேர்ப்பொருளாக மொழிபெயர்க்க வேண்டியதில்லை. ஏனென்றால், மொழிக்குமொழி மொழியியல்பும் மொழியிலக்கணமும் வேறுபட்டிருக்கும். எனவே, மூலத்தின் கருத்து மாறுபடாமல் மாற்றவேண்டிய மொழிக்கேற்ப மாற்றுக. ஆனால், அறிவியல், வாய்ப்பாடுகள் போன்ற மொழிபெயர்ப்புகள் நேரடி மொழிபெயர்ப்பாக அமைவதே நன்று.

7. சிலமொழிகளில் ஒன்றில் உள்ள சொல்லமைவிற்கு ஏற்ப மற்றொன்றில் சொல்லிருப்பதில்லை. அவ்வாறான சிக்கல் தோன்றும்போது, ஒரு சொல்லிற்குப் பகரமாக (பதிலாக) ஒருசொல்லியத்தையே பயன்படுத்தலாம்.
8. இன்றைய இணையத்தளங்களில் மொழிமாற்றம் செய்வதற்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன. எனினும், இவற்றினால் சிறந்த மொழிபெயர்ப்பை பெறமுடியாதுள்ளது. அதனால், சொற்பிழைகள் ஏற்படும் கருத்துமாற்றங்கள் மொழிபெயர்ப்பைத் தடம் மாற்றிவிடும். அதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.
9. எவ்வாறேனும் மூலத்தின் கருத்து மாறுபடாமல் மொழிபெயர்த்தல் வேண்டும்.

இலக்கணம் - இடைச்சொற்கள்

இடைச்சொற்கள் என்பவை தனித்துநின்று பொருள் தராச்சொற்கள். பெயர்ச்சொல்லுடனோ அல்லது வினைச்சொல்லுடனோ இணைந்தே பொருளுணர்த்துவன. இவை சொல்லியத்தின் பொருளை வேறுபடுத்தி உணர்த்து வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இன்றைய மொழிவழக்கில் பயின்றுவரும் இடைச்சொற்கள் பின்வருமாறு.

வேற்றுமையுருபுகள், உவமையுருபுகள், விகுதிகள், சாரியைகள், இடைநிலைகள், தம்பொருள் உணர்த்துவன, உணர்ச்சிக்குறிப்புகள், சொல்லிய இணைப்புகள், ஒலிக்குறிப்புகள் என ஒன்பது வகைய.

விளக்கங்களை கற்றல் இலக்கண நூலில் காண்க.

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

வளர் தமிழ் 12
பாடநூல்

வளர் தமிழ் 11
பாடநூல்

வளர் தமிழ் 10
பாடநூல்

வளர் தமிழ் 9
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 8
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 7
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 6
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 5
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 4
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 3
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 2
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 1
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் பாலர் நிலை
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் மழலையர் நிலை
பாடநூல் | எழுதுதல்